
பொருளடக்கம்



قُلْ إِنْ كُنْتُمْ تُحِبُّونَ اللّٰهَ فَاتَّبِعُونِي يُحْبِبْكُمُ اللّٰهُ

அண்ணல் நபியின் அழகிய வழிமுறைகள்

صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
புத்தக வியாபாரம்
10, ஹைரோட், திருவல்லிக்கேணி, சென்னை-600 005.
Ph: 844536, 844061

தொகுப்பாசிரியர் :

தீ. அ. தாவுத் ஷரீப்

வெளியீடு :

இஸ்லாமிய பதிப்பகம்
77, செம்புதாஸ் தெரு, முதல் மாடி,
மண்ணடி, சென்னை-600 001.

மார்ச்—1992

ஹதியா : ரூ. 9-00

نَحْمَدُهٗ وَنُصَلِّي عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ

அண்ணல் நபியின் அழகிய வழிமுறைகள்

அல்லாஹ்விடம் நாம் கலிமாவின் வாயிலாக ஓர் ஒப்பந்தம் செய்துள்ளோம். அதாவது 'யா அல்லாஹ்! நீ என்னைப் போஷிக்கும் எஜமானன். நான் உனது அடிமை.' அவன் படைத்தவன் நாம் அவனுடைய படைப்புகள் என்ற ஒரு தொடர்பைத் தவிர்த்து அல்லாஹ்வுக்கும் நமக்குமிடையில், தந்தை மகன், அண்ணன் தம்பி போன்ற எந்த உறவு முறையும் கிடையாது. அவன் அடக்கியாளும் அரசன், நாம் அவனுடைய அடிமைகள். நாம் அல்லாஹ்வின் உண்மை அடிமையாவதில்தான் நம்முடைய உயர்வின், வெற்றியின் இரகசியம் அடங்கியுள்ளது. எனவேதான் ஹஜ்ரத் முஜத்திதுல் அல்பதானி (ரஹ்) 'பதவிகளில் உயர்ந்தது அப்தியத்தின் பதவி' எனக் கூறினார்கள். நபி (ஸல்) அவர்கள்தாம் படைப்புகள் அனைத்திலும் மேலானவர்கள். அன்னாரின் நூரைக் கொண்டே படைப்புகள் அனைத்தையும் அல்லாஹ் படைத்தான். மிஃராஜ் பயணம் மற்றெந்த படைப்பிற்கும் அளிக்கப்படாது நபியவர்களுக்கு மட்டும் அளிக்கப்பட்ட கண்ணியமாகும். இதனை குர்ஆனிலே குறிப்பிடும்போது ''சுப்ஹானல்லதீ அஸ்ரா பி அப்திஹி— அல்லாஹ் மிகப் பரிசுத்தமானவன். அவன் (முஹம்மது [ஸல்] என்னும்) தன் அடியாரை (கஃபாவாகிய) சிறப்புமிக்க பள்ளியிலிருந்து மஸ்ஜிதுல் அக்ஸாவிற்கு ஓர் இரவில் அழைத்துச் சென்றான்.'' இங்கு அண்ணல் நபி (ஸல்) அவர்களை 'அடியார்' என்றே அல்லாஹ் கூறினான்.

பொருளடக்கம்

4

ஒரு முறை ஷைகு அமீனுத்தீன் என்னும் பெரியார் இமாம் அபுல் ஹசன் ஷாதலி (ரஹ்) அவர்களிடம் 'தாங்கள் ஒரு குதுபாக இருக்கின்றீர்கள்!' எனக் கூறியபோது அவர்கள் 'இல்லை! நான் அல்லாஹ்வின் ஓர் அடிமைதான்!' என மறுமொழி அளித்தார்கள்.

மனிதன், 'அஷ்ரபுல் மக்லுகாத்' எனும் உயர்ந்த படைப்பு. ஆனால் அவனுடைய உயர்வு அல்லாஹ்வுக்கு முன்பு தாழ்ந்து பணிவதிலே மறைந்துள்ளது. தொழுகையில் சஜ்தாவின் சமயம் அடியான் அதைவிட தாழ முடியாத, உடலை அதைவிட குறுக்கி சுருக்க முடியாத அளவுக்கு தன்னைத் தாழ்த்தி, தன் கௌரவத்திற்கு அடையாளமென அவன் கருதும் தன் நெற்றியையும், மூக்கையும் மண்ணோடு சேர்த்து, 'சுப்ஹான ரப்பியல் அஃலா' என ஓதும்போது தான் அல்லாஹ்வை மிகவும் சமீபித்து விடுகிறான். தனக்கு முன் தாழ்ந்து பணிபவரை அல்லாஹ் உயர்த்தாமல் விடுவதில்லை. எனவே மனிதன் அல்லாஹ்வுக்கு முன்பாக தாழ்ந்து பணிவதிலேயே அவனுடைய உயர் அந்தஸ்து பொதிந்துள்ளது.

'லா இலாஹ இல்லல்லாஹ்' என்பதின் அடிப்படையில் நாம் அல்லாஹ்வின் அடிமைகள். அடிமை என்ற முறையில் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு இதாத் செய்வது (அடிபணிவது) அவசியம். 'முஹம்மதுர் ரசூலுல்லாஹ்' என்பதின் அடிப்படையில் நாம் ரசூலுல்லாஹி (ஸல்) அவர்களின் உம்மத்தினர் ஆவோம். உம்மத்தினர் என்ற முறையில் நபி (ஸல்) அவர்களின் 'இத்திபா' என்னும் பின்பற்றுதல் அவசியம். ஏனெனில் அல்லாஹ்வுக்கு முழுமையாக அடிபணிவதின் இலக்கணத்தை நபி (ஸல்) அவர்கள் நமக்குக் கற்றுத் தந்தார்கள். குர்ஆன் ஷரீப் அல்லாஹ்வின் கட்டளைகளின் மஜ்முஆ (கூட்டு) என்றால் நபியவர்களின் சுன்னத்துகள் அக்கட்டளைகளுக்கு அடிபணிவதின் மஜ்முஆவாகும். ஏனெனில் ஹஜ்ரத் ஆயிஷா

(ரலி—அன்ஹா), ''நபி (ஸல்) அவர்களின் வாழ்வு குர்ஆனாகவே இருந்தது'' எனக் கூறினார்கள். மேலும் ''எவன் (அல்லாஹ்வின்) தூதருக்கு முற்றிலும் வழிப்படுகின்றானோ நிச்சயம் அவன் அல்லாஹ்வுக்கே வழிப்பட்டான்'' எனக் குர்ஆன் கூறுகின்றது. ஒரு மனிதன் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு அடிபணிவதில் நபி (ஸல்) அவர்களின் சுன்னத்தான வழிமுறைகளை பின்பற்றாதவரை உண்மையான அல்லாஹ்வின் அடியான் ஆக முடியாது. அதாவது 'இதாத்', 'இத்திபா' ஆகிய இரு உயர் தன்மைகளும் ஒரு சேர இல்லாமல் ஒருவர் அல்லாஹ்வின் உண்மை அடியார் ஆக முடியாது என்பது உறுதி. அல்லாஹ்வின் நேசத்தையும் நெருக்கத்தையும் அடைய முடியாது. இதனையே குர்ஆனில்,

قُلْ إِنْ كُنْتُمْ تُحِبُّونَ اللّٰهَ فَاتَّبِعُونِي يُحْبِبْكُمُ اللّٰهُ.

என அருளப்பட்டுள்ளது. [கருத்து: (நபியே! உமது உம்மத்தினருக்கு கூறிவிடுங்கள்) நீங்கள் மெய்யாகவே அல்லாஹ்வை நேசிப்பவர்களாயிருந்தால் நீங்கள் என்னைப் பின்பற்றுங்கள். அல்லாஹ் உங்களை நேசம் பாராட்டுவான். (3 : 31)]

எனவே அல்லாஹ்வை நேசிப்பதாக கூறக் கூடியவர் நபி (ஸல்) அவர்களின் வழிமுறைகளை பின்பற்றுவது அவசியம். ஏனெனில் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் இத்திபாவை தன் நேசத்திற்கு அடையாளமென அல்லாஹ் கூறிவிட்டான்.

'துர்ருல் மன்சூரில்' பல ரிவாயத்துகளில் வருவதாவது: தங்களுக்கு அல்லாஹ்வுடன் நேசம் இருப்பதாக ஜனங்கள் தவ்வாச் செய்தனர். இதன் மீதே இவ்வசனம் இறங்கிற்று. ஹஜ்ரத் இப்னு உமர் (ரலி) அறிவிப்பது: ''நான் கொண்டு வந்த தீனுக்கு முழுமையாக அடிபணியாதவரை உங்களில் யாருடைய ஈமானும் முழுமைப் பெறாது'' என நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்.

ஹஜ்ரத் அபூ தர்தா (ரலி) அவர்கள் இவ்வசனத்தின் விரிவுரையில் ''என்னைப் பின்பற்றுங்கள்-நன்மையான செயல்களிலும், தக்வாவிலும், பணிவிலும், தன் நப்ஸை கேவலமாக மதிப்பதிலும்'' என்ற நபி (ஸல்) அவர்களின் அருள் வாக்கை அறிவிக்கிறார்கள். இதே ஆயத்தின் தப்ஸீரில் ஹஜ்ரத் ஹஸன் பஸ்ரீ (ரஹ்) அவர்கள் ''அல்லாஹ்வின் நேசத்திற்கான அடையாளம் சுன்னத்துகளின் இத்திபாவாகும்'' என அறிவிக்கிறார்கள்.

எல்லாவற்றை விட சுன்னத்துகளைப் பின்பற்றுவதுதான் அதிக நன்மை பயக்கக் கூடியது. தனக்கு அல்லாஹ்வின்மீது அன்பு உள்ளது என்பதற்கு சான்றாக சமர்ப்பிக்க அதிக ஆதாரமுள்ளது. அவனுடைய அன்பைக் கேட்டுப் பெற தகுதியும் உரிமையும் தரவல்லது.

ஆனால் எவ்வாறு இவ்விஷயம் மிக முக்கியமானதோ அவ்வாறே இதனை அடைய மேற்கொள்ளும் தியாகமும் கடுமையானது. ஒவ்வோர் அமலிலும் சுன்னத்துகளை முழுமையாக பின்பற்றுவது கடும் தியாகத்தின் பாற்பட்டது. ஏனெனில் இந்த இலட்சியத்தை அடையும் பாதையில் பல சோதனைகளும் குறுக்கீடுகளும் தடைகளும் நிறைந்துள்ளன. சில சமயம் தன் குடும்ப சூழ்நிலை, சில இடங்களில் தன் பழக்க தோஷம், சில இடங்களில் குடும்ப சம்பிரதாயம், சில வேளைகளில் நட்பும், உறவும், சில இடங்களில் அந்தஸ்தும், பதவியும், சமுதாய சூழ்நிலையும் சுன்னத்துகளை பின்பற்றுவதில் கடும் தடையாக இருக்கும். எனினும் உறுதியான ஈமானும், உரமுள்ள நெஞ்சமுடையவரே இக்கடின பாதையைக் கடந்து வெற்றி காண்பர்.

அல்லாஹ்வுக்கு அடிபணியும் இதாத்தைக் கொண்டு மனிதனிலிருந்து கமாலியாத் என்னும் அற்புதங்கள் வெளிப்படும். நபி (ஸல்) அவர்களின் சுன்னத்துகளுக்கு வழிபடும் இத்திபாவைக் கொண்டு அக்லாகியாத் என்னும் உயர் பண்பாடுகள் மனிதனிலிருந்து வெளிப்படும். சர்க்கஸில் சிங்கம், புலி, யானை, கரடி போன்ற துஷ்டமிருகங்கள் கூட அவைகளை

ஆட்டுவிக்கும் ஒரு மனிதனின் கட்டளைக்கு அடங்கி 'இதாத்' செய்யும்போது அவைகளால் ஆச்சரியப்படத்தக்க அற்புதங்களை நிகழ்த்த முடிகிறது. அதனை பல்லாயிரம் பேர் பணம் கொடுத்து வேடிக்கை பார்க்கின்றனர். ஐயறிவுள்ள வன விலங்குகள் மனிதனின் கட்டளைக்கு அடிபணியும்போதுஅவற்றிலிருந்து அற்புதங்கள் வெளிப்படுகின்றனவென்றால், ஆறறிவுள்ள மனிதன் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு இதாத் செய்யும்போது மனிதனிலிருந்து அற்புதங்கள் ஏன் வெளிப்படாது? ஹஜ்ரத் மூஸா (அலை) அவர்களின் அஸா கோல் அல்லாஹ்வின் கட்டளைப் பிரகாரம் பயன்பட்டபோது அதிலிருந்து பல அற்புதங்கள் வெளிப்பட்டன. அவர்கள் தம் இஷ்டப்படி அக்கோலை பல்லாயிரம் முறை தரையில் போட்டிருக்கலாம். ஆனால் அல்லாஹ்வின் கட்டளைப்படி அவர்கள் கீழே போட்ட போது அது ஒரு பெரிய பாம்பாக மாறியது. உயிரற்ற ஜடவஸ்து உயிருள்ளதாக மாறியது. சக்தியற்ற பிரம்பு சக்தியுள்ள மலைப்பாம்பாக மாறியது. சில ஆடுகளுக்கு இலை, தழை பறிக்க பயன்பட்ட அந்த தடி, பல லட்ச பனீ இஸ்ராயீல்களுக்கு உணவும் நீரும் பாதுகாப்பும் கிடைக்க காரணமானது. தடி போன்ற ஒரு ஜடவஸ்து அல்லாஹ்வின் கட்டளைக்கு தக்கபடி பயன்பட்டபோது அதிலிருந்து பல கமாலியாத்துகள் வெளிப்பட்டன.

கைபர் யுத்தத்தின்போது ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்கள் கைபர் கோட்டையின் பெரிய இரும்புக் கதவை தூக்கி எறிந்து திறந்து விட்டார்கள். பல யானைகள் கட்டி இழுத்தாலும் அதனைத் திறக்க முடியாது. நபி (ஸல்) அவர்களின் கட்டளைப் படி செயல்பட்டதால் அந்த அற்புதத்தை நிகழ்த்த முடிந்தது.

ஒரு முறை மன்னர் கஜ்னவீ (ரஹ்) தம்முடைய மந்திரி பிரதானிகளுக்கு தம் அடிமை அய்யாஸின் மீது தமக்கு அதிக அன்பு இருப்பதின் காரணத்தை தெளிவாக்க நாடினார். ஒரு விலைமதிக்க முடியாத மாணிக்கக் கல்லை மந்திரி பிரதானிகளுக்கு முன்னால் வைத்து அதை உடைக்குமாறு கட்டளை

யிட்டார். மந்திரி பிரதானிகள் இவ்வளவு உயர்ந்த மாணிக்கத்தை உடைப்பது நஷ்டமல்லவா என்று யோசித்த வண்ணம் நின்றிருந்தனர். உடன் அரசர் அடிமை அய்யாஸிடம் அதை உடைக்குமாறு கூறியதும் சற்றும் தயக்கமின்றி அவன் அதை உடைத்து சுக்கு நூறாக்கி விட்டான். இதற்கான காரணம் அவனிடம் கேட்கப்பட்டபோது ''அரசரின் ஆணைக்கு முன்பாக இந்த மாணிக்கக் கல்லுக்கு என்ன மதிப்புள்ளது?'' என மறுமொழி பகர்ந்தான்.

இதே போன்று அல்லாஹ்வின் கட்டளைக்கு முன்பாக ஏழு வானமும் ஏழு பூமியும் எந்தவித மதிப்பும் அற்றவை. அல்லாஹ்வின் பார்வையில் அவற்றின் மதிப்பு ஒரு கொசுவின் இறக்கைக்குக் கூட சமமானதல்ல. மண்ணும் பொன்னும் ஒருவரின் பார்வையில் சமமாகாதவரை அல்லாஹ்வின் கட்டளையின் மதிப்பும் அவருக்கு தெரியவராது. ஏனெனில் அல்லாஹ்வின் நம்பிக்கையும் உலக வஸ்துக்களின் நம்பிக்கையும் ஒன்று சேருவன அல்ல. எவ்வாறு நீரும் நெருப்பும் ஓரே இடத்தில் சேர்ந்திருக்க முடியாதோ, பஞ்சும் நெருப்பும் ஒன்று சேர்ந்திருக்க முடியாதோ அவ்வாறே வஸ்துக்களின் நம்பிக்கையும் அல்லாஹ்வின் நம்பிக்கையும் அடியானின் உள்ளத்தில் ஒன்று சேர்ந்திருக்க முடியாது. வஸ்துக்களின் மதிப்பு மனிதனின் உள்ளத்தில் இல்லாமலாகி விடும் பட்சத்தில்தான் அல்லாஹ்வின் கட்டளைகளின் மதிப்பு தெரியவரும். நபி (ஸல்) அவர்களின் சுன்னத்துகளின் மதிப்பு இவ்வுலகம் அனைத்தை விட மேலானது. ஏனெனில் உலகமும் சர்வமும் அவர்களின் நூரிலிருந்து படைக்கப்பட்டவை. ஆனால் சுன்னத்துகளோ அன்னாரின் பொன்னான உடலிலிருந்து வெளிப்பட்டவை. எனவே ஒவ்வொரு சுன்னத்தும் ஏழு வானம் ஏழு பூமியைக் காட்டிலும் அதிக மதிப்புள்ளவை.

ஐந்து இருட்டுகள் உள்ளன. அவற்றிற்கு ஐந்து ஒளிகள் இருக்கின்றன. உலகம் ஓர் இருட்டு, அதன் ஒளி தக்வா. கப்ரு ஓர் இருட்டு, அதன் ஒளி லாஇலாஹ இல்லல்லாஹ்.

மஹஷர் ஓர் இருட்டு, அதன் ஒளி நல்ல அமல்கள். புல்சி ராத் ஓர் இருட்டு, அதன் ஒளி எகீன்.

ஆகவே உலகமும் இருட்டு, அதன் நம்பிக்கைகளும் இருட்டானவை. ஹஜ்ரத்ஜீ மௌலானா ஷா முஹம்மது யூசுப் சாஹிப் (ரஹ்) அவர்கள் கூறினார்கள் : ஒரு மனிதன் இருட்டில் மல ஜலம் கழிக்கச் சென்றான். அங்கு இரண்டு செங்கல்கள் கிடந்தன. அவற்றின் மீது உட்கார்ந்து மல ஜலம் கழித்து வந்து விட்டான். மறு நாள் காலை சூரிய வெளிச்சத்தில் பார்த்தால் அச்செங்கல்கள் தங்க கட்டிக ளாக இருந்தன. அவற்றை தன் கையால் சுத்தப்படுத்தி தன் நெஞ்சோடு அணைத்து எடுத்துச் சென்றான். அதுபோல் ஹிதாயத்தின் ஒளி உள்ளத்தில் வரப்பெற்றவன் சுன்னத்து களின் மதிப்பை உணர்ந்து அவற்றை தன் நெஞ்சோடு அணைத்துக் கொள்வான்.

சுன்னத்துகளை தம்மோடு அணைத்துக் கொண்டவரிட மிருந்து உயர்ந்த பண்பாடுகள் வெளிப்படுவது திண்ணம். ஏனெனில் அல்லாஹு தஆலா தன்னுடைய திருமறையில், ''(நபியே!) நிச்சயமாக நீர் மகத்தான நற்குணங்கள் உடைய வராகவே இருக்கின்றீர்'' (68 : 4) என்றும், மற்றோர் இடத் தில், ''(நபியே!) கடுகடுப்பானவராகவும், கடின குணமுள்ள வராகவும் நீர் இருந்திருப்பின் உம்மிடமிருந்து அவர்கள் வெருண்டோடி இருப்பார்கள்'' (3 : 159) என்றும் அருளி யுள்ளான்.

சுன்னத்துகளிலெல்லாம் பெரிய சுன்னத் 'தஃவதே இலல்லாஹ்' என்னும் அல்லாஹ்வின் பக்கம் அழைக்கும் தப்லீகின் புனிதப் பணியேயாகும். இதனை மஹா சுன்னத் என்று ஹஜ்ரத் மௌலானா இல்யாஸ் (ரஹ்) கூறினார்கள். அல்லாஹு தஆலா திருமறையில்''(நபியே!) நீர் கூறுவீராக! இதுவே என்னுடைய வழி. நான் (உங்களை) அல்லாஹ்வின் பக்கம் தெளிவான ஆதாரத்துடன் அழைக்கின்றேன். நானும் என்னைப் பின்பற்றியவர்களும் (அவ்வாறு அழைக்கக் கூடியு

வர்களாக) இருக்கிறோம்.'' என அருள்கின்றான். எனவே நபி (ஸல்) அவர்களின் இத்திபா செய்வதாக யாரெல்லாம் தஃவா செய்கிறார்களோ அவர்கள் தஃவதின் வேலையை செய்வது அவசியம் என்பதை இந்த வசனம் உணர்த்துகின்றது. அதாவது தஃவத் தப்லீக் இல்லாமல் நபியவர்களின் இத்திபா பூர்த்தியாவதில்லை.

தஃவத்தைக் கொண்டு ஈமான் உருவாகிறது. எனவே தஃவத்தின் அளவுதான் ஈமானின் அளவு. ஈமானின் அளவே அமல்கள் உருவாகும். அமலின் அளவே அக்லாக் என்னும் நற்பண்புகள் உருவாகும். நற்பண்புகள் உருவானால் சுயவாழ்வு சீர்திருந்தும். தனிப்பட்ட வாழ்வு சீர் திருந்திய பிறகு மாஷிரத் என்னும் சமுதாய வாழ்வு சீர்பெறும். சமுதாய வாழ்வு திருந்தி விட்டால் பிறகு ஹிதாயத் பரவ ஆரம்பித்து விடும்.

தீன் என்ற மரத்திற்கு தஃவத் வேர் ஆகும். ஈமான் தண்டு, இபாதத்துகள் கிளைகள், மாஷிரத் இலை, தழை, பூ போன்றவை. அக்லாக்தான் பழம். பழத்தின் பெயரால்தான் மரம் அழைக்கப்படும். பூ இலை தழையைக் கொண்டு மரத்தின் பெயர் வைக்கப்படுவதில்லை. பழமுள்ள மரத்தை நாடியே பறவைகள் பறந்துவரும். மனிதர்களுக்கு அம்மரத்தால் நிழலும் பழமும் கிடைக்கின்றன. பழமுள்ள மரத்தின் மேல் கல்லடித்தால் அம்மரம் திரும்ப அடிப்பதில்லை. மாறாக பழம் தரும். உண்மையான முஃமினின் உதாரணமும் பழமுள்ள மரத்தைப் போன்றதே. தமக்கு துன்பம் விளைவித்தவர்களுக்கும் தம்முடைய உயிர் பொருளால் நற்பயனே அளிப்பார். இத்தகைய செயலால்தான் ஒருவர் உயர் பதவி அடைய முடியும். 'தாம் விரும்புவதை தம்முடைய சகோதரருக்கும் விரும்பாதவரை ஒருவர் உண்மையான முஃமின் ஆக முடியாது' என ஹதீஸில் கூறப்பட்டுள்ளது.

மிஷ்காத் ஷரீபில் முக்தாம் இப்னு மஅத் யக்ரப் (ரலி) அவர்களின் வாயிலாக நபி (ஸல்) அவர்களின் பொன் மொழி அறிவிக்கப்படுவதாவது : எனக்கு குர்ஆன் அருளப்

பட்டது. மேலும் குர்ஆனுக்கு சமமான விஷயமும் (அதாவது சுன்னத்துகளும்) கொடுக்கப்பட்டன. வெகு சமீபத்தில் வயிறு நிரம்ப சாப்பிட்டு விட்டு தம்முடைய திண்டு தலையணை மீது சாய்ந்தவர்களாக ''நீங்கள் குர்ஆனை மட்டும் எடுத்துக் கொள்ளுங்கள். அதில் எது ஹலாலென ஏவப் பட்டதோ அதனை ஹலாலென எண்ணுங்கள். எதனை ஹராமென சொல்லப்பட்டதோ அதனையே ஹராமாக எடுத்துக் கொள்ளுங்கள்'' என்று கூறும் மனிதர்களும் தோன்றுவார்கள்.

எனினும் நபி (ஸல்) அவர்கள் ஹராம் என அருளியவை அல்லாஹ் ஹராம் எனக் கூறியது போன்றதே. 'வயிறு நிரம்ப' எனக் கூறியதற்கான காரணம் வயிறு புடைக்க சாப்பிட்ட நிலையில்தான் இம்மாதிரியான உதவாக்கரை வீண் விஷயங்கள் ஒருவனுடைய சிந்தனையில் உருவாகும் என்பதாலேயே.

ஹஜ்ரத் அர்பாழ் (ரலி) அவர்களின் வாயிலாக அறிவிக்கப்படுவதாவது : ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் தொழவைத்தார்கள். பின்னர் எங்கள் பக்கம் திரும்பி கருத்துசெறிவுள்ள உயர்ந்த உபதேசம் ஒன்றை புரிந்தார்கள். அதைக் கேட்டு எங்கள் உள்ளமெல்லாம் உருகி கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. அப்பொழுது ஒருவர் 'நாயகமே! இது பிரிவினையின்போது செய்யப்படும் உபதேசம் போன்றல்லவா இருக்கிறது! எனவே எங்களுக்கு நஸீஹத் செய்வீராக!' என்றார். அதற்கு நபியவர்கள் ''எனது சுன்னத்துகளையும் குலபாயெ ராஷிதீன்களின் சுன்னத்துகளையும் கட்டாயம் பற்றிப் பிடியுங்கள். மேலும் மார்க்கத்தில் புதுமையான விஷயங்களை விட்டு ஒதுங்கி தவிர்ந்திருங்கள். ஏனெனில் ஒவ்வொரு புதுமையும் பித்அத் ஆகும். ஒவ்வொரு பித்அத்தும் வழி கேடாகும்'' என அருளினார்கள்.

நபி (ஸல்) அவர்களின் பரிசுத்த வாக்காவது : எனக்குப் பின் விடுபட்டுப்போன ஏதேனுமொரு சுன்னத்தை எவர்கள் உயிர்ப்பிப்பார்களோ அவர்களுக்கு அதன் மீது

அமல் செய்பவர்களுக்கு அளிக்கப்படும் அளவே நன்மைகள் அளிக்கப்படும். ஆனால் அமல் செய்தவர்களின் நன்மைகளில் ஏதும் குறைவு செய்யப்படமாட்டாது. மேலும் ஒருவர் தீனில் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் பிரியமில்லாத ஏதேனுமொரு புதுமையை உற்பத்தி செய்தால் அவருக்கு அதன்மீது அமல் செய்பவர்களின் அளவு பாவம் கிடைக்கும். ஆனால் அவர்களுடைய பாவங்களில் ஏதும் குறைவு செய்யப்படமாட்டாது.

எனவே நபி (ஸல்) அவர்களின் அருள்வாக்கு ''எனது உம்மத் வழிகேட்டின் மீது ஒன்று சேராது. மேலும் அல்லாஹ் வின் உதவி ஜமாஅத்துடன் இருக்கிறது. எவன் ஜமாஅத்தை விட்டு விலகுவானோ அவன் நரகில் புகுவான்.'' என வந்துள்ளது.

நபி (ஸல்) அவர்கள் ''எனது சுன்னத்துடன் அன்பு பாராட்டியவர் என்னுடன் அன்பு பாராட்டியவரே ஆவார். எவர் என்னுடன் அன்பு பாராட்டினாரோ அவர் என்னுடன் சுவர்க்கத்தில் இருப்பார்'' என அருளியுள்ளார்கள்.

ஹஜ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களின் பரிசுத்த வாக்கினை அறிவிக்கின்றார்கள்: எவரேனும் உம்மத்தில் குழப்பங்கள் நிறைந்த காலத்தில் என்னுடைய சுன்னத்தின் மீது அமல் செய்தால் அவருக்கு நூறு ஷஹீதுகளின் நன்மைகள் அளிக்கப்படும்.

ஒரு ஹதீஸில் வருவதாவது: ''ஹஜ்ரத் மூஸா (அலை) அவர்களும் உயிரோடு இருந்தால், அவர்களுக்கும் என்னுடைய இத்திபா செய்வதைத் தவிர்த்து வேறுவழி இல்லை.''

இமாம் மாலிக் (ரஹ்) அவர்களின் முஅத்தாவில் முர்ஸலான ஹதீஸாக எடுத்து எழுதப்பட்டுள்ளதாவது: ''உங்களில் இரண்டு விஷயங்களை விட்டுச் செல்கிறேன். எதுவரை அவற்றை உறுதியாக பற்றிப் பிடித்திருப்பீர்களோ அதுவரை வழிதவற மாட்டீர்கள். அவற்றில் முதலாவது

அல்லாஹ்வின் வேதம்; மற்றது எனது சுன்னத்'' என நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்.

எவரேனும் பித்அத்தின் மனிதனொருவனை கண்ணியப் படுத்தினால் அவன் இஸ்லாத்தை இடித்து தரைமட்டமாக்கு வதற்காக உதவி புரிந்தவனைப் போன்றாவான் என அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அருளியுள்ளார்கள்.

இமாம் ஸுஹ்ரி (ரஹ்) அவர்களின் கூற்றாவது: சுன்னத்தை உறுதியாக பற்றிப் பிடிப்பது ஈடேற்றமாகும் என எங்கள் பெரியார்கள் கூறுவார்கள். மேலும் ஹஜ்ரத் இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் ''சுன்னத்துகள் நூஹ் (அலை) அவர்களின் கப்பலைப் போன்றவையாகும். எவர்கள் அதில் ஏறிக் கொள்வார்களோ அவர்கள் தப்பித்து விடு வார்கள். எவர்கள் அதில் ஏறாமல் இருந்து விடுவார்களோ அவர்கள் மூழ்கி நாசமாகி விடுவார்கள்.''

சுன்னத்துகளின் இத்திபாதான் அசலானது. ஒருவரை உரசி பரிட்சித்துப் பார்க்கப்பட வேண்டுமானால் அவரை இதே அடிப்படையில் உரசிப் பார்க்கப்படும். எம்மனிதர் சுன்னத்துகளை எடுத்து நடப்பதில் எவ்வளவு பேணுதல் காட்டுவாரோ அவ்வளவே அவர் அல்லாஹ்வின் நெருக்கம் பெற்ற நேசராக மாறுவார்.

இந்த நவநாகரீக நவீன பித்தர்களுக்கு இதன் வாசனை கூட போய் சேர்ந்திருக்காது. எம்மனிதன் சுன்னத்துகளை எடுத்து நடப்பதில் எவ்வளவு விலகி தூரமாக இருப்பானோ அவன் அல்லாஹ்வை விட்டும் அவ்வளவே விலகி தூரமாக இருப்பான். அவன் இஸ்லாத்தைப் பற்றிய சிந்தனையாளனாக, உலகம் வானம் பற்றிய சிந்தனையாளனாக மாறி விட்ட போதிலும் சரியே.

ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமியா (ரஹ்) அவர்கள் ஃபதாவா என்ற கிதாபில் எழுதுவதாவது: இறைநேசச் செல்வர்கள் இறைவேதத்தையும் சுன்னத்துகளையும் உறுதி யாக பற்றிப் பிடிப்பது அவசியம். அவர்களில் யாரும் குர்

ஆனுக்கும் சுன்னத்துக்கும் மற்றமாக தன் மனதில் தோன் றியது போல் செயல்படுவது ஒருக்காலும் ஒவ்வாது. இது பொதுவான நியதியாகும். இதன் மீது எல்லா அவ்லியாக் களும் ஒருமித்த கருத்துடையவர்களாக இருக்கின்றனர். இந்த கருத்துக்கு மாற்றம் செய்பவர் இறைநேசர்களில் உள்ளவர் அல்லர். அப்படி செய்பவன் ஒன்று காபிராக இருப்பான். அல்லது ஜாஹிலாக இருப்பான்.

ஷைகு அபூ சுலைமான் தாரானி (ரஹ்) கூறுகிறார்கள்: என் மனதில் சூபித்தனமான சிற்சில ஞானங்கள் உதிக் கின்றன. ஆனால் நான் அவற்றை இரண்டு சாட்சிகள் அல் லாது ஏற்பதில்லை. (அதாவது இறை வேதமும், சுன்னத்து களும்)

''எங்களுடைய இந்த இல்மு (தஸவ்வுப்) குர்ஆன், சுன்னத்துகளின் அடிப்படையில் உள்ளது. எவர் குர்ஆனையும் ஹதீஸையும் ஓதி உணரவில்லையோ அவருக்கு எங்களுடைய இந்த இல்மைப் பற்றி கருத்துத் தெரிவிக்க எந்த உரிமையும் கிடையாது'' என்பதாக ஹஜ்ரத் ஜுனைத் பக்தாதி (ரஹ்) கூறுகிறார்கள்,

ஹஜ்ரத் அபூ உஸ்மான் நைஷாபூரி (ரஹ்) கூறுகிறார்கள்: எவர் சுன்னத்துகளை தமது சொல் செயலின் அதிகாரியாக்கிக் கொள்வாரோ அவருடைய பேச்சு ஞானங்கள் நிறைந்ததாக இருக்கும். மேலும் எவன் நப்ஸின் இச்சைகளை தன் அதிகாரி யாக்கிக் கொள்வானோ அவன் பித்அத்தில் வீழ்ந்து விடுவான். ஏனெனில் பரிசுத்த திருமறையின் அருள்வாக்காவது 'வ இன் திதீயூஹு தஹ்ததூ'' கருத்து: ரசூல் (ஸல்) அவர்களின் இத்திபா செய்யுங்கள். ஹிதாயத்தைப் பெற்றுக் கொள் வீர்கள்.

இப்னு பகீத் (ரஹ்) அவர்கள் ''இறைவேதம், சுன்னத் ஆகிய இரண்டைக் கொண்டும் அத்தாட்சி பெறாத அனைத்து நிலைகளும் (சொல் செயல்களும்) பாதத்தில் என்னும் பொய் மையேயாகும்'' என்றும் கூறுகிறார்கள்.

''பித்அத்தின் மீது செயல்படும் அமல்கள் எல்லாம் நபியின் மீது வேதனையாக முடியும். மேலும் எந்த அமல்கள் பெரியார்களின் வழி காட்டுதலின்றி செய்யப்படுமோ அவை அனைத்தும் நபியின் ஏமாற்றமாகும்'' என்று ஹழ்ரத் ஸஹ்ல் தஸ்தரி (ரஹ்) கூறுகிறார்கள்.

'எந்த அமல் சுன்னத்துடைய இத்திபா இன்றி செய லாற்றப்படுமோ அது வழிகேடாகும்' என்று ஷைகுல் இஸ் லாம் (ரஹ்) கூறுகிறார்கள்.

ஹழ்ரத் நானோதவி (ரஹ்) அவர்களின் சுன்னத்துகளை பின்பற்றும் சம்பவமோ மிக பிரபல்யமானதே. அது சிப்பாய் கலகம் உண்டான காலமாக இருந்தது. அவர் களுள் பேரிலும் பிடிவாரண்ட் ஏற்பட்டிருந்தது. எல்லோ ரும் வற்புறுத்தியதின் பேரில் ஹழ்ரத் நானோதவி (ரஹ்) அவர்கள் ஒரு வீட்டில் மறைத்து வைக்கப்பட்டார்கள். மூன்றும் நாள் வலுக்கட்டாயமாக அவர்கள் வீட்டை விட்டு வெளியேறி வந்து விட்டார்கள். அவர்கள் கூறலானார்கள் 'நபி (ஸல்) அவர்கள் தவ்ர் குகையில் மூன்று நாட்கள் மட்டும் மறைந்திருந்தார்கள்.' (நானும் அந்த சுன்னத்தின் அடிப்படையில் மூன்று நாட்கள் மட்டும் மறைந்திருந்தேன்.)

இத்தொடர்பில் அவர்கள் கூறுவார்கள்: தையல்காரரி டம் மாதிரிக்கான ஓர் உடை கொடுக்கப்பட்டு அதே நமூனா வில் புத்தாடை தைக்குமாறு உத்திரவிடப்படும். மாதிரிக்காக கொடுக்கப்பட்ட உடை சட்டை அல்லது பைஜாமாவாக இருக் கலாம். புதிய துணியைக் கத்தரித்து தைப்பதில் கொடுக்கப் பட்ட நமூனா பிரகாரமே அப்புத்தாடை தயாரிப்பதில் எந்த அளவு அந்த தையற்காரர் வெற்றி பெறுவாரோ அந்த அளவே அதற்கான கூலியும் இனாமும் பெறுவதற்கும் தகுதி யுடையவர் ஆவார். இந்த உதாரணத்தைக் காட்டி அவர் கள் ''நபி (ஸல்) அவர்களின் வாழ்வே ஒரு நமூனாவாகும். இப்பொழுது முழு மனித சமுதாயத்திற்கும் உத்திரவிடப் படுகிறது. உங்களை நீங்களே இந்த நமூனாவின் சாயலை

மேற்கொள்ளுங்கள். அது உங்கள் குணத்தில், உங்கள் நடையில், உடையில், சிந்தனையில், பார்வையில் ஆக சகல செயல்களிலும் இதே நமூனாவை பின்பற்றுங்கள். எவர்கள் எந்த அளவு இந்த நமூனாவின்படி தம்மை தயாரித்துக் கொள்வாரோ அந்த அளவு இறைவனின் நேசம் என்னும் இனம் பெற தகுதி பெறுவார்.

நமது காலத்தில் சுத்தம் பற்றி இமாம்கள் தயாரித்து அளித்துள்ள மஸ்அலாக்களை போன்று, சஹாபாக்கள் காலத்தில் மஸ்அலாக்கள் இருக்கவில்லை. அவர்களிடம் நபி (ஸல்) அவர்களுக்கு எது பிரியமானதோ அதுவே சுத்தம் என்பதாகவும் எது அன்னாருக்கு வெறுப்பானதோ அதுவே அசுத்தமாகவும் கருதப்பட்டது. சுத்தம் பாதி ஈமான் என்ப தால் நபி (ஸல்) அவர்கள் வெறுத்ததை சஹாபாக்களும் அசுத்தம் என ஒதுக்கி வாழ்ந்தனர். பரிசுத்தவான்களே சுவனம் புகுவார்கள். ஏனெனில் சுவனம் மிக சுத்தமான நேர்த்தியான இடம். அசுத்தமானவர்கள் அதில் பிரவேசிக்க முடியாது. குப்ரு, ஷிர்க், பாவம், பொய் எல்லாம் அசுத்த மானவை. இப்ராஹீம் (அலை) அவர்களின் தந்தை ஆஜர் ஒரு முஷ்ரிக். அவரை கியாமத் நாளில் பன்றியாக மாற்றப் பட்டு ஷிர்க் அவ்வளவு அசுத்தமான விஷயம் என்பது உணர்த்தப்படும். ஒருவர் பொய் பேசியதும் பொய்யின் துர்நாற்றத்தை சகிக்க முடியாமல் மலக்குகள் காததூரம் ஓடிவிடுகின்றனர். பாவம் எப்படிப்பட்ட அசுத்தம் என்றால் அது செய்யப்பட்டதும் ஒரு கரும்புள்ளி உள்ளத்தில் படிந்து விடுகின்றது. பாவிகள் தொட்டதினால் பிரகாசமாக இருந்த ஹஜ்ருல் அஸ்வத் கல்லும் கருப்பாக மாறிவிட்டது. சஹா பாக்கள் நபியவர்களின் வழிமுறைக்கு மாற்றமானதை பாவமாக கருதினர்.

எனவே நபி (ஸல்) அவர்கள் காட்டிய வழிமுறையே பரிசுத்தமானது. அதுவே மனிதனை பரிசுத்தப்படுத்தக் கூடியது. ஆகையினால் சஹாபாக்களிடம் ரசூல் (ஸல்) அவர்

களின் தரீகா—நெறிமுறை அல்லது சுன்னத்துகள், அன்னாரின் விருப்பம் ஆகியவை சுத்தமெனக் கொள்ளப்பட்டது.

பரிசுத்தமான சுவனத்தின் சாவி தொழுகை. தொழுகையின் சாவி ஒலு. ஒருவர் ஒலுவை நபி (ஸல்) அவர்கள் காட்டிய முறையில் செய்தபின் வானின் பக்கம் தம்முடைய கலிமா விரலை உயர்த்தி 'அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரசூலுஹு' என ஓதினால் சுவர்க்கத்தின் எட்டு வாயில்களும் அவருக்காக திறந்து கொள்ளும் என்பதாக ஹதீஸில் கூறப்பட்டுள்ளது.

ஒலு என்பது என்ன? அல்லாஹ்வுடைய கட்டளைகளையும், நபி (ஸல்) அவர்களின் சுன்னத்துகளையும் மேற்கொள்ளும் ஓர் இபாதத். அல்லாஹ்வின் கட்டளைகளால் மனிதனின் ஆன்மாவிற்கு சக்தி கிடைக்கிறது. நபி (ஸல்) அவர்களின் சுன்னத்துகளை பயன்படுத்தும்போது ஆன்மாவிற்கு பரிசுத்தத் தன்மை கிடைக்கிறது. ஒலுவில் அல்லாஹ்வின் நான்கு கட்டளைகள் இருக்கின்றன. ஹனபி மஸ்அலா பிரகாரம் இவை நான்கு பர்ளுகளாகி விட்டன. நான்கு பர்ளுகளை நிறைவேற்றும் நிய்யத்துடன் ஒலு செய்வதை விட அல்லாஹ்வின் நான்கு பெரும் கட்டளைகளை நிறைவேற்றும் மகத்துவத்துடன் ஒலுச் செய்யப்பட்டால் ஆன்மா இன்னும் அதிக சக்தி பெறும். நான்கு கட்டளைகளையுடைய ஒலுவை நிறைவேற்ற சுத்தமான தண்ணீர் தேவை. சுத்தமான தண்ணீருக்கு நான்கு தன்மைகள் தேவை. முதலாவது அதன் நிறம் மாறாது தெளிவாக இருக்கவேண்டும். இரண்டாவது அதில் வழுவழுப்பு இருக்கக் கூடாது. மூன்றாவது அதன் ருசி மாறக் கூடாது. நான்காவது அதில் நாற்றம் வரக்கூடாது. கைகளால் தண்ணீரை அள்ளிப் பார்ப்பதால் நிறமாற்றம் தெரிந்து விடும். இருகைகளை மணிக்கட்டுவரை கழுவும்போது அத்தண்ணீரில் வழுவழுப்பு இருக்கிறதா இல்லையா என்பது தெரிந்துவிடும். வாய் கொப்பளிப்பதால் தண்ணீரின் ருசி தெரியவரும். நாசிக்குள் நீர்

செலுத்துவதால் அதில் நாற்றமிருந்தால் தெரிந்துவிடும். எனவே ஒலுச் செய்யும்போது தண்ணீரை கைகளால் அள்ளி பார்ப்பதும், கைகளை தேய்த்துகழுவுவதும், வாய் கொப்பளிப் பதும், நாசிக்கு செலுத்துவதும் சுன்னத்தாகி விட்டன.

சுத்தமான தண்ணீர் உடல் அழுக்கை நீக்குமேயல்லாது மனிதனின் ஆன்மாவை பரிசுத்தப்படுத்தாது. அந்த சக்தி நபி (ஸல்) அவர்களின் சுன்னத்துகளில்தான் இருக்கிறது. எனவே தண்ணீரை நபி (ஸல்) அவர்களின்வழிமுறையில்பயன் படுத்தும்போதுதான் மனிதனின்உடலும், ஆன்மாவும் பரிசுத் தம்பெறுகின்றன: அவன் தொழ தகுதி பெறுகின்றான். மாறாக ஒருவன் தன் இஷ்டம்போல சுன்னத்திற்கு மாற்றமாக ஒரு கடல் அளவு நீரால் தன்னை சுத்தப்படுத்திக் கொண்டாலும்—அவனது உடலில் அணுவளவு அழுக்கு இல்லாது போன பட்சத்திலும்—அவன் தொழ தகுதி பெறமாட்டான். தண்ணீரில் நபியவர்களின் தரீகா பயன்படவில்லையானால்ஒருவன் பரிசுத்த மடையமாட்டான். முழுக்கு நீங்க ஒருவன் சுன்னத்திற்கு மாற்றமாக ஏழுகடல் அளவு நீரால் குளித்தாலும் அவன் பரிசுத்தமடைய மாட்டான். மாறாக சுன்னத்தான முறையில் ஒரு வாளி தண்ணீரில் குளித்தாலும் அவன் முழுக்கு நீங்கி விடும். பரிசுத்தமடைய தண்ணீர்தான் தேவை என்பதும் அவசியமில்லை. மண்ணையும் நபி (ஸல்) அவர்களின் தரீகா வில் பயன்படுத்தி தயம்மம் செய்தால் மனிதன் பரிசுத்த மடைந்து விடுவான். தண்ணீர் இல்லாத காலத்தில் மண் ணும் போதுமாகி விடுகிறது. அதன் மீது நபியவர்களின் தரீகா பிரயோகிக்கப்பட்டால் மனிதன் பரிசுத்தமாகி தொழ தகுதி பெற்று விடுகின்றான். துணியின் மீது சோப்பு பிரயோகமானல் துணி சுத்தமாகி விடுவதுபோன்று, காந்தம் இரும்பை இழுப்பதைப் போன்று சுத்தம் அல்லாஹ் வின் ரஹ்மத்தை இழுக்கக் கூடியது. அசுத்தம் மனிதனை அல்லாஹ்வின் ரஹ்மத்திலிருந்து அப்புறப்படுத்தி தூரம் விலக்கக்கூடியது. சுத்தம் ரூஹுக்கு உணவு. அசுத்தம் நப்ஸுடைய உணவு. ஆனல் ரூஹுக்கு விஷம். அசுத்தம்

சேர சேர ரூஹ் மயக்கமடைந்து விடுகிறது. ரூஹுக்கு மரணம் என்பதில்லை. ஏனெனில் அது அல்லாஹ்வின் அமர் என்னும் கட்டளையால் வந்தது. அல்லாஹ்வின் அமருக்கு மரணமென்பதில்லை. ஆனால் ரூஹ் மயக்கமடைந்து விடுவதே அதன் மரணத்திற்கு சமமானது. இந்த ரூஹ் அல்லாஹ்வை பார்த்திருக்கிறது. ஆலமே அர்வாஹில் அவன் கேட்ட கேள்விக்கு பதில் கூறியுள்ளது. அதாவது அல்லாஹ்வுடன் பேசியுள்ளது. மறைவான உலகங்களை (ஆலம்களை) பார்த்து வந்திருக்கிறது. மற்ற ரூஹ்களை சந்தித்து வந்துள்ளது. பாவங்கள் என்ற அசுத்தத்தின் விஷத்தை ஏற்றி நாம் அதை மரணிக்க அல்லது மயக்கமடையச் செய்து விட்டதினால் இப்பொழுது அதனால் அவற்றை உணர முடிவதில்லை. ஆதலால் நாம் அல்லாஹ்வை அறியவும் முடியவில்லை.

நபி (ஸல்) அவர்கள் பரிசுத்தமானவர்கள். அவர்களின் சுன்னத்துகளும் பரிசுத்தமானவை. நூரானியத்தானவை. ரூஹ்வுக்கு உணவு போன்று சக்தி அளிப்பவை. பாவங்களுக்கு தடை. எனவே நாம் அன்னாரின் ஒவ்வொரு சுன்னத்துகளையும் தேடி ஆராய்ந்து அடைய முயற்சிக்க வேண்டும்.

ரசூல் (ஸல்) அவர்களை ஒவ்வோர் அமலிலும் முழுமையாக பின்பற்றுவது கடுமையான தியாகத்தின் பாற்பட்ட விஷயம். அந்த இலட்சியத்தை அடைய முற்படுவோர் அப்பாதையில் கடினமான சோதனைகளைச் சந்திக்க நேரிடும். சிலருக்கு சொந்த விஷயங்கள், பழக்க தோஷங்கள், குடும்ப சம்பிரதாயங்கள் சுன்னத்துகளை பின்பற்றத் தடையாக இருக்கும். சிலருக்கு நட்பு, கவுரவம், பதவி போன்றவை தடையாக இருக்கலாம். எனினும் உறுதியுள்ளவர்களே இக்கடினபாதையை வெற்றிகரமாக கடந்து விடுவார்கள். வாழ்வின் ஒவ்வோர் அம்சத்திலும் நபி (ஸல்) அவர்களின் சுன்னத்தான வழிமுறையை முழுமையாக பின்பற்றி நடப்பதில் தன்னை கட்டுப் படுத்துவதற்குத்தான் 'இத்திபா' என்று பெயர்.

நபி (ஸல்) அவர்களை முழுமையாக பின்பற்றியவர்கள் என எவரையாவது குறிப்பிடுவதாயிருந்தால் அது சஹாபாக்களுக்குத்தான் பொருந்தும். நபித்துவம் அண்ணல் நபி (ஸல்) அவர்களுடன் முடிவடைந்ததென்றால், நபியவர்களின் சுன்னத்துகளை முழுமையாக பின்பற்றும் தன்மையும் சஹாபாக்களுடன் முடிந்ததென்றே சொல்ல வேண்டும். சஹாபாக்கள் நபி (ஸல்) அவர்களுடன் எல்லா நிலைமைகளிலும் கூட இருந்தவர்கள். அன்னார் ஏவியபடி, செய்துக்காட்டியபடி சற்றும் மாற்றமின்றி அவர்களும் செயல்பட்டார்கள். அன்னார் அருளியவற்றை ஒரு சொல் மாற்றமின்றி அவ்வாறே நமக்கு எத்தி வைத்தனர். அன்னார் கொண்டு வந்த தீன்படி பெரும் தியாகங்களுடன் செயல்பட்டு நம்வரை எத்தியும் வைத்தனர். நபியவர்கள் எந்த வேலையை எவ்வாறு செய்தார்களோ அந்த வேலையை அவ்வாறே நமக்கும் செய்து காட்டிச் சென்றார்கள். தொழுகை, நோன்பு, ஹஜ் ஆகிய முக்கிய இபாதத்துகளை நபி (ஸல்) அவர்களிடம் தாம் கற்றபடியே எத்தி வைத்தது போல் உண்ணல், பருகல், உறங்கல், உடுத்தல், உரையாடுதல் போன்ற அன்றாட செயல்களையும் செய்து காட்டினார்கள். நபி (ஸல்) அவர்களின் நடை எவ்வாறிருந்தது, உடை எவ்வாறிருந்தது என்பதை உலகிற்கு எடுத்துக் காட்டினார்கள். அல்லாஹ் தன் திருமறையில், ''அல்லாஹ்வையும், இறுதி நாளையும் உறுதியாக நம்புபவர்களுக்குரிய அழகிய முன்மாதிரி நிச்சயம் அல்லாஹ்வுடைய தூதரிடமே உங்களுக்கு இருக்கிறது.'' (33:21) என்றுரைக்கும் திருவசனத்திற்கு உன்னத எடுத்துக் காட்டாக சஹாபாக்கள் விளங்கினார்கள். அவர்கள் சில இபாதத்துகளில் அல்லது வாழ்வின் ஒருசில அம்சங்களில் மட்டும் நபியவர்களை பின்பற்ற நாடியிருந்தால் சில நாட்கள் மட்டும் நபியவர்களின் கூட்டுறவில் இருந்து விட்டு சென்றிருப்பார்கள். ஆனால் சஹாபாக்களோ தமது முழு வாழ்வையும் தத்தம் செய்து நபி (ஸல்) அவர்களுடன் இருந்து ஒவ்வொரு சுன்னத்

தையும் கற்று அவற்றை தம் வாழ்வில் நடைமுறையில் கொண்டு வர பெரும் தியாகம் செய்தார்கள்.

ஹஜ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ''நான் ஒரு முறை நபி (ஸல்) அவர்களுடன் உணவு உண்டேன். நபியவர்கள் ஆணமுள்ள பாத்திரத்தில் சுரைக்காயைத் தேடி எடுத்து புசிப்பதைக் கண்டேன். அன்றிலிருந்து நான் சுரைக்காயை விரும்புகிறேன்.'' அல்லாஹு அக்பர்! சஹாபாக்கள் தம்முடைய ருசி போன்ற விருப்பத்தையும் நபியவர்களின் விருப்பத்திற்கு இணங்க மாற்றிக் கொண்டார்கள்.

நபி (ஸல்) ஹிஜ்ரத் செய்து மதீனா முனவ்வரா சென்ற போது அபூ அய்யூப் அன்சாரி (ரலி), அன்னாரை உபசரித்தனர். அதற்குப் பிறகு அன்சாரிகளின் வீடுகளிலிருந்து நபியவர்களின் சமூகத்தில் உணவு கொண்டு வரப்படுமானால், அன்னார் மீதமான உணவிலிருந்து தமக்கு முன்னுள்ள உணவை அபூ அய்யூப் (ரலி) அவர்களுக்கு அளித்து விடுவது வழக்கம். அபூ அய்யூப் [ரலி] அவர்களும் மிக்க பிரியத்தோடு அதனைப் பெற்று, நபியவர்களின் விரல்கள் பதிந்த அடையாளமுள்ள இடத்திலிருந்து உண்ண ஆரம்பிப்பார்கள். ஒரு நாள் நபியவர்கள் உணவைத் தொடாமலே திருப்பி அனுப்பிவிட்டதைக் கண்ட அபூ அய்யூப் (ரலி) திடுக்குற்று பதறிப்போய் நபியவர்களிடம் உண்ணாததின் காரணத்தை விசாரித்தார்கள். அதற்கு அவர்கள் ''அதில் வேக வைக்காத பூண்டு இருந்தது. பச்சை பூண்டு எமக்கு பிடித்தமில்லை. ஆதலால் உணவு உண்ணவில்லை!'' எனக் கூறினார்கள். இதைக் கேட்டதும் அபூ அய்யூப் (ரலி) அவர்கள் ''தாங்கள் விரும்பாத அதனை நானும் இன்றிலிருந்து விரும்பமாட்டேன்'' என மொழிந்தார்கள்.

ஒரு முறை ஹஜ்ரத் அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்களிடம் ஒருவர் 'தாங்கள் முடிகளுள்ள தோலால் செய்த காலணிகளை ஏன் அணிவதில்லை?' என விசாரித்ததற்கு

அவர்கள் "நான் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இதே மாதிரி காலணிகள் அணிவதை கண்டுள்ளேன். ஆதலால் எனக்கும் இதுவே பிரியமானது!' என மறுமொழி பகன்றார்கள்.

ஒரு முறை ஹஜ்ஜில் அரபாவிலிருந்து முஜ்தலிபா திரும்பும் போது ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒட்டகையிலிருந்து இறங்கி சிறுநீர் கழிப்பது போன்று உட்கார்ந்து பிறகு எழுந்து விட்டார்கள். இதற்கான காரணம் கேட்ட போது அவர்கள் ''நான் நபி (ஸல்) அவர்களுடன் ஹஜ்ஜதுல் விதாஃவின்போது இருந்தேன். நபியவர்கள் இதே இடத்தில் தமது ஒட்டகையிலிருந்து இறங்கி சிறுநீர் கழித்தபின் ஒலுச் செய்து மறுபடியும் ஒட்டகத்தின் மீதேறி சென்றார்கள். இதன் இத்திபாவில் நானும் இவ்வாறு செய்தேன்!'' என மொழிந்தார்கள்.

சஹாபாக்களின் இந்நிகழ்ச்சிகளுடன் நமது இன்றைய வாழ்க்கையின் போக்கை ஒப்பிட்டுப் பார்க்கும்போதுதான் நாம் நபி (ஸல்) அவர்களின் இத்திபா விஷயத்தில் எவ்வளவு பின் தங்கியுள்ளோம் என்பது விளங்கும். ஹஜ்ரத் அபூஸலமா (ரலி) அவர்கள் ஹஜ்ரத் அபூஸயீத் குத்ரீ (ரலி) அவர்களிடம் உண்ணல், பருகல், உடுத்தல் சம்பந்தமாக விசாரித்தார்கள். (அதாவது இவை துன்யாவின் தேவைகளுக்கு மட்டும்தானா அல்லது இவைகளும் தீனின் அமல்களா? என்பதாக) அதற்கு அபூஸயீத் குத்ரீ (ரலி) அவர்கள் ''நீர் அல்லாஹ்வுக்காக உண்க, அல்லாஹ்வுக்காக பருகுக, அல்லாஹ்வுக்காக உடை அணிக, அல்லாஹ்விற்காக சவாரி செய்க.'' (அதாவது இச் செயல்களை அல்லாஹ்வின் தியானத்துடன் நபியின் சுன்னத்தான வழிமுறையுடன் நிறைவேற்றவும். உலகத் தேவைகள் நிறைவேறுவதுடன் மறுமைக்கான அமலாகவும் அவை மாறி விடும்) எனக் கூறினார்கள்.

நாம் நபி(ஸல்) அவர்களின் இத்திபா இபாதத்துகளில் மட்டும் செய்கிறோமே தவிர வாழ்வின் மற்ற அம்சங்களில் செய்வ

தில்லை. எவ்வாறு இபாதத்துகளில் நபியவர்களின் வழிமுறையை பின்பற்றுதவரை அவை இபாதத்தாக கருதப்படமாட்டாதோ அவ்வாறே சுன்னத்துகளை பின்பற்றுதவரை வாழ்க்கையும் உருவாவதில்லை. சிலர் நல்ல நல்ல சுவையான சுன்னத்து களை மட்டும் எடுத்துக் கொண்டு கஷ்டமானதை விட்டு விடுகின்றனர். இனிப்பு சாப்பிடுவது, நிக்காஹ் செய்வது, அத்தர் பூசுவது, வெண்ணுடை உடுப்பது ஆகியவற்றை சுன்னத்துகள் என பிரியமாக எடுத்துக் கொள்கின்றனர். ஆனால் பசி பட்டினியாய் இருப்பது, இரவில் விழித்திருப் பது, அல்லாஹ்வின் பாதையில் தஃவதுடைய வேலைக்காக தியாகம் செய்வது ஆகிய சுன்னத்துகள் நப்ஸுக்கு பார மாக இருப்பதால் அவற்றை விட்டு விடுகின்றனர். இன்னும் சிலர் இவ்வாறு கூறுகின்றனர். சாப்பிட்ட பிறகு விரல்களை சூப்புவது சுன்னத்துதான். இருப்பினும் அது எனக்கு பிரிய மில்லை. தரையில் அமர்ந்து சாப்பிடுவது சுன்னத்துதான். இருப்பினும் அவ்வாறு சாப்பிட்டால் எனக்கு வயிறு நிரம் பாது. தாடி ஒரு சுன்னத்துதான். இருப்பினும் மாற்றார் களுக்கு முன்னால் கௌரவம் இருக்காதே! — இப்படியாக குதர்க்கம் பேசுவது—ஈமானின் பலஹீனம், நபியவர்களுடன் அன்பு குறைவு என்பதையே காட்டுகின்றன.

சில சுன்னத்துகளை பின்பற்றுவதால் நன்மை கிடைக் கும். ஆனால் அவற்றை விடுவதால் பாவம் ஏற்படாது. உதாரணமாக வலதுபுறம் ஒருக்கணித்து படுப்பது சுன்னத்து. ஆனால் ஒருவர் இடதுபுறம் படுத்துத் தூங்கினார் என்றால் அதனால் பாவம் ஏற்படாது. ஆனால் சில சுன்னத்துகளை செயல்படுத்தினால் நன்மை கிடைக்கும். ஆனால் அவற்றிற்கு மாற்றம் செய்தால் பாவம் உண்டாகும். உதாரணமாக லுங்கியை கொண்டைக் காலுக்கும், கணுக்காலுக்கும் இடை யில் இருக்குமாறு உயர்த்திக் கட்டுவது சுன்னத். ஆனால் எவரேனும் கணுக்கால் மொளிகளுக்கு கீழிறக்கி, கீழாடை அணிந்தால் அது கடும் குற்றமாகி கியாமத் நாளில் அவ் வாறு அணிந்தவனை அல்லாஹ் ஏறிட்டும் பார்க்க மாட்

டான். நரக நெருப்பு அவ்விடத்திலிருந்தே உடலில் பற்றிப் பிடிக்கும் என எச்சரிக்கப்பட்டுள்ளது. வெறும் கீழாடையை கணுக்காலுக்கு கீழ்மேல் ஆக்கும் சுன்னத்தில் இவ்வளவு முக்கியத்துவம் இருக்கிறதென்றால் பிறகு வாழ்வின் மற்ற அம்சங்களில் சுன்னத்தை பின்பற்றுவது பற்றி என்ன கூறுவது?

இந்த அடிப்படையில் சுன்னத்துகளை உம்மத்தில் உயிர்ப் பிக்கும் உயர் நோக்குடன் இக்கிதாபு வெளியிடப்படுகிறது. ஆலி ஜனாப் அல்ஹாஜ் ஷேக் அப்துல் காதிர், அழகன்குளம் அவர்கள் ஹஜ்ஜுக்குப் பிறகு அல்லாஹ்வின் பாதையில் ஆப்ரிக்கா நாடுகளில் வேலை செய்துவிட்டு திரும்பி பாகிஸ் தான் வந்து சுன்னத்துகளை விளக்கும் ஒரு நூலைக் கொண்டு வந்து என்னிடம் தந்து அதுபோன்ற ஒரு கிதாபை தமிழில் உருவாக்கினால் தமிழ் முஸ்லிம்களுக்கு பெரும் பலன் உண் டாகும் என அபிப்பிராயம் தெரிவித்தார்கள். அவர்களின் தூண்டுதலின் பேரில் இக்கித்தாபில் பல முக்கியமான விஷ யங்களை சேகரித்து எழுதினேன். அல்லாஹு தஆலா இக் கிதாபினை கபூல் செய்து உம்மத்தில் சுன்னத்துகள் ஹயாத் ஆக்க கிருபை செய்துவிட்டால் அதுவே நாம் மேற்கொண்ட இந்த முயற்சிக்கான ஈருலக கைம்மாறு என அல்லாஹ்வைக் கொண்டு நல்லாதரவு வைக்கிறேன். அல்லாஹு தஆலா நம் அனைவருக்கும் சுன்னத்துகளை பின்பற்றி நல்ல அமல்களை ஆற்றும் நற்பேற்றினை அளித்து இம்மை மறுமையின் வெற்றி களை அளிப்பானாக! ஆமீன்!

வஸ்ஸலாம்
இப்படிக்கு
அல்அப்து

தீ. அ. தாவுத் ஷரீப்
அபா அன்ஹு

சென்னை
27-6-91

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

அண்ணல் நபியின் அழகிய வழிமுறைகள்

1. உண்ணலில் மேற்கொண்ட உன்னத வழிமுறைகள்

1) அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சாப்பிடும் முன் இரு கைகளையும் கழுவிக் கொண்டு, வலது கையால் தமக்கு முன்னாலிருந்து உணவை அருந்த ஆரம்பிப்பார்கள்.

2) ஆருயிர் நாயகம் (ஸல்) அவர்கள் கையூன்றி சாய்ந்தவர்களாக ஒரு போதும் உண்டதில்லை. மாறாக இரு கால்களையும் மடித்து அமர்ந்து அல்லது இருப்பிடத்தை தரையில் அமர்த்தி ஒரு காலை நெட்டவைத்து அல்லது இரு கால்களையும் நெட்டவைத்து சாப்பிட அமர்வார்கள். எனினும் இந்த கடைசி இருப்பையே அதிகமாக மேற்கொள்பவர்களாக இருந்தார்கள்.

3) நபியவர்கள் நாற்காலியில் அமர்ந்து மேஜை மீது உணவு வைத்து ஒருபோதும் உண்டதில்லை. மாறாக தரையில் சுப்ரா துணி விரித்து அதன் மீது வைக்கப்பட்ட உணவையே அன்னார் அருந்தியுள்ளார்கள்.

4) நபியவர்கள் பெரும்பாலும் பெருவிரல், கலிமா விரல், நடுவிரல் ஆகிய மூன்று விரல்களால் உண்பார்கள். உண்ணும் உணவு குழைந்த நீராகாரம் போல் இருப்பின் நடுவிரலுக்கு அடுத்த விரலையும் பயன்படுத்துவார்கள்.

5) உணவு சமீபமாக வைக்கப்பட்டதும் நபி [ஸல்] அவர்கள்,

اَللّٰهُمَّ بَارِكْ لَنَا فِيْمَا رَزَقْتَنَا وَقِنَا عَذَابَ النَّارِ بِسْمِ اللهِ

என ஓதுவார்கள்.

5A) சாப்பிட ஆரம்பிக்கும்போது மூன்று கவளம் வரை ஒவ்வொரு கவளத்தின் போதும் 'பிஸ்மில்லாஹி' என மொழிந்தவர்களாக சாப்பிடுவார்கள்.

5B) நபி (ஸல்) அவர்கள் உணவிலிருந்து முதல் கவளம் சாப்பிட்டதும், 'யா வாஸியல் மஃபிரத்தி' என ஓதுவார்கள்.

6) எவரேனும் 'பிஸ்மில்லாஹ்' கூறுமல் சாப்பிட ஆரம்பித்தால் நபி (ஸல்) அவர்கள் அம்மனிதருடைய கையைப் பிடித்து அவரை பிஸ்மில்லாஹ் கூறும்படி தாக்கீது செய்வார்கள்.

7) பாத்திரத்தில் உணவு விளிம்பு வரை நிரம்பியிருக்கு மாயின் நபியவர்கள் உயர்ந்த நடுப்பகுதியிலிருந்து சாப்பிட மாட்டார்கள். மாறுக தமக்கு முன்னுள்ள தாழ்ந்த பகுதியிலிருந்து சாப்பிட ஆரம்பிப்பார்கள். மேலும் உணவுத் தட்டின் நடுப்பகுதியில்தான் பரக்கத் உண்டாகிறது என்றும் கூறுவார்கள்.

8) சிறுசிறு கோப்பை கிண்ணங்களிலிருந்து (இவ்வாறுன கிண்ணங்களிலிருந்து சட்னி, ஊறுகாய் போன்ற சுவையான பதார்த்தங்களை தொட்டு சாப்பிடுவது செல்வந்தர்களின் வழக்கம். அதைப் போன்று) நபியவர்கள் உண்ண உவந்தார்களில்லை.

9) நபியவர்கள் ஹல்வா, தேன், சிர்கா, பேரீத்தம் பழம், தர்பூஸினி பழம், வெள்ளரிக்காய், சுரைக்காய் முதலியவற்றை மிகவும் உவந்து உண்பார்கள்.

10) அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தங்கள் வீட்டாரிடம் ஆணம் கேட்டார்கள். அதற்கு அவர்கள் எங்க

ளிடம் காடியைத் (சிர்கா) தவிர வேறொன்றுமில்லை எனக் கூறினர். அப்போது அவர்கள் 'காடி மிகவும் நல்ல ஆணம், காடி மிகவும் நல்ல ஆணம், காடி மிகவும் நல்ல ஆணம்' எனக் கூறினார்கள்.

11) மற்றொரு ஹதீஸில் 'அன்னார் காடியில் பரக்கத் அருள துஆச் செய்தார்கள்' என்றும், பிறிதொரு ஹதீஸில் 'முன்சென்ற நபிமார்களுடைய ஆணமும் இதுவாகவே (காடியாகவே) இருந்தது' என்றும் வந்துள்ளது.

12) நபியவர்கள் சில சமயம் தர்பூஸினியையும், பேரீத்தம் பழத்தையும்; வேறு சமயம் வெள்ளரியையும், பேரீத்தம் பழத்தையும்; மேலும் ரொட்டியையும் பேரீத்தம் பழத்தையும் அல்லது எள்ளு—பேரீத்தம் பழம்; வெண்ணெய்—பேரீத்தம்பழம் இப்படியாகச் சேர்த்து மிகவும் விருப்புடன் உண்டு வந்தனர்.

12a) (புதுப் பேரீத்தம் பழத்துடன் வெள்ளரிக்காயைச் சேர்த்து சாப்பிட்டால் உடல் பருமன் ஆகிவிடும்.)

13) நபியவர்களுக்கு ஆணத்திலிட்ட சுரைக்காய் மிகவும் பிரியமானதாக இருந்தது.

14) இறைச்சியில் நபி (ஸல்) அவர்கள் தொடை, கழுத்து, வயிற்றுப் பகுதி இறைச்சியை மிகவும் பிரியப்படுவார்கள்.

15) நபி (ஸல்) அவர்களிடம் (சமைத்த) இறைச்சி கொண்டு வரப்பட்டது. அதிலிருந்த முன் சப்பை இறைச்சி மிகவும் உவப்பானதாக இருந்தது. எனவே அதனை முன் பல்லால் கடித்து உண்டார்கள்.

16) எலும்புள்ள மாமிசத்தில் நெஞ்சுக் கறியை மிகவும் பிரியப்படுவார்கள்.

17) நபி (ஸல்) அவர்கள் ஜைத்தூன் எண்ணெய், இனிப்புப் பண்டங்கள், தேன் ஆகியவற்றை மிகமிக உகந்து வந்தனர்.

18) ''ஜைத்தூன் எண்ணெய்யை அருந்துங்கள். உடலின் மீதும் தேய்த்துக் கொள்ளுங்கள். ஏனெனில் அது பாக்கியம் பெற்ற மரத்தின் எண்ணெயாகும்.'' என நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்.

19) பேரீத்தம் பழம் அல்லது ரொட்டித் துண்டு சுத்தமான இடத்தில் விழுந்து இருந்தால் அதனை எடுத்து துடைத்து (சுத்தப்படுத்தி) சாப்பிட்டு விடுவார்கள்.

20) நபியவர்கள் அடித்தள குழம்பை மிகவும் விரும்புவார்கள். இறுதியில் பெரும்பாலும் அதனைக் குடித்தும் விடுவார்கள்.

21) ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் புதுரக உணவு வகையைக் கண்டால் முதலில் அதன் பெயரை விசாரிப்பார்கள். பிறகு தமது முபாரக்கான கையை அதன் பக்கம் நீட்டுவார்கள்.

22) நபி (ஸல்) அவர்கள் கிச்சிடி சாப்பாட்டை மிகவும் பிரியப்படுவார்கள்.

23) இறைச்சிக் குருமாவில் ஊறிய ரொட்டி அன்னாருக்கு மிகவும் பிரியமானதாக இருந்தது.

24) வெண்ணெயும் பேரீத்தம் பழமும் அன்னாருக்கு மிகவும் பிரியமானதாக இருந்தது.

25) பாலையும் பேரீத்தம் பழத்தையும் ஒரு சேர உண்பார்கள். மேலும் 'இவை இரண்டும் மிக உயர்ந்தவை' என்றும் அருளுவார்கள்.

26) ஆவி கிளம்பிக் கொண்டிருக்கும் நிலையிலுள்ள சூடான உணவை சாப்பிடமாட்டார்கள். எனினும் அதை

ஆறவிடுவார்கள். சூடான உணவைப் பற்றி சில சமயம் 'அல்லாஹ் நமக்கு நெருப்பை உணவாக அளிக்கவில்லை' என்றும், சில சமயம் 'சூடான சாப்பாட்டில் பரக்கத் இருப்ப தில்லை' என்றும் கூறுவார்கள்.

27) நபியவர்களுக்கு ஏதேனுமோர் உணவு சாப்பிடப் பிரியமில்லையாயின் ஒருபோதும் அதைப் பற்றி குறை கூற மாட்டார்கள். மாறாக பேசாது அதனை விட்டு விடுவார்கள்.

28) பச்சை வெங்காயம், பச்சைப் பூண்டு ஆகியவற்றை உண்ணவே மாட்டார்கள்.

29) நபி (ஸல்) அவர்கள் சலித்த மாவை(க் கொண்டு தயாரிக்கப்பட்ட ரொட்டியை) ஒருபோதும் உண்டதில்லை.

30) நபியவர்கள் சப்பாத்தி சாப்பிட்டதில்லை.

31) அன்னார் மைதா (மாவு) ரொட்டியை ஒரு போதும் உண்டதில்லை.

32) நபியவர்கள் ஒரு போதும் உணவை முகர்ந்து பார்க்க மாட்டார்கள். அச் செயலை அன்னார் வெறுத்து வந்தனர்.

33) உண்ணும் அல்லது பருகும் பதார்த்தத்தை நபிய வர்கள் வாயால் ஊதமாட்டார்கள். அதனை அன்னார் வெறுத்து வந்தனர்.

34) நாயகம் (ஸல்) அவர்கள் உணவு முதலியவற்றை உட்கார்ந்தே உண்பார்கள். எனினும் இனிப்பு அல்லது பழ வகை முன்வந்தால் சிலசமயம் அதனை நின்றும் உண்பார்கள்.

35) நபியவர்கள் ஏதேனும் உணவில் தமது முபாரக் கான கையை வைத்தால் அவ்வுணவின் அடித்தளம் வரை முழுமையாக விரல்களை நுழைத்துவிட மாட்டார்கள்.

36) நபியவர்கள் சிலசமயம் தர்பூஸினியை சர்க்கரை கலந்து சாப்பிட்டுள்ளார்கள்.

37) எப்பொழுதேனும் அண்ணலார் (ஸல்) அவர்கள் இரண்டுரக பழங்களை ஒருசேர புசிப்பார்களானால் ஒன்றை ஒருகையிலும், மற்றதை மறு கையிலும் வைத்துக் கொண்டு ஒரு முறை இதிலிருந்தும் மறுமுறை அதிலிருந்தும் புசிப்பார்கள். இதுபோன்று அன்னார் பேரீத்தம் பழம், தர்பூஸினி ஆகிய இரண்டையும் சாப்பிட்டுள்ளார்கள். பேரீத்தப்பழம் வலது கையிலும், தர்பூஸினி இடது கையிலும் இருந்தது.

38) நபி (ஸல்) அவர்கள் வெள்ளரிக்காயை உப்பு தொட்டும் சாப்பிடுவார்கள்.

39) நபியவர்கள் பேரீத்தம்பழம் சாப்பிட்டால் இடது கையால் கொட்டைகளை எறிவார்கள்.

40) அன்னார் கொட்டைகளை இரண்டு விரல்களைக் கொண்டு அதாவது கலிமா விரல், நடுவிரல் கொண்டு எறிவார்கள். அந்த இரு விரல்களின் பின்புறம் கொட்டையை வைத்து எறிவார்கள்.

41) பழைய பேரீத்தம் பழங்களை உண்ண நேர்ந்தால் முதலில் அவற்றின் உட்புறத்தை சுத்தப்படுத்திய பிறகே உண்பார்கள்.

42) 'யாரும் தமது இடது கையால் உண்ணவும், பருகவும் வேண்டாம். ஏனெனில் ஷைத்தான்தான் தன் இடது கையால் உண்ணவும் பருகவும் செய்கிறான்' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்.

43) யாராவது இடது கையால் சாப்பிடுவதைக் காண நேரிட்டால் அன்னார் அம்மனிதருடைய கையிலிருந்த கவளம் கீழே விழுந்து விடுமளவு அவருடைய கையைப் பிடித்து வேகமாக உதறுவார்கள். 'சாப்பிடும்போது வலது கையைப் பயன்படுத்துங்கள்' என்றும் வலியுறுத்துவார்கள்.

44) உணவு ஒரே வகையைச் சார்ந்ததாக அன்னாருக்கு முன்பாக வைக்கப்படின் அன்னார் தமக்கு முன்னுள்ள பகுதியி

லிருந்தே உண்பார்கள். ஆனால் பல்வகை உண்டிகள் ஒரே பாத்திரத்தில் வைக்கப்படின் அன்னார் ஏதும் தயக்கமின்றி எதிர்பக்கமாகவும் தம் கையை நீட்டுவார்கள்.

45) பெருமானார் (ஸல்) இரவின் உணவை காலைக்காகவோ அல்லது காலையின் உணவை இரவுக்காகவோ ஒரு போதும் எடுத்து வைத்ததில்லை.

46) பெருமானார் தம்முடைய வீட்டாருக்கு இறைச்சியைக் கொண்டு வந்து தருவார்களாயின் அதன் ஆணத்தில் அதிக நீரை விடச் சொல்லுவார்கள். ஏனெனில் அதிலிருந்து அண்டை அயல் வீட்டாருக்கும் ஆணம் கொடுப்பதற்கேயாம்.

47) ஒரு சபையில் அமர்ந்திருக்கையில், சபையினருக்கு உண்ண அல்லது பருக ஏதேனும் வருமானால், தமது வலது புறத்திலிருப்பவருக்கே அதனை அளிக்க அதிக உரிமையுடையவர் எனக் கருதி அவருக்கே அளிப்பார்கள். ஒருக்கால் இடது புறமிருப்பவருக்கு அளிக்க நாடினால் வலது புறமிருப்பவரிடம் அனுமதி கேட்பார்கள். இடது புறமிருப்பவர் எவ்வளவுதான் உயர் சிறப்பு பெற்றிருந்தாலும் சரி அதனை அவருக்கு அளிக்க மாட்டார்கள். இந்த அமலை அன்னார் நிரந்தரமாக கடைபிடிப்பார்கள்.

48) அன்னாரின் வாழ்நாட்களின் இறுதியில் மோசஞ் செய்து உணவில் விஷம் கலந்து அருந்தச் செய்த பின்னர், யாராவது ஒரு மனிதர் உணவை அன்பளிப்பாக அன்னாரின் சமூகத்தில் சமர்ப்பித்தால், அதிலிருந்து ஒரு கவளத்தை அம்மனிதரையே உண்ணச் செய்து பிறகு தாம் அருந்துவார்கள். இவ்வாறு புதிய மனிதர்களுடன் மட்டும் நடந்து கொள்வார்கள்.

49) ஏதேனுமொரு ஜமாஅத்துடன் உணவருந்தும் சந்தர்ப்பம் வாய்க்குமானால் எல்லோரையும்விட கடைசியில்

தான் அன்னார் சுப்ராவை விட்டு எழுவார்கள். ஏனெனில் சிலர் தாமதமாக உண்ணும் சுவாபமுடையவராய் இருப்பார். அப்படிப்பட்டவர் மற்றவர்கள் சாப்பாட்டை முடித்துக் கொண்டு எழுந்து செல்லும் போது வெட்கத்தின் காரணமாக சரிவர சாப்பிடாமலே எழுந்து விடுவார். அப்படிப்பட்ட மனிதர்களையும் அனுசரித்தே நபி (ஸல்) அவர்களும் எல்லோரும் சாப்பிட்டு எழும் வரை சிறிது சிறிதாக சாப்பிட்டுக் கொண்டிருப்பார்கள்.

50) எப்பொழுதேனும் நபி (ஸல்) அவர்கள் கோழி சாப்பிட நாடுவார்களேயானால் பல நாட்களுக்கு முன்னதாக அதைப்பற்றி உத்தரவிடுவார்கள். இதனால் அக்கோழி வெளியில் திரிந்து இரை தேடுவது தடுத்து நிறுத்தப்படும். பிறகே அது அறுத்து சமைக்கப்படும். அதனை அன்னார் உண்பார்கள்.

51) நபி (ஸல்) அவர்கள் விருந்துண்ண அழைக்கப்பட்டு, செல்லும் பொழுது எவராவது அழைக்கப்படாமலே தம்முடன் விருந்துக்கு வருவாரானால், அவரை அன்னார் அழைத்துக் கொள்வார்கள். ஆனால் விருந்தளிப்பவருடைய வீட்டை அடைந்த பின்னர் அவரிடம் அனுமதி கேட்பார்கள். அவ்வாறு விருந்துக்கு அழைத்தவர் அனுமதி தந்தால் அவரை தம்முடன் (உணவு உண்ண) அழைத்துக் கொள்வார்கள்.

52) தம் வீட்டிற்கு வந்த விருந்தாளியை நோக்கி 'இன்னும் சாப்பிடுங்கள்! இன்னும் சாப்பிடுங்கள்!' என அடிக்கடி கூறுவார்கள். எது வரையென்றால் விருந்தாளி முடியாது எனக் கூறும்வரை. அவ்வாறு கூறிய பிறகே தமது வலியுறுத்துதலை நிறுத்திக் கொள்வார்கள்.

53) ''உங்களில் எவரேனும் உணவருந்த நாடினால் 'பிஸ்மில்லாஹி' என ஓதவும். ஆனால் துவக்கத்தில் (ஓத) மறந்து விடின் இறுதியில் 'பிஸ்மில்லாஹி அவ்வலஹு வ ஆகிரஹு' என ஓதவும்.''

''நீங்கள் உண்ணும் போது ஒன்று சேர்ந்து 'பிஸ்மில்லாஹ்' ஓதி உண்ணுங்கள். அதில் அல்லாஹ் உங்களுக்கு

பரக்கத்தை நல்குவான்'' என்றும் ''இருவரின் உணவு நால்வருக்குப் போதுமானதாகும்'' என்றும் அண்ணலார் மொழிந்துள்ளார்கள்.

54) 'உண்பதற்கு முன்னரும், உண்ட பின்னரும் ஒலுச் செய்து கொள்வது உணவின் பரக்கத்திற்கு காரணமாகும்' என நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்.

55) சாப்பிட்ட பின்னர் கை கழுவி, கையின் ஈரத்தை தமது கைகளிலும், முகத்திலும், முபாரக்கான தலையிலும் தடவி தேய்த்துக் கொள்வார்கள்.

56) உண்ணும் அல்லது பருகும் பாத்திரங்களை மூடி வைக்குமாறு பணிப்பார்கள். மூடும் தட்டு அல்லது மூடி ஏதும் கிடைக்காத பட்சத்தில் ஒரு சிறு குச்சியை பாத்திரத்தின் வாயின் மீது குறுக்கே வைக்கச் செய்வார்கள். ஏனெனில் ''ஓராண்டில் ஓரிரவு உண்டு. அதில் நோய்கள் இறங்குகின்றன. மூடப் படாத உண்ணும் அல்லது பருகும் பாத்திரங்களின் மீது அவை இறங்காது செல்வதில்லை'' என நபி (ஸல்) அவர்கள் அருளியுள்ளார்கள்.

57) சுப்ராத் துணி எடுக்கும்போது நபி (ஸல்) அவர்கள்,

اَلْحَمْدُ لِلّٰهِ حَمْدًا كَثِيْرًا طَيِّبًا مُبَارَكًا فِيْهِ غَيْرَ
مَكْفِيٍّ وَّلَا مُوَدَّعٍ وَّلَا مُسْتَغْنًى عَنْهُ رَبَّنَا

என ஓதுவார்கள்.

58) சாப்பிட்டு முடிந்ததும் அன்னார்,

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ هُوَ اَشْبَعَنَا وَاَرْوَانَا وَ
اَنْعَمَ عَلَيْنَا وَاَفْضَلَ

என ஓதுவார்கள்.

59) நபி (ஸல்) அவர்கள் ஒருவருடைய விருந்தை ஏற்று விருந்து உண்ட பின்னர் அவ்விருந்தளித்தவரின் ஹக்கில் கீழ் காணும் துஆவை நிச்சயம் பிரார்த்திப்பார்கள்:

اَللّٰهُمَّ بَارِكْ لَهُمْ فِيْمَا رَزَقْتَهُمْ وَاغْفِرْ لَهُمْ
وَارْحَمْهُمْ (مشكوة)

60) நபி (ஸல்) அவர்கள் கண்ணாடி, மண், தாமிரம், மரம் ஆகியவற்ருல் செய்யப்பட்ட பாத்திரங்களில் தண்ணீர் அருந்தியுள்ளார்கள்.

61) அன்ஞர் தண்ணீரை உட்கார்ந்து மூன்று மூச்சுகளில் அருந்துவார்கள். (நீர்ப்பாத்திரத்தில் மூச்சுவிடாது பாத்திரத்தை சற்று தூரம் விலக்கி மூச்சுவிடவேண்டும்) ஒவ்வொரு முறையும் பாத்திரத்தில் தங்களுடைய முபாரக்கான வாயை வைக்கும்போது 'பிஸ்மில்லாஹ்' என மொழிவார்கள். பாத்திரத்தை வாயினின்றும் அகற்றும்போது 'அல்ஹம்துலில்லாஹ்' எனக் கூறுவார்கள். கடைசி முறையாக 'அல்ஹம்துலில்லாஹ்' எனக் கூறுவதுடன் 'வஷ்ஷுக்ருலில்லாஹி' என்றும் ஓதுவார்கள்.

62) அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தண்ணீரைக் குடிக்கும்போது கடகட என மிடர் சப்தம் வெளிப்படாமல் அருந்துவார்கள்.

63) அன்ஞர் மதுரமான நீரை அருந்தப் பிரியப்படுவார்கள். எனவே தூரதூரமான இடங்களிலிருந்தும் நல்ல நீர் தருவிக்கப்பட்டது. மதீஞ மாநகரிலிருந்து இரண்டு நாள் பயணத் தொலேவிலிருந்த 'புயூத்துஸ் ஸுக்யா' என்ற இடத்திலிருந்த நீரூற்றிலிருந்து இனிய நீர் வரவழைக்கப்பட்டு வந்தது.

64) சிற்சில சமயம் தோல் துருத்தி அல்லது வாளி ஆகியவற்றில் வாய் வைத்து தண்ணீர் அருந்தியுள்ளார்கள்.

65) நம்பிராட்டிமார்களில் ஹஜ்ரத் ஆயிஷா (ரலி-அன்ஹா) அவர்களின் மீது தனிப் பிரியம் இருந்தபடியால் ஹஜ்ரத் ஆயிஷா (ரலி) பாத்திரத்தின் எப்பக்கமாக நீர் அருந்துவார்களோ அப்பக்கமாக தமது முபாரக்கான உதடுகளைப் பதித்து நபி (ஸல்) அவர்கள் நீர் அருந்துவார்கள்.

66) பானங்களில் பால் அண்ணலாருக்கு மற்றெல்லாப் பானங்களை விட மிகவும் உவப்பாக இருந்தது.

67) சில சமயம் பாலை மட்டும் பருகுவார்கள். இன்னும் சில சமயம் குளிர்ந்த நீருடன் அதனைக் கலந்து பருகுவார்கள்.

68) நபி (ஸல்) அவர்கள் ஏதேனும் பானத்தை தங்களுடைய மஜ்லிஸில் பங்கிடச் செய்வார்களானால், வயதில் முதிர்ந்தவர்களைக் கொண்டு குடிப்பாட்டுவதை ஆரம்பிக்க வேண்டுமென உத்தரவிடுவார்கள்.

69) தங்களுடைய சபையில் ஏதேனும் பானம் குடிக்கக் கொடுக்கும் சமயம், பானம் திரும்ப பாத்திரத்தில் நிரப்பி தரப்படும்போது முன்பு கடைசியாக குடித்தவரிடமிருந்தே மறுபடியும் ஆரம்பிக்க வைப்பார்கள்.

70) நபி (ஸல்) அவர்கள் தம் தோழர்களுக்கு ஏதேனும் பானத்தை குடிப்பாட்டுவார்களானால், தாம் மட்டும் கடைசியாக அப்பானத்தை குடிப்பார்கள். மேலும் ''ஒரு கூட்டத்தினருக்கு பானம் குடிப்பாட்டுபவர் கடைசியாக அதனைக் குடிக்க வேண்டும்'' என்றும் கூறுவார்கள்.

71) அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பொதுத் தண்ணீர்த் துறைகளில் —உதாரணமாக ஓடை, ஆறு, ஏரி ஆகியவற்றிலிருந்து—தண்ணீரைத் தருவித்து அதனை அருந்தக் கூடியவர்களாக இருந்தனர். இதனால் முஸ்லிம்களின் கைகள் அவற்றில் தோய்ந்ததின் பரக்கத்து தமக்குக் கிடைக்க வேண்டுமென விரும்பியதே அதற்குக் காரணமாகும்.

72) நபி (ஸல்) அவர்கள் பெரும்பாலும் கேழ்வரகு பொறிமாவை உண்டு வந்தனர்.

3

73) தேன் கலந்த பாலையும் நபி (ஸல்) அவர்க அருந்த மாட்டார்கள். அது வீண் விரயம் என்பதைச் சுட்டி காட்ட 'என்னே ஒரு பாத்திரத்தில் இரண்டு பானங்களா என வினவுவார்கள்.

74) ஒருமுறை பாதாம் பருப்பில் தயாரிக்கப்பட் (சத்து) கஞ்சி அன்னாரின் சமூகத்தில் சமர்பிக்கப்பட்டபோ 'இது செல்வந்தர்கள் அருந்தும் பானம்' எனக் கூறி அதை அருந்த மறுத்து விட்டார்கள்.

2. நபி (ஸல்) அவர்களுக்குப் பிரியமான உடை

75) அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மற்றெல்லா உடை களைக் காட்டிலும் 'கமிஸ்' என்னும் சட்டையை மிகவு உவந்து வந்தனர்.

76) சட்டையின் கைகளை மிகவும் இறுக்கமாகவு வைக்கமாட்டார்கள். அல்லது அதிகம் தளர்த்தியும் வைக் மாட்டார்கள். மாறாக இரண்டிற்கும் இடைநிலையில் வை பார்கள். கைநீளம் உள்ளங்கை பகுதி வரை நீண்டிருந்தது.

77) நபி (ஸல்) அவர்களின் பயணச் சட்டை வீட்டி அணியும் சட்டையை விட கை அளவிலும் உடல் பகுதியி அளவிலும் சிறியதாக இருந்தது.

78) நபி (ஸல்) அவர்களின் சட்டையின் கழுத்துப் பகுதி அன்னாரின் முபாரக்கான நெஞ்சின் மீது இருக்கும்.

79) சில சமயம் நபி (ஸல்) அவர்கள் தம்முடைய சட்டையின் நெஞ்சுப் பகுதியை திறந்து வைப்பார்கள். அதனால் அன்னாரின் நெஞ்சு தெளிவாக தெரியவரும். அதே நிலையில் தொழுகையையும் நிறைவேற்றுவார்கள்.

80) நபி (ஸல்) அவர்கள் சட்டை அணியும்போது முதலில் வலது கையை வலது அஸ்தீனிலும், பிறகு இடது கையை இடது அஸ்தீனிலும் நுழைப்பார்கள்.

81) நபி (ஸல்) அவர்கள் 'பைஜாமா'-வை ஒருபோதும் அணிந்தார்கள் இல்லை. மாறாக எந்நேரமும் லுங்கியையே அணிந்துள்ளார்கள். எனினும் பைஜாமா அணிவதற்காக வேண்டி வாங்கியுள்ளார்கள். மேலும் தம்முடைய தோழர்கள் அதனை அணிவதைப் பார்த்துமுள்ளார்கள்.

82) அன்னார் லுங்கியை சதாவும் தொப்புளுக்குக் கீழும் அரைக் கெண்டைக்காலுக்கும் கணுக்கால் மொளிகளுக்கும் இடையில் இருக்கும் நிலையில் அணிவார்கள். மேலும் ''எவன் தன் கால்சட்டையை கணுக்கால் மொளிகளுக்குக் கீழாக பெருமையை முன்னிட்டு தொங்க விடுகின்றானோ அவனை அல்லாஹ் மறுமை நாளில் (ஏறிட்டும்) பார்க்கமாட்டான்'' என எச்சரித்துமுள்ளார்கள்.

83) நபி (ஸல்) அவர்களின் லுங்கியின் முற்பகுதி பிற்பகுதியை விடச் சற்று கீழாக இருக்கும்.

84) அன்னார் மேலே போர்த்திய போர்வை 4 கெஜம் நீளமும், இரண்டு கெஜம் ஒரு சாண் அகலமும் கொண்டதாக இருந்தது. பூவேலை செய்யப்பட்ட போர்வை அன்னாருக்கு மிகவும் பிரியமானதாக இருந்தது.

85) சிற்சில சமயம் அன்னார் மேற்போர்வையை வலது கட்கத்தின் உள்ளிருந்து இடது தோளின் மீது படியுமாறு உடுத்திக் கொள்வார்கள்.

86) நபி (ஸல்) அவர்கள் தாம் உடுத்தும் உடைகளை (உதாரணமாக சட்டை, லுங்கி, மேற்போர்வை அல்லது காலணி ஆகியவற்றில் எதையும்) மேல் மிச்சமாக அதிகம் வைத்ததில்லை.

87) நபி (ஸல்) அவர்கள் புத்தாடைகளை உடுப்பதாயின் அவற்றை ஜும்மா நாளில் உடுப்பவர்களாக இருந்தார்கள்,

88) வெண்ணுடை அன்னருக்கு மிகவும் பிரியமானதாக இருந்தது. எனினும் வர்ண ஆடைகளில் பச்சை நிறத்தை

அன்னூர் மிகவும் உவந்துள்ளார்கள். ஆனால் பட்டு கலந்த ஆடை, மஞ்சள் நிற உடை அணிவதை நபியவர்கள் தடை செய்து வந்தனர்.

89) செஞ்சிவப்பு நிறம் அன்னாருக்கு மிகவும் வெறுப்பாக இருந்தது. மேலும் ''ஆண்களுக்கு அழகு நறுமணமே ஒழிய (உடையின்) நிறமல்ல. பெண்களுக்கு அழகு நிறமே ஒழிய மணமல்ல!'' என்றும் அருளினார்கள்.

90) எச்சமயம் அண்ணலார் (ஸல்) அவர்கள் புத்தாடை அணிவார்களோ அச்சமயம் அத்துணியின் பெயர் கூறி அல்லாஹ்வுக்கு கீழ்காணும் சொற்களினால் நன்றி கூறுவார்கள்:

اَللّٰهُمَّ لَكَ الْحَمْدُ كَمَا كَسَوْتَنِيْهِ اَسْئَلُكَ خَيْرَهُ وَخَيْرَ مَا صُنِعَ لَهُ وَاَعُوْذُبِكَ مِنْ شَرِّهِ وَشَرِّ مَا صُنِعَ لَهُ.

''அல்லாஹும்மா லகல் ஹம்து கமா கசவ்தனிஹி அஸ்அலுக்க கைஹ்ரஹூ வ கைஹ்ர மா சுனிஅ லஹூ வ அவ்துபிக மின்ஷர்ரிஹி வஷர்ரி மா சுனிஅ லஹூ''

3. அண்ணலாரின் தலைப்பாகை

91) நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தலைப்பாகை கட்டுவார்கள். மேலும் ''நமக்கும் இணை வைப்பவர்களுக்கும் இடையில் உள்ள வேற்றுமை தொப்பிகளின் மீது தலைப்பாகை அணிவதாகும்'' என்றும் அருளினார்கள்.

92) அன்னார் தலைப்பாகை கட்டாத நேரத்தில் தங்களுடைய முபாரக்கான தலை மீதும் நெற்றியின் மீதும் ஒரு துணியைக் கொண்டு கட்டிக் கொள்வார்கள்.

93) நபி (ஸல்) அவர்களின் தலைப்பாகை ஏழு கஜ நீளமுள்ளதாக இருந்தது. ''நபியவர்கள் கறுப்புத் தலைப்

பாகையை அணிந்திருந்ததைக் கண்டேன். அதன் இரு நுனிகளையும் தமது தோள் பட்டைகளுக்கிடையில் தொங்க விட்டிருந்தார்கள்'' என ஹஜ்ரத் அம்ரு இப்னு ஹுரைஸ் (ரலி) கூறுகிறார்கள்.

94) அன்னார் தலைப்பாகை கட்டினால் அதன் ஒரு நுனியை (அதாவது ஷம்லாவை) நிச்சயம் விட்டுக் கட்டுவார்கள். சிலசமயம் அந்த நுனிப்பகுதியை தம் இரு தோள் பட்டைகளுக்கிடையில் தொங்க விட்டு வந்தனர்.

95) அன்னார் ஷம்லாவை சுமார் ஒரு சாண் நீளத்திற்கு விடுவார்கள்.

96) அன்னாரின் தலைப்பாகை தலையோடு சேர்ந்து பரவலாக இருந்தது. உயர்ந்திருக்கவில்லை.

97) தலைப்பாகையைக் கட்டி அதன் நுனிப்பகுதியை முன்பக்கமாக சொருகுவதற்கு பதிலாக பின்பக்கமாக சொருகிக் கொள்வார்கள்.

98) வெய்யிலின் தகிப்பு கடுமையாக இருக்கும் சமயம் ஷம்லாவை தம் முபாரக்கான தலைமீது போட்டுக் கொள்வார்கள்.

99) 'இரக்க இயல்பு அதிகரிக்க தலைப்பாகை அணியுங்கள்' என அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஆர்வமூட்டியுள்ளார்கள். 'தலைப்பாகை அரபிகளின் கிரீடமாகும்' என்பது ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்களின் கூற்றாகும்.

4. தொப்பியின் சுன்னத்துகள்

100) நபி (ஸல்) அவர்கள் வெள்ளைத் தொப்பியை அணிவார்கள்.

101) வீட்டிலிருக்கும்போது நபியவர்கள் தலையுடன் ஒட்டிய தொப்பியை அணிவார்கள்.

102) அன்னாரின் பிரயாணத் தொப்பி உயர்ந்தும் ஓரம் தைத்ததாகவும் இருந்தது. அதனை சில சமயங்களில் தொழும் போது தமக்கு முன்னால் வைத்துக் கொள்வார்கள். [அதனால் அது சுத்ராவாக (தடுப்பாக) பயன்படும்.]

103) நபி (ஸல்) அவர்கள் வேலைப்பாடு செய்த தொப்பியையும் அணிந்துள்ளார்கள்.

5. நபி (ஸல்) அவர்களின் கணையாழி

104) அண்ணல் நபி (ஸல்) அவர்கள் வெள்ளி மோதிரத்தை அணிவார்கள். மலஜலங் கழிக்கச் சென்றால் தங்களின் மோதிரத்தைக் கழற்றி வைத்து விட்டுச் செல்வார்கள். மேலும் ஆண்கள் தங்க மோதிரம் அணிவதைத் தடை செய்தார்கள்.

105) அன்னார் மோதிரத்தை வலது இடது கைகளின் விரல்களிலும் அணிந்திருக்கிறார்கள். ஆனால் கலிமா விரலிலும் நடுவிரலிலும் அணியலாகாது எனத் தடை செய்ததாக ஹஜ்ரத் அலீ (ரலி) அறிவிக்கிறார்கள்.

106) மோதிரத்தில் பதித்த கல் சில சமயம் அபிசினியா கல் அல்லது வெள்ளியாகவே இருந்தது.

107) மோதிரத்தின் கல் பதித்த முகப்பை மேல்நோக்கி வைப்பதற்கு பதிலாக உள்ளங்கையின் பக்கமாக வைப்பது நபி (ஸல்) அவர்களின் மேலான வழக்கம்.

108) அன்னாரின் மோதிரத்தின் மீது மூன்று வரிகளில் முஹம்மது, ரசூல், அல்லாஹ் என குடைந்து வரையப் பட்டிருந்தது. கீழ்வரியில் முஹம்மது என்றும் நடுவரியில் 'ரசூல்' என்றும் மேல்வரியில் அல்லாஹ் என்றும் இருந்தது.

6. அண்ணலாரின் காலணிகள்

109) நபி (ஸல்) அவர்கள் கால் கட்டையைப் போன்ற செருப்பின் தோற்றமுடைய காலணிகளை அணிவார்கள்.

110) செருப்பை அணியும்போது முதலில் வலது காலை வலது செருப்பிலும் அடுத்து இடது காலை இடது செருப்பிலும் அணிவார்கள். செருப்பைக் கழற்றும் போது முதலில் இடது காலை கழற்றுவார்கள். பிறகு வலது காலை வெளியில் எடுப்பார்கள்.

111) அண்ணர் சிலசமயம் செருப்பை நின்றவண்ணமும், சில சமயம் அமர்ந்தும் அணிந்துள்ளார்கள்.

112) செருப்பை எடுக்கும் தேவைப்பட்டால் அண்ணர் இடது கை பெரு விரலுக்கு அடுத்த விரலைக் கொண்டு எடுப்பார்கள்.

113) அண்ணரின் செருப்பில் இரண்டு வார்கள் இருந்தன. ஒரு வார் காலின் கட்டை விரலுக்கும் அதற்கு அடுத்த விரலுக்கும் இடையில் இருக்கும். மற்றது சிறு விரலுக்கும் அதற்கு அடுத்த விரலுக்கும் இடையில் இருக்கும்.

114) அண்ணரின் செருப்பு ஒரு சாண் இரு அங்குல நீளமும், உள்ளங்காலின் அருகில் ஏழு அங்குலம் அகலமும், இரண்டு வார்களின் இடையில் பாதங்களின் மீதிருந்து இரண்டு அங்குல இடைவெளியும் இருந்தது.

. துயில்வதில், விழிப்பதில் மேற்கொண்ட மேலான ஒழுக்கங்கள்

115) அண்ணல் நபி (ஸல்) அவர்கள் முற்பகுதி இரவில் தூங்குவார்கள். மேலும் பின்னிரவின் (பாதியின்) முற்பகுதியில் படுக்கையிலிருந்து எழுந்து விடுவார்கள்.

116) இரவின் ஆரம்பத்தில் ஆழ்ந்த நித்திரையில் இருக்கும்போது வலது புறமாக ஒருக்கணித்து வலது கை உள்ளங்கையில் வலது கன்னத்தை வைத்து தூங்குவார்கள். மேலும் மும்முறை கீழ்காணும் துஆவை ஓதுவார்கள்:

اَللّٰهُمَّ قِنِيْ عَذَابَكَ يَوْمَ تَجْمَعُ عِبَادَكَ (بخاری)

தர்ஜுமா :- நாயனே! எந்த நாளையிலே உன்னுடைய அடியார்களை ஒன்று சேர்ப்பாயோ அந்த நாளையிலே உனது வேதனையை விட்டும் என்னைக் காப்பாற்றுவாயாக!

117) யாரேனும் தன் வயிற்றை தரையில் அழுத்திய நிலையில் குப்புறப் படுத்திருப்பதையோ அல்லது தூங்கு வதையோ கண்டால் மிகவும் சினந்தவர்களாக தங்களுடைய காலால் இடறி அம்மனிதரை எழுப்பி விடுவார்கள். ஒருவர் குப்புறப் படுத்திருப்பதைக் கண்ட அன்னார் 'நிச்சயம் இந்த படுக்கும் முறையை (இது ஷைத்தானுடையது) அல்லாஹ் பிரியப்பட மாட்டான்' என்று கூறினார்கள்.

118) நபி (ஸல்) அவர்கள் பேரீத்தமர ஓலை நிரப்பப் பட்ட தோல் தலையணை மீதும், பாயின் மீதும், கித்தான் நார் கயிற்றால் பின்னப்பட்ட கட்டிலின் மீதும், தோல் அல் லது வர்ண துணி ஆகியவற்றை விரித்து படுத்துறங்குவார் கள். சில சமயம் தரை மீதும் படுத்துறங்குவார்கள்.

119) நபி (ஸல்) அவர்கள் கித்தானின் மீது படுத்தால் அதனை இரண்டு மடிப்பாக மட்டும் மடித்து விரிக்குமாறு உத்தரவிடுவார்கள். அன்னார் தூங்கும் போது குறட்டையும் வெளிப்படும்.

120) நபி (ஸல்) அவர்கள் பொதுவாக படுக்கைக்குச் செல்லும் முன் ஒலுச் செய்து கொண்டு தூங்கும் வழக்க முடையவர்களாக இருந்தார்கள்.

121) இஷாவுக்கு முன்பாக நபி (ஸல்) அவர்கள் ஒரு நாளும் தூங்கியதில்லை.

122) விளக்கு இல்லாத வீட்டில் நபி (ஸல்) அவர்கள் இரவில் தூங்குவதில்லை.

123) தூங்கும்முன் வேறு ஒரு துணியைக் கொண்டு லுங்கியாக கட்டிக் கொண்டு, சட்டையைக் கழற்றி அதனைத் தொங்க விட்டு விட்டு அதற்குப் பிறகு படுக்கைக்குச் செல் வார்கள்.

124) ஒருக்கால் இரவின் ஏதேனுமொரு வேளையில் கண் விழித்தால் (மலஜலம் போன்ற) சுய தேவையை நிறை வேற்றிக் கொண்ட பின் தங்களின் முகத்தையும் இரு கைகளை யும் கழுவிக் கொண்ட பின்னர் படுத்துக் கொள்வார்கள்.

125) முழுக்கு இருக்கும் நிலையிலேயே படுத்துறங்க நாடினால் நபி (ஸல்) அவர்கள் முதற்கண் அசுத்தம்பட்ட இடத்தைக் கழுவிய பிறகு ஒலுச் செய்து கொண்டு படுத் துறங்குவார்கள்.

126) அன்னார் சிலசமயம் மல்லார்ந்தும் படுப்பார்கள். அவ்வாறு படுக்கும் போது காலின் மீது காலை வைத்து படுத் திருப்பார்கள். எனினும் கீழாடை விலகி விடாது. கீழாடை விலகி விடும் என்ற பயமிருந்தால் அவ்வாறு படுப்பதை நபி (ஸல்) அவர்கள் தடை செய்துள்ளனர்.

127) நபி (ஸல்) அவர்கள் இரவில் தூங்கச் செல்லும் போது அவர்களுடைய கட்டிலிற்குக் கீழ் ஒரு மரத்தாலான பாத்திரம் வைக்கப்படும். இரவில் விழித்தால் அப்பாத்திரத் தில் அவர்கள் சிறுநீர் கழிப்பார்கள்.

128) அன்னாரின் தலைமாட்டில் சுர்மா கூடு வைக்கப் பட்டிருக்கும். ஒவ்வோர் இரவும் படுக்கும் முன்பு சுர்மா இட்டுக் கொள்வார்கள். ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அறிவிக்கிறார்கள்: ''இஸ்மத் என்னும் சுர்மாவை நீங்கள் அவசியம் பயன்படுத்தி வாருங்கள். ஏனெனில் அது உங்களிட முள்ள சுர்மாக்களில் மேலானது. அது கண்ணை ஒளிபெறச் செய்யும். மேலும் (தலை) முடியையும் வளரச் செய்யும்'' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ரஜீன்)

129) அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் சுர்மாப் போட்டுக் கொள்ளும் ஒரு கம்பி இருந்தது. ஒவ்வோர் இரவும் அதைக் கொண்டு அவர்கள் மூன்றுமுறை வலது கண்ணிலும், மூன்று முறை இடது கண்ணிலும் சுர்மாப் போட்டுக் கொள் வார்கள்.

130) நபி (ஸல்) அவர்கள் தங்களிடம் கருப்பு நிற சுர்மா கூடு வைத்திருந்தார்கள்.

131) நபி (ஸல்) அவர்கள் சுர்மா இடுவார்களானால் ஒவ்வொரு கண்ணிலும் மும்மூன்று முறை சுர்மா கம்பியை இடுவார்கள். சில சமயம் இரண்டு இரண்டு முறை இடுவார்கள். கடைசியாக ஒரு முறை இரு கண்களிலும் இடுவார்கள்.

132) ''அண்ணல் நபி (ஸல்) அவர்கள் சுர்மாப் போட்டுக் கொள்ள விரும்பினால் மூன்று முறை வலது கண்ணில் வலது புறமிருந்து துவக்கம் செய்து வலது புறமே முடிக்கவுஞ் செய்வார்கள். பின்னர் இடது கண்ணில் சுர்மாப் போட்டுக் கொள்வார்கள்'' என ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அறிவிக்கிறார்கள். (திர்மிதீ, நஸாயீ)

133) நபி (ஸல்) அவர்கள் படுக்கைக்குச் செல்லும் முன்பு தம் வீட்டாரிடம் பொதுவான பேச்சுகளைப் பேசுவார்கள். சில சமயம் முஸ்லிம்களின் பொதுவான நடப்புகளைப் பற்றி பேசுவார்கள்.

134) ஒவ்வோர் இரவும் நபி (ஸல்) அவர்களின் வழக்கம் என்னவென்றால் அன்னார் தலையணை மீது தம் தலையை வைத்து படுத்த பிறகு 'குல்ஹுவல்லாஹு அஹத்—குல் அஊதுபிரப்பில் பலக்—குல்அஊது பிரப்பின்னாஸ்' ஆகிய சூராக்களை ஒவ்வொரு முறை ஓதி மூடிய இரு உள்ளங்கைகளுக்குள் ஊதி பிறகு விரல்களைத் திறந்து உடல் முழுவதும் தம்முடைய கைகள் எட்டுமளவு தடவிக் கொள்வார்கள். பிறகு கைகளை தலை, முகம் ஆகியவற்றின் மீது மேலிருந்து கீழ் நோக்கி தடவ ஆரம்பிப்பார்கள். இதே போன்று மும்முறை செய்வார்கள்.

135) தூக்கத்திலிருந்து நபி (ஸல்) அவர்கள் விழித்தால் கீழ்காணும் துஆவை ஓதுவார்கள் :

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِىْ اَحْيَانَا بَعْدَ مَا اَمَاتَنَا وَاِلَيْهِ النُّشُوْرُ ۝

8. நறுமணம் பூசுவதில் மேலான சுன்னத்துகள்

136) நபி (ஸல்) அவர்கள் இரவின் கடைசியில் நறுமணம் பூசக் கூடியவர்களாக இருந்தனர்.

137) தூங்கி எழுந்ததும் சுய தேவைகளை முடித்துக் கொண்டு ஒலுச் செய்வார்கள். பிறகு நறுமணத்தைத் தருவித்து தங்களின் உடைகளின் மீது தேய்த்துக் கொள்வார்கள்.

138) அன்னாரின் மேலான சமூகத்தில் நறுமணப் பொருள் அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டால் அன்னார் அதனை அவசியம் ஏற்றுக் கொள்வார்கள். நறுமணப் பொருளை (ஏற்காமல்) திருப்புவதை விரும்பமாட்டார்கள். மேலும் ''உங்களில் எவருக்கேனும் நறுமணப்பொருள் அளிக்கப்படின் அதனை அவர் (ஏற்க) மறுத்துவிட வேண்டாம். ஏனெனில் நிச்சயம் அது (நறுமணம்) சுவனபதியிலிருந்து வந்தது ஆகும்'' என அருளினார்கள்.

139) நபியவர்கள் ரைஹானின் நறுமணத்தை மிகவும் விரும்புவார்கள்.

140) மருதாணியின் பூவை நபி (ஸல்) அவர்கள் மிகவும் பிரியப்படுவார்கள்.

141) நபி (ஸல்) அவர்கள் கஸ்தூரி, சாம்பிராணி ஆகியவற்றின் மணத்தை மற்றெல்லா மணங்களைவிட அதிகம் பிரியப்பட்டார்கள்.

142) அன்னார் நறுமணத்தை தங்களுடைய முபாரக்கான தலை மீதும் தடவக் கூடியவர்களாகவும் இருந்தனர்.

9. தலை வாருவதிலும், எண்ணெய் தடவுவதிலும் மேலான சுன்னத்துகள்

143) அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தூங்கச் செல்லும் முன் மிஸ்வாக்கும் ஒலுவும் செய்து பிறகு தலை முடிகளையும் தாடி முடிகளையும் சீவுவார்கள்.

144) நபி (ஸல்) அவர்கள் பயணத்திலும் சரி ஸ்தலத்தில் இருக்கும் போதும் சரி தூங்கச் செல்லும் போது அன்னாரின் தலைமாட்டில் ஏழு வஸ்துக்கள் எக்காலமும் வைக்கப்பட்டிருக்கும். எண்ணை பாட்டில், சீப்பு, சுர்மா கூடு, கத்திரிக்கோல், மிஸ்வாக், கண்ணாடி, ஒரு சிறு குச்சி (இது தலை முதலியவற்றை சொரியப் பயன்படும்.)

145) நபியவர்கள் யானைத் தந்தத்தால் செய்யப்பட்ட சீப்பைப் பயன்படுத்தினார்கள்.

146) அன்னார் முதலில் தாடிக்கும் பிறகு தலைக்கும் எண்ணெய் நீவிய பின்னர் சீப்பைக் கொண்டு சீவுவார்கள்.

147) தாடிக்கு எண்ணெய் நீவும் போது முதலில் கழுத்துடன் ஒட்டிய தாடியின் பாகத்திலிருந்து ஆரம்பிப்பார்கள். தலைக்கு எண்ணெய் நீவும் போது முதலில் நெற்றிக்கு மேல் பாகத்திலிருந்து ஆரம்பிப்பார்கள்.

148) அன்னார் தம் வாழ்நாட்களின் பெரும் பகுதியில் தலைமுடிகளை (கிர்தா) வளர்த்தே வைத்திருந்தனர். அந்த தலை முடிகள் பிடரியில் சிலசமயம் காதின் சோணைக்கு மேற் பகுதி வரை, சில சமயம் காதின் சோணைக்கு நேர்வரை, இன்னும் சில சமயம் அதைவிட கீழாக பிடரி வரை தொங்கும்.

149) ஆரம்பத்தில் தலையில் வகிடு எடுக்காமல் அப்படியே வாரிக் கொள்வார்கள். ஆனால் பிற்கால வாழ்வில் அன்னார் தலையில் வகிடு எடுத்து வந்தனர்.

150) நபி (ஸல்) அவர்கள் அடிக்கடி அதிகமான எண்ணெய் தலைக்கு நீவும் வழக்கமுடையவர்களாக இருந்தபடியால் பெரும்பாலும் தம் முபாரக்கான தலைமீது ஒரு துணியை அணிந்திருப்பார்கள். அதனால் மற்ற துணிகளில் எண்ணெய்ப் பசை ஒட்டாமலிருக்கும். ஆனால் அந்த துணி சதாவும் எண்ணெய் படிந்ததாக இருக்கும்.

151) அன்னார் தண்ணீரால் முபாரக்கான தாடியைத் தடவி பிறகு சீவக் கூடியவர்களாகவும் இருந்தனர்.

152) நபியவர்கள் தம் திருமுகத்தை கண்ணாடியில் பார்க்கும்போது கீழ்காணும் சொற்கள் அன்னாரின் நாவி லிருந்து வெளிப்படும் :

(اَللّٰهُمَّ حَسَّنْتَ خَلْقِيْ فَحَسِّنْ خُلُقِيْ وَاَوْسِعْ عَلَيَّ فِيْ رِزْقِيْ)

10. நகம் வெட்டுவதில் முபாரக்கான முறைகள்

153) கைவிரல் நகங்களை வெட்டுவதில் நபி (ஸல்) அவர்கள் கீழ்காணும் முறையினைக் கையாண்டார்கள்: வலது கையில் முதலில் கலிமா விரலிலிருந்து ஆரம்பித்து நடு விரல், அதற்கு அடுத்த விரல், சுண்டு விரலோடு முடித்து பிறகு இடது கையின் சுண்டு விரலிலிருந்து ஆரம்பித்து அதற்கு அடுத்த விரல், நடு விரல், சுட்டு விரல், பெருவிரல் அதற்குப் பிறகு வலது கையின் பெரு விரல் என வெட்டி முடிப்பார்கள்.

154) கால் விரல் நகங்களை வெட்டுவதில் நபியவர்கள் கீழ்காணும் முறையினைக் கடைபிடித்தார்கள். முதலில் வலது கால் சிறு விரலிலிருந்து ஆரம்பித்து வரிசையாக பெரு விரல் வரை வெட்டி பிறகு இடது காலிலும் அவ்வாறே சிறு விரலிலிருந்து ஆரம்பித்து பெருவிரல் வரை வெட்டு வார்கள்.

155) நபி (ஸல்) பதினைந்து நாட்களுக்கொரு முறை நகம் வெட்டக் கூடியவர்களாக இருந்தனர்.

11. பிரயாண சுன்னத்துகள்

156) நபி (ஸல்) அவர்கள் தாமே பயணத்திற்காகத் தயாரானாலும் அல்லது பிறரை பயணம் அனுப்புவதாயினும் வியாழக்கிழமை புறப்படுவதையே பிரியப்படுவார்கள்.

157) அன்னார் பயணத்தின் போது வாகனத்தை அதி வேகமாக செலுத்துவதை விரும்புவார்கள். பயணம் நெடுந் தூரமாக இருப்பின் வாகனத்தை இன்னும் துரிதப்படுத்துவார்கள்.

158) பயணத்தின் இடையில் வழித்தங்கி முன்னேறுவதாக இருப்பின் சுப்ஹுவுடைய நேரத்தில் அன்னார் ஏதேனும் உபதேசம் செய்யும் வழக்கம் இருந்தது.

159) இடைவழியில் எவ்வளவுதான் சுருக்கமான நேரம் தங்குவதாக இருப்பினும் சரி அன்னார் எதுவரை இரண்டு ரக்அத்துகள் தொழுது கொள்ள மாட்டார்களோ அதுவரை அங்கிருந்து புறப்பட மாட்டார்கள்.

160) நபியவர்கள் வீட்டில் நுழைந்தாலும் அல்லது பயணத்தின் இடையில் ஒரு மன்ஜிலில் வழித்தங்கினாலும் இரண்டு ரக்அத் தொழுது கொள்ளாத வரை உட்கார மாட்டார்கள்.

161) இரவின் முற்பகுதியில் ஏதேனுமொரு இடத்தில் வழித் தங்கினால் நபி (ஸல்) அவர்கள் தங்களின் வலக்கரத்தின் உள்ளங்கையின் மீது வலது கன்னத்தை வைத்து வலப்புறம் ஒருக்கணித்துப் படுத்து வந்தனர்.

162) இரவின் பிற்பகுதியில் எங்கேனும் தங்குவதாக இருப்பின் வலது முழங்கையைத் தாங்கலாக ஊன்றி அதன் உள்ளங்கையில் தம் முபாரக்கான தலையை வைத்தவர்களாக ஓய்வு கொள்வார்கள்.

163) எவரேனும் பயணத்திலிருந்து திரும்பி நபி (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானால், அவரை அன்னார் கட்டி அணைத்து (முஆனகா) அவருடைய நெற்றியில் முத்தமிடுவார்கள்,

164) ஒருவரை பயணத்திற்கு வழி அனுப்புவதாக இருப்பின், அவரிடம் 'சகோதரரே! எம்மை உமது துஆக்

களில் மறந்து விடாதீர்!' என தமக்காகத் துஆச் செய்யுமாறு கேட்டுக் கொள்வார்கள்.

165) அன்னூர் பயணத்திலிருந்து திரும்பினால் இரவு நேரத்தில் வீட்டிற்கு ஒருக்காலும் செல்லமாட்டார்கள். மாறாக வழியில் எங்காவது தங்கியிருந்து விட்டு பிறகு சுப்ஹு வுடைய நேரத்தில்தான் வீட்டில் நுழைவார்கள்.

166) நபி (ஸல்) அவர்கள் எந்தப் பயணத்திலிருந்து திரும்பிய போதிலும் சரி முதலில் மஸ்ஜிதிற்குச் சென்று இரண்டு ரக்அத்துகள் தொழுது விட்டு அதற்குப் பிறகுதான் தமது வீட்டிற்குச் செல்லும் மேலான வழக்கமுடையவராக இருந்து வந்தனர்.

167) பிரயாணத்தில் எல்லோரும் சேர்ந்து செய்ய வேண்டிய வேலை ஏதுமிருப்பின், நபி (ஸல்) அவர்களும் தங்களுடைய தோழர்களுடன் சேர்ந்து அவ்வேலையில் நிச்சயம் பங்கு கொள்வார்கள். ஒரு பயணத்தில் சஹாபாக் கள் உணவு சமைக்க முனைந்த போது ஒவ்வொருவரும் தம் பொறுப்பில் ஒரு வேலையை ஏற்றனர். அப்போது நபி (ஸல்) அவர்கள் விறகு சேகரிக்கும் வேலையை தம் பொறுப்பில் ஏற்றார்கள்.

168) பயணத்திலிருந்து திரும்பி நகரில் நுழையும் சமயம் பிள்ளைகள் எதிர்பட்டால் அவர்களை தங்களுடைய வாகனத்தின் மீது ஏற்றி உட்கார வைத்துக் கொள்வார்கள். சிறு குழந்தைகளை தமக்கு முன்பாகவும் பெரிய பிள்ளைகளை தமக்குப் பின்புறமாகவும் உட்கார வைத்துக் கொள்வார்கள்.

169) பிரயாணத்திலோ அல்லது ஜிஹாதிலோ செல் லும்போது நபி (ஸல்) அவர்கள் தினமும் ஒரு சஹாபியை தம்முடன் தம் வாகனத்தில் அமர்த்திக் கொள்வார்கள்.

170) அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பயணத்திற்காக புறப்பட்டு வாகனத்தில் ஏறி நன்கு அமர்ந்து கொண்ட பிறகு

மும்முறை 'அல்லாஹு அக்பர்' என மொழிந்த பிறகு கீழ் காணும் துஆவை ஓதுவார்கள்,

سُبْحَانَ الَّذِىْ سَخَّرَ لَنَا هٰذَا وَمَا كُنَّا لَهٗ
مُقْرِنِيْنَ وَاِنَّا اِلٰى رَبِّنَا لَمُنْقَلِبُوْنَ ۝

اَللّٰهُمَّ اِنَّا نَسْئَلُكَ فِىْ سَفَرِنَا هٰذَا الْبِرَّ وَ
التَّقْوٰى وَمِنَ الْعَمَلِ مَا تَرْضٰى اَللّٰهُمَّ هَوِّنْ
عَلَيْنَا سَفَرَنَا هٰذَا وَاطْوِلَنَا بُعْدَهٗ اَللّٰهُمَّ اَنْتَ الصَّاحِبُ
فِى السَّفَرِ وَالْخَلِيْفَةُ فِى الْاَهْلِ اَللّٰهُمَّ اِنِّىْ اَعُوْذُبِكَ
مِنْ وَعْثَاءِ السَّفَرِ وَكَاٰبَةِ الْمَنْظَرِ وَسُوْءِ الْمُنْقَلَبِ
فِى الْمَالِ وَ الْاَهْلِ وَاَعُوْذُبِكَ مِنَ الْحَوْرِ بَعْدَ
الْكَوْرِ وَدَعْوَةِ الْمَظْلُوْمِ

171) பிரயாணத்திலிருந்து திரும்பியபோது மேற்கண்ட அதே துஆவை ஓதிய பிறகு கீழ்வரும் துஆவையும் மேற்கொண்டும் ஓதிக் கொள்வார்கள் :

اٰئِبُوْنَ تَائِبُوْنَ عَابِدُوْنَ لِرَبِّنَا حَامِدُوْنَ

172) உயரமான இடத்தில் வாகனம் செல்லும் போது மும்முறை 'அல்லாஹு அக்பர்' எனக் கூறி பிறகு,

اَللّٰهُمَّ لَكَ الشَّرَفُ عَلٰى كُلِّ شَرَفٍ وَلَكَ الْحَمْدُ عَلٰى كُلِّ حَالٍ

என ஓதுவார்கள்.

173) தாழ்ந்த இடத்தில் வாகனம் இறங்கும்போது மும்முறை 'சுப்ஹானல்லாஹ்' எனக் கூறுவார்கள்.

174) வாகனத்தில் ஏறும்போது (வலது) காலை முன் வைத்து 'பிஸ்மில்லாஹ்' எனக் கூறுவார்கள்.

175) பிரயாணத்தின் இடையில் இரவு நேரம் வந்து விடுமேயானால் அண்ணலார் (ஸல்) அவர்கள் கீழ்காணும் துஆவை ஓதுவார்கள்:

يَا أَرْضُ رَبِّي وَرَبُّكِ اللهُ أَعُوذُ بِاللهِ مِنْ شَرِّكِ
وَشَرِّ مَا خُلِقَ فِيكِ وَشَرِّ مَا يَدِبُّ عَلَيْكِ وَأَعُوذُ
بِاللهِ مِنْ أَسَدٍ وَأَسْوَدَ وَمِنَ الْحَيَّةِ وَالْعَقْرَبِ
وَمِنْ شَرِّ سَاكِنِ الْبَلَدِ وَمِنْ وَالِدٍ وَمَا وَلَدَ

176) ஓர் ஊரில் அன்னார் தங்க நாடுவார்களேயானால் அவ்வூரை தூரத்திலிருந்து பார்த்ததும் மும்முறை 'அல்லாஹும்மா பாரிக்லனா Fiஹா' என மொழிந்து பிறகு அவ்வூரில் நுழையும் போது,

اَللّٰهُمَّ ارْزُقْنَا جَنَاهَا وَحَبِّبْنَا إِلَى أَهْلِهَا وَ
حَبِّبْ صَالِحِي أَهْلِهَا إِلَيْنَا ط (حصن عن الطبراني)

என ஓதுவார்கள்.

177) பெருமானார் (ஸல்) அவர்கள் ஒருவரை பயணம் அனுப்பும்போது கீழ்காணும் துஆவை ஓதுவார்கள்;

4

أَسْتَوْدِعُ اللّٰهَ دِيْنَكَ وَأَمَانَتَكَ وَخَوَاتِيْمَ عَمَلِكَ

178) எம்பெருமானார் (ஸல்) அவர்கள் ''இறைவா! என் உம்மத்தினருக்கு பகலின் துவக்கத்தில் பரக்கத்து அளிப்பாயாக!'' என இறைஞ்சுவார்கள். மேலும் சிறிய அல்லது பெரிய ஜமாஅத்தை அனுப்புவதாயிருந்தால் பகலின் ஆரம்பத்தில் (காலையில்) தான் அனுப்பி வைப்பார்கள். ''பிரயாணத்திற்கு மூவர் புறப்பட்டால் அவர்களில் ஒருவரை அமீராக ஏற்படுத்திக் கொள்ளவும்'' என்றும் அருளுவார்கள்.

179) அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பிரயாணத்திலிருந்து திரும்பி தம் வீட்டாரிடம் செல்லும் போது,

أَوْبًا أَوْبًا لِرَبِّنَا تَوْبًا لَا يُغَادِرُ عَلَيْنَا حَوْبًا

என ஓதுவார்கள்.

12. சுய தேவை நிறைவேற்றலின் முறைகள்

180) அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மலக்கூடத்தில் நுழையும் போது இடது காலை முதலில் உள்ளே வைத்து செல்வார்கள். வெளியே வரும்போது வலது காலை முதலில் வெளியே எடுத்து வைத்து வருவார்கள்.

181) மலக்கூடம் செல்லும் முன் கீழ்காணும் துஆவை ஓதிக் கொள்வார்கள்:

اَللّٰهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنَ الْخُبُثِ وَالْخَبَائِثِ

182) மலக்கூடத்திலிருந்து வெளியே வரும் போது கீழ் காணுமாறு ஓதுவார்கள்:

غُفْرَانَكَ۔ اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِىْ اَذْهَبَ
عَنِّى الْاَذٰى وَعَافَانِىْ ۔ مشكوة

183) மலஜலம் கழிக்க உட்காரும் போது தரைக்கு சமீபித்து உட்காராதவரை அன்னார் தம் ஆடையை அகற்ற மாட்டார்கள்.

184) மலஜலம் கழிக்க வஞெந்திர வெளியில் செல்ல நேரிட்டால் பெருமானார் (ஸல்) அவர்கள் மற்றவர்களின் பார்வையிலிருந்து மறைந்து விடும் அளவு தொலைதூரம் சென்று விடுவார்கள். சில சமயம் புறநகரிலிருந்து சுமார் இரண்டு கல் தொலைதூரம் சென்று மலஜலம் கழித்துத் திரும்புவார்கள்.

185) அன்னார் சிறுநீர் கழிக்க நாடினால் மிருதுவான தரையைத் தேடி சிறுநீர் கழிக்க உட்காருவார்கள். அவ்வாறு மிருதுவான தரை இல்லா விட்டால் ஒரு குச்சியால் அல்லது வேறு வஸ்துவால் கெட்டியான தரையை கிளறி மிருது வாக்கிய பிறகு அங்கு சிறுநீர் கழிப்பார்கள்.

186) அன்னார் மலங்கழிக்க செல்லும் போது காலில் செருப்பு அணிந்து, தலையை மூடிமறைத்து, கணையாழியைக் கழற்றி வைத்து விட்டு பிறகு செல்வார்கள்.

187) அன்னார் தம் மனைவிமார்களை மருவும் போதும் தம்முடைய முபாரக்கான தலையை அவசியம் மறைக்கக் கூடியவர்களாக இருந்தனர்.

188) அன்னார் சிறுநீர் கழிக்கும்போது குத்துக்காலாக உட்கார்ந்து தொடைகளுக்கு இடையில் அகலமான இடைவெளி இருக்கும் நிலையில் உட்காருவார்கள்.

189) மலஜலம் கழித்த பிறகு நீரால் கழுவி சுத்தம் செய்து தம் இடது கையை மண்ணில் தேய்த்து கழுவி சுத்தம் செய்வார்கள்.

190) மலஜலம் கழிக்க உட்காரும்போது இடை மறைப்பாக மண் அல்லது மணல் மேடு, அல்லது கற்குவியல் அல்லது ஏதேனும் பேரீத்தமரம் போன்றவை இருப்பதை மிகவும் விரும்புவார்கள்.

191) நபி (ஸல்) அவர்கள் மலஜலம் கழிக்க உட்காரும்போது தங்களுடைய முகமோ அல்லது முதுகோ கிப்லா திசையில் இருக்கும் நிலையில் உட்காரமாட்டார்கள்.

192) சுயதேவையை முடித்து சுத்தம் செய்ய அன்னார் மண் டேலா கட்டிகளை அவசியம் தம்முடன் எடுத்துச் செல்வார்கள். அவை எண்ணிக்கையில் ஒற்றைப்படையாக இருக்கும்.

193) அண்ணல் நபி (ஸல்) அவர்கள் எலும்பு, விட்டை, அடுப்புக்கரி ஆகியவற்றைக் கொண்டு மலம் கழித்த பின் துப்புரவு செய்வதை தடை செய்தனர்.

13. தும்மலின்போது மேலான முறைகள்

194) எம்பெருமானார் (ஸல்) அவர்கள் தும்மினால் 'அல்ஹம்துலில்லாஹ்' என மொழிவார்கள். அப்பொழுது சபையிலிருப்பவர் எவரேனும், 'யர்ஹமுகல்லாஹ்' எனக் கூறினால் அதற்கு அன்னார் 'யஹ்தீகுமுல்லாஹு வ யுஸ்லிஹு பாலகும்' என்பதாக மறுமொழி கூறுவார்கள். மேலும் அன்னார், 'உங்களில் ஒருவர் தும்மிய போது அல்லாஹ்வைப் புகழ்ந்தால் நீங்களும் அவருக்கு மறுமொழி பகருங்கள். அவர் அல்லாஹ்வைப் புகழவில்லையானால் நீங்களும் அவருக்கு மறுமொழி கூறுதீர்கள்' என்றும் அருளியுள்ளார்கள். ஒருவர் தும்மிய பிறகு 'அல்ஹம்துலில்லாஹ்' எனக் கூறவில்லையானால் நபி (ஸல்) அவர்களும் பதில் கூற

மாட்டார்கள். அம்மனிதர் நினைவுபடுத்தி முறையிட்டா லும் அன்னார் ''சகோதரரே! நீர் தும்மலுக்கு பிறகு அல் லாஹ்வை மறந்து விட்டீர்! எனவே நாமும் உம்மை மறந்து விட்டோம்' என பதில் கூறுவார்கள்.

195) அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு தும்மல் வந்தால் தங்களின் இரு கைகளாலோ அல்லது துணியாலோ முகத்தை மூடிக் கொள்வார்கள்.

196) அன்னார் தும்மலை மிகவும் தாழ்ந்த சப்தத்துடன் வெளிப்படுத்துவார்கள். மேலும் அதனையே விரும்பக் கூடிய வர்களாகவும் இருந்தார்கள்.

197) மூன்று முறை தும்மலுக்கு பதில் கூறுவார்கள். அதற்கு பிறகும் ஒருவர் தும்மினால் அன்னார் ''அர்ரஜுலு மஜ்கூமும்—அதாவது இம்மனிதருக்கு தடுமம் (ஜலதோஷம்) உண்டாகி விட்டது. (எனவே இனி பதில் கூற வேண்டிய அவசியமில்லை)'' எனக் கூறி விடுவார்கள்.

198) மற்ற மதத்தவர் தும்மியபோது அண்ணலார் (ஸல்) 'யஹ்தீகுமுல்லாஹு வ யுஸ்லிஹு பாலகும்'' என்பதை மட்டும் கூறுவார்கள். 'யர்ஹமுகல்லாஹ்' எனக் கூறுவதை விரும்பமாட்டார்கள்.

குறிப்பு :- (தும்மலுக்கு பிறகு அல்லாஹ்வைப் புகழ் வதிலுள்ள தாத்பரியம் என்னவென்றால், தும்மல் ஏற்பட்ட தும் இருதய துடிப்பு ஒரு வினாடி அப்படியே நின்று விட்டு மறுபடியும் இயங்குகிறது. அதற்காக நன்றி செலுத்தும் வகையில்தான் அல்ஹம்துலில்லாஹ் என மொழிய வேண்டு மென சூபியாக்கள் விளக்கம் தருகிறார்கள்.)

14. நடை பாதை

199) முஸ்லிம்கள் செல்லும் பாதையிலிருந்து தீமை விளைவிக்கும் பொருட்களை அப்புறப்படுத்துங்கள்.

(அல்ஹதீஸ்)

200) வழியின் கடமைகளை நிறைவேற்றுங்கள் என நபி (ஸல்) அவர்கள் நவில தோழர்கள் 'நாயகமே! வழியின் கடமைகள் யாவை?' என விசாரித்தனர். அதற்கு அன்னார் 'பார்வையைத் தாழ்த்தி, பிறருக்கு துன்பம் விளைவிக்காது, ஸலாமிற்கு மறுமொழி பகர்ந்து, நல்லதை ஏவி தீயதை தடை செய்து வரவேண்டும்' என மொழிந்தார்கள்.

[ஹஜ்ரத் அபூ ஸயீதில் குத்ரி (ரலி); நூல் : புகாரி]

201) மேலும் துன்பத்திற்குள்ளானவர்களுக்கு உதவி புரிந்து, வழி தப்பியவர்களுக்கு வழிகாட்டி, வலது புறமாக நடந்து செல்வதும் அவசியம்.

15. நாயகம் (ஸல்) அவர்களின் நடை

202) ஒருவர் மேட்டிலிருந்து கீழ்நோக்கி இறங்குவது போன்று நபி (ஸல்) அவர்கள் நடக்கும்போது தங்களின் உடலை முன் சாய்த்து நடப்பார்கள்.

203) அன்னார் நீண்ட நீண்ட எட்டாக எடுத்து வைத்து நடப்பார்கள். பாதங்களை (தரையில்) இழுத்து இழுத்து நடக்க மாட்டார்கள்.

சாதாரண நடையுடைய ஒருவர் அன்னாருடன் சேர்ந்து நடக்க முடியாத அளவு வேகமாக நடப்பார்கள். ஹஜ்ரத் அபூஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்களைவிட நடையில் மிகவும் சுறுசுறுப்பாக நடக்கும் வேறு எவரையும் நான் கண்டதில்லை; நிச்சயமாக பூமிதான் அவர்களுக்கு சுருட்டப்படுகிறது போன்றிருக்கும். அன்னாரோடு நாங்கள் நடக்க நேரிட்டால் எங்கள் ஆன்மாக்களுக்கு பெரும் சிரமம் அளித்து நடப்போம். அவர்களோ சாதாரணமாக நடந்து விடுவார்கள்.

204) அன்னார் நடக்கும்போது உடலைத் தளர்த்தி நடக்கமாட்டார்கள். மாறாக உடலைத் திரட்டி சுறுசுறுப்புடன் நடப்பார்கள்.

205) அன்னார் சஹாபாக்களுடன் நடந்தால் எல்லாத் தோழர்களையும் தங்களுக்கு முன்னால் நடக்கவிட்டு தாம் மட்டும் பின்னால் நடந்து செல்வார்கள். மேலும் 'எனக்கு பின்னால் மலக்குகள் நடந்துவர விடுங்கள்!' என்றும் அருளு வார்கள்.

206) நடக்கும்போது இடம்வலம் ஒருக்காலும் பார்க்க மாட்டார்கள். இக்காரணத்தை முன்னிட்டே அன்னாரின் மேற்போர்வை சிற்சில சமயம் மரஞ்செடி போன்ற வஸ்துக் களில் சிக்கிக் கொள்ளும்.

207) அன்னார் நடக்கும் வேளையில் எதையேனும் திரும் பிப் பார்க்கும் அவசியம் ஏற்பட்டால் தமது முழு உடலை யும் திருப்பிப் பார்ப்பார்களே தவிர கழுத்தையோ அல்லது கண்களையோ மட்டும் திருப்பமாட்டார்கள்.

208) நடக்கும்போது சிலசமயம் தங்களுடைய தோழர் களின் கையைப் பிடித்தவர்களாகவும் நடப்பார்கள்.

209) அன்னார் நடக்கையில் தமது லுங்கியை பின் பக்கமாக (சற்று) உயர்த்திக் கொள்வார்கள்.

16. உரையாடலில் அன்னாரின் உயர் பண்பாடுகள்

210) அண்ணல் நபி (ஸல்) அவர்கள் உரையாடும் போது சொற்களை மிகவும் நிறுத்தி நிறுத்தி நிதானமாக மொழிவார்கள். அதனால் கேட்பவர் அவற்றை எளிதாக நினைவு படுத்தி மனதில் நிறுத்திக் கொள்வர். சொல்லப் போனால் எவரேனும் அன்னார் மொழியும் சொற்களை எண் ணிக் கணக்கிட விரும்பினால் அவ்வாறே எண்ணவுஞ் செய்ய லாம்.

211) உரையாடலில் சில சமயம் நபி (ஸல்) அவர்கள் ஒரு பேச்சை மும்முறை திரும்பத் திரும்பச் சொல்வார்கள்.

212) அன்னார் பேசும்போது அதிகமாக வானத்தின் பக்கம் தங்களுடைய பார்வையைச் செலுத்தி வந்தனர்.

213) எந்த விஷயத்தை வெளிப்படையாகச் சொல்வது பண்பாட்டிற்கு முரண்பட்டதோ அவ்விஷயத்தை இடுகுறிப் பெயரால் குறிப்பிட்டுச் சொல்வார்கள்.

214) ஒரு விஷயத்தைப் பற்றி வலியுறுத்திக் கூற நாடுவார்களேயானல் அதுசமயம் அன்ஞர் சாய்ந்து அமர்ந் திருந்தால், நிமிர்ந்து உட்கார்ந்தவர்களாக குறிப்பாக அச் சொல்லே அல்லது அவ்வார்த்தையை திரும்பத் திரும்ப மொழிவார்கள்.

215) பேசும்போது பெருமாஞர் (ஸல்) அவர்கள் புன் முறுவலித்தவர்களாக மிக்க அன்பும் வாஞ்சையும் பொங்க பேசுவார்கள்.

216) சபையினரை ஏதேனுமொரு விஷயமாக அச் சுறுத்த நாடினல் அவ்விஷயத்தை நாவால் சொல்லிக் கொண்டே தங்களுடைய திருக்கரங்களே தரையில் தேய்ப் பார்கள்.

217) அன்ஞர் பேசிக் கொண்டிருக்கும் போது இடை யில் ஏதேனுமொரு வஸ்துவின் பக்கல் சுட்டிக் காட்ட நாடி ஞல் தம்முடைய முழு கையையும் அப்பக்கல் காட்டுவார் களே தவிர சுட்டு விரலால் மட்டும் சமிக்ஞை செய்ய மாட்டார்கள்.

218) நாயகம் (ஸல்) அவர்கள் பேச்சு வார்த்தைகளுக் கிடையில் ஏதேனுமொரு விஷயமாக ஆச்சரியமடைந்தால் தமது உள்ளங்கையை திருப்பி விடுவார்கள்.

219) சிலசமயம் பேச்சுவார்த்தைகளுக்கிடையில் தமது ஆச்சரியத்தை வெளிப்படுத்த வலது உள்ளங்கையில் இடது கை பெருவிரலின் உள்பாகத்தின் மீது அடிப்பார்கள்.

220) அன்ஞர் ஆச்சரியத்தின்போது தலே அசைப்பார் கள். மேலும் உதடுகளேப் பற்களால் கடிப்பார்கள்.

221) அன்ஞர் ஆச்சரியத்தின் சமயம் கையால் தமது துடையின் மீது அடிப்பார்கள்.

222) ஏதேனும் கவலை அல்லது சிந்தனையில் ஆழ்ந்த சமயம் தரையை குச்சியால் கிளறிக் கொண்டிருப்பார்கள்.

223) ஒரு விஷயத்தைப்பற்றி அதிகம் விளக்கம் தர வேண்டிய அவசியம் ஏற்பட்டால் தமது முபாரக்கான கை அல்லது விரலின் சைகையினுல் அவ்விஷயத்தை விளக்கு வார்கள். உதாரணமாக ஏதேனும் இரு விஷயங்கள் ஒன்ருே டொன்று சேர்ந்திருப்பதைக் காட்ட நாடினுல் கலிமா விரலை யும் நடுவிரலையும் இணைத்துக் காட்டுவார்கள். அல்லது ஒரு விஷயம் உறுதியானது எனச் சொல்ல நாடினுல் ஒரு கை விரல்களை மறுகை விரல்களில் நுழைத்துக் காட்டுவார்கள்.

224) முக்கியமான பேச்சு வார்த்தைகளின் சமயம் ஒரு சாய்மானத்தில் சாய்ந்து அமர்ந்தவர்களாக வலது கையை இடது கையின் மீது வைத்து; வலது கை விரல்களை இடது கை விரல்களுக்குள் மேற்புறமாக நுழைய வைத்துக் கொள் வார்கள்.

225) எவரேனும் நின்ற வண்ணம் ஏதேனுமொரு விஷயமாக விசாரித்தால் நபியவர்கள் அதனை விரும்ப மாட்டார்கள். மேலும் மிக்க ஆச்சரியமாக அம் மனிதரின் பக்கம் பார்ப்பார்கள்.

226) நபி (ஸல்) அவர்கள் தமது நாவை வீண்பேச்சு களை விட்டும் தற்காத்து வந்தனர். மேலும் ஜனங்களை நஷ்ட மளிக்கும் பேச்சுகளை பேசாது விட்டு விடும்படி எச்சரிக்கை செய்தும் வந்தனர்.

227) ''(கருத்துக்களை விட்டு விட்டு) சொல்லி(ன் அலங் காரத்தி)ல் மூழ்கி விடுபவர்கள் நாசமாகட்டும்'' என நபி (ஸல்) அவர்கள் மும்முறை மொழிந்தனர். (அறிவிப்பவர்: இப்னு மஸ்ஊது (ரலி); நூல்: முஸ்லிம்)

17. துஆ சம்பந்தமாக

228) அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பெரும்பாலும் ''சுப்ஹான ரப்பியல் அஃலா அல்வஹ்ஹாப்'' என்ற சொற் களுடன் துஆச் செய்வதை ஆரம்பிப்பார்கள்.

229) துஆவின் துவக்கத்திலும், இறுதியிலும், சில சமயம் துஆவின் நடுவிலும் பெரும்பாலும் அன்னார் கீழ்க் காணும் துஆவை சேர்த்துக் கொள்வார்கள்.

رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً وَفِي الْآخِرَةِ حَسَنَةً
وَقِنَا عَذَابَ النَّارِ

230) நபி (ஸல்) அவர்களுக்கு ஏதேனுமொரு விஷயத்தில் மிக அதிகமான சஞ்சலமும் கவலையும் மிகைத்து விடுமாயின் (அன்னார் உடன்) விரிப்பை விரித்து விடுவார்கள். எழுந்து நின்று கொள்வார்கள். மேலும் துஆவிற்காக தங்களுடைய இரு பொன்னன கரங்களையும் அவர்களுடைய கட்கத்தின் வெண்மை கூட தெரியுமளவிற்கு உயர்த்திக் கொள்வார்கள்.

231) அன்னார் அல்லாஹ்விடம் நலவை வேண்டி இறைஞ்சினால் துஆவில் தங்களுடைய உள்ளங்கைகளை தம் திருமுகத்தின் பக்கமாக வைப்பார்கள். ஏதேனும் முஸீபத்திலிருந்து கார்மானம் தேடினால் கைகளின் பின்புறத்தை தங்களுடைய திருமுகத்தின் பக்கமாக வைப்பார்கள்.

232) துஆக் கேட்டு முடித்த பிறகு தமது இரு கரங்களையும் தம்முடைய திருமுகத்தில் தடவிக் கொள்வார்கள். மேலும் "நீங்கள் அல்லாஹ்விடம் உங்களின் கையேந்தி உள்ளங்கைகளினால் இறைஞ்சுங்கள். புறங்கைகளால் அவனிடம் இறைஞ்சாதீர். (இறைஞ்சிய பின்) உங்களின் முகங்களை அக்கரங்களினால் தடவிக் கொள்ளவும்." என அருளினார்கள். [அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ் (ரலி)]

233) துஆ, இஸ்திஃபாரின் வார்த்தைகளை மும்மூன்று முறை மொழிவார்கள்.

234) நபி (ஸல்) அவர்கள் பிறருக்காக துஆச் செய்வதாக இருந்தால் முதற்கண் தமக்காக துஆச் செய்த பிறகு பிறருக்

காக துஆச் செய்வார்கள். மேலும் அன்னர் ''மறைவர்கி இருக்கும் ஒருவருக்காக மறைவாக இருக்கும் மற்ருெருவர் செய்யும் துஆவை விட அதிவிரைவாக ஒப்புக்கொள்ளப்படும் இறைஞ்சுதல் வேருென்றுமில்லை'' என அருளினுர்கள்.

235) சில சமயம் அன்னர் துஆவில் வானத்தின் பக்க மாக தமது கைகளை உயர்த்துவார்கள். அந்த உயர்த்துதல் எவ்வாறிருக்குமென்ருல் கைகளின் உட்பாகம் தரையை நோக்கியும் புறங்கை வானத்தை நோக்கியும் இருக்கும்.

18. பிரசங்கத்தின்போது மேற்கொண்ட மேலான வழிமுறைகள்

236) அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மஸ்ஜிதில் பிரசங் கம் புரிந்தால் அஸா கோலின் மீது ஊன்றியவர்களாக நின்று பயான் செய்வார்கள். ஜிஹாத் மைதானத்தில் உபதேசிப்ப தாக இருந்தால் வில்லின் மீது ஊன்றி நின்றவர்களாக உப தேசிப்பார்கள்.

237) பிரசங்கம் செய்யும் போது அன்னரின் உடல் இடதுபுறமும் வலதுபுறமுமாக அசையும். உதாரணங்கள் சொல்லி விளக்கும்போது அன்னர் தங்களுடைய முபாரக் கான கைகளை விஷயத்திற்குத் தகுந்தாற்போல் அசைப் பார்கள்.

238) அன்னர் உபதேசத்தை மிம்பர் மீதும் செய்வார் கள். வாகனத்தின் மீது இவர்ந்தவாறும் செய்வார்கள்.

239) பிரசங்கம் அல்லது தீனுடைய விஷயங்களைக் கற்றுத்தரும் மஜ்லிசுகள் குறிப்பிட்ட விசேஷமான சஹா பாக்களுக்காக அநேகமாக ஒவ்வொரு தொழுகைக்குப் பிறகும்—அதிலும் குறிப்பாக சுப்ஹு தொழுகைக்குப் பிறகு—நடைபெறும். எனினும் பொதுமக்களின் பலனைக் கருதி ஒரு பொதுவான மஜ்லிசும் சிற்சில சமயங்களில் கூட்டப்படும்.

240) பிரசங்கத்தின் ஊடே ஒரு விஷயத்தைப் பற்றி அதிகம் வலியுறுத்திச் சொல்ல வேண்டியிருந்தால், அது சமயம் ''வல்லதீ நப்ஸி பியதிஹி''—அதாவது ''எவனுடைய கையில் என்னுடைய உயிர் இருக்கிறதோ அந்த இறைவன் மீது ஆணையாக'' என்ற சொற்களை பிரயோகிப்பார்கள்.

19. தம் தோழர்களுடன் இனிமையாக பழகிய முறை

241) அண்ணல் நபி (ஸல்) அவர்களின் திருச் சபையில் அடக்கம், அமைதி, கண்ணியம், கம்பீரம் ஆகியவற்றின் சூழ்நிலை எந்நேரமும் நிலைத்திருந்தாலும் அன்னாரின் இனிமையான மகிழ்வூட்டும் அறுங்குணங்களின் பிரதிபலிப்பால் அந்த பரக்கத்தான சபை சந்தோஷம் நிரம்பிய சபையாகிவிடும். சஹாபாக்கள் கூறுவதாவது: நாங்கள் ரசூலுல்லாஹி (ஸல்) அவர்களின் கூட்டுறவில் அடக்கமாகவும், அமைதியாகவும் எங்கள் தலைமீது பறவை உட்கார்ந்திருப்பது போல் அசைவற்று அமர்ந்திருப்போம். (பறவைகள் தலைமீது இருக்கும் பொழுது சிறிது அசைந்தாலும் அவை பறந்து சென்று விடும். அந்த அளவு கண்ணியமாக மஜ்லிசில் இருப்போம்) அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஒருபுறம் நபித்துவத்தின் கண்ணியத்தைப் பேணியவர்களாக உபதேசம் புரிதல், தீனைக் கற்றுத் தருதல் போன்ற அலுவல்களில் மூழ்கியவர்களாய் இருந்தாலும் மறுபுறம் அன்னார் தங்களுடைய சஹாபாக்களுடன் வேற்றுமைப் பாராட்டாத நட்புடன் சகஜமாக பழகி கலந்துறவாடுவார்கள். அன்னாரின் முபாரக்கான மஜ்லிசு அதிகமான நேரம் தீனின் ஒரு கல்விக் கூடமாக இருந்த போதிலும் சிறிது நேரம் நேசத்துடன் அன்பொழுக கலந்துறவாடும் அன்பர்களின் குழாமாகவும் மாறிவிடும். அந்நேரத்தில் பொது நடப்புகள் பற்றியும், அன்றுடம் நடைபெறும் வீட்டு விஷயங்கள் பற்றியும் பேச்சுப் பிரஸ்தாபங்கள் இருக்கும். பெருமானார் (ஸல்) சஹாபாக்களுடனும், சஹாபாக்கள் பரஸ்பரம் தமக்குள்ளும் சகஜமாக பேசிக் கொள்வார்கள். இங்கு நாம் கவனிக்க வேண்டிய விஷயம் அவர்கள்

தம் தோழர்களுடன் அன்யோன்யமாக எவ்வாறுபழகினார்கள் என்பதைத்தான்.

இன்று நம்முடைய செயல்களும் எண்ணங்களும் முற்றிலும் மாறிவிட்டன. செயல்களில் நடுநிலைமையைக் கையாள்வதை நாம் விட்டு விட்டோம். நாம் சாந்தமானவர்களாக மாறினால் சகஜத்தன்மையும், மனம் விட்டு பழகும் தன்மையும் நம்மை விட்டு காத தூரம் பறந்து சென்று விடுகிறது. சகஜமாக பழக ஆரம்பித்து விட்டாலோ கண்ணியம், உயர் பண்பாடுகள் நம்மை விட்டு காத தூரம் விலகிச் சென்று விடுகின்றன. எனவே அண்ணலாரின் அருமையான முன் மாதிரியை நமது முன்னோடியாக வைத்து செயல்படுவது அவசியம். அன்னார் சகஜமாக பழகியதற்கான ஓர் உதாரணம்: ஒரு சமயம் சஹாபாக்கள், ''நாயகமே! தாங்களும் வேடிக்கையாய் பேசுகின்றீர்களே!'' என வியந்து கேட்டதற்கு அன்னார், ''ஆம்! நிச்சயமாக அவ்வாறுதான்! ஆனால் என்னுடைய வேடிக்கைப் பேச்சு பூரணமாக உண்மை நிறைந்ததும், சத்தியமுமாகும்'' என பகன்றார்கள். ஆனால் இன்று நாம் பேசும் வேடிக்கைப் பேச்சில் பொய்யும், புறமும் பழியும், பிறரை குத்திக் காட்டுதலும் கலந்து இருக்கும்.

242) ஒரு முறை மூதாட்டி ஒருவர் பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி, ''நாயகமே! அல்லாஹ் எனக்கு சுவர்க்கம் அளித்திடுமாறு தாங்கள் துஆச் செய்யுங்கள்!'' என வேண்டிக் கொண்டார். அதற்கு அன்னார் ''மூதாட்டிகள் சுவர்க்கம் புக மாட்டார்கள்!'' எனக் கூறி விட்டு தொழுகச் சென்று விட்டார்கள். இந்த பதிலைக் கேட்ட அம் மூதாட்டி அழுது கண்ணீர் சிந்தலானார். நபி (ஸல்) அவர்கள் தொழுகையை முடித்துக் கொண்டு திரும்பிய போது ஹஜ்ரத் ஆயிஷா (ரலி—அன்ஹா) ''யா ரசூலுல்லாஹ்! கிழவிகள் சுவனம் புகமாட்டார்கள் என்ற தங்களின் பதிலைக் கேட்டதிலிருந்து இம் மூதாட்டி அழுது கொண்டிருக்கிறார்!'' என அறிவிக்க, அன்னார் ''கிழவிகள் குமரிப்பெண்

களாக மாறி சுவனம் புகுவார்கள் என்ற செய்தியை அவரிடம் சொல்லிவிடும்'' என மொழிந்தார்கள்.

243) ஒரு சஹாபி நபி(ஸல்)அவர்களின்சமூகத்தில்ஆஜ ராகி தமக்கு வாகனமாக பயன்தரும் ஓர் ஒட்டகத்தைத் தரு மாறு வேண்டினார். அதற்கு அன்னார்'உமக்குவாகனத்திற்காக ஓர் ஒட்டகைக் குட்டியை அளிப்பேன்' எனக் கூறினார்கள். ஒட்டகைக் குட்டி எவ்வாறு சவாரிக்குப் பயன்படும் என வியந்த அவர் ''யா ரசூலல்லாஹ் (ஸல்)! ஒட்டகைக்குட்டி எனக்கு என்ன பயன் தரும்?'' என வினவ, அன்னார் ''ஒட்டகை குட்டியாக ஈன்றெடுக்காத எந்த ஓர் ஒட்டகமும் உள்ளதோ?'' என வினயமாக விடையளித்தார்கள்.

244) நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஜாஹிர் என்றொரு கிராமவாசி தோழராக இருந்தார்கள். அவர்கள் பெரும்பாலும் நபி (ஸல்) அவர்களுக்கு அன்பளிப்புகளை அனுப்பி வைத்துக் கொண்டிருப்பார்கள். ஒரு நாள் அந்த சஹாபி பஜாரில் விற்பனை செய்து கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக நபி[ஸல்]அவர்கள் அவ்வழியேவருகை தந்தார்கள். அத்தோழரைக் கண்டதும் மகிழ்ந்தவர்களாக மெல்ல அணுகிச் சென்று அவரைத் தூக்கி வாரியவர்களாக வேடிக்கையாக 'இந்த அடிமையை வாங்குவார் யார்?' எனக் கூறினார்கள். 'யாரது? என்னை விட்டுவிட்டுங்கள்!' என சஹாபி ஜாஹிர் கூறியவர்களாக திரும்பிப் பார்த்தபோது ஈருலக இரட்சகர் எம்பெருமானார் (ஸல்) அங்கு நிற்பதைக் கண்ட அவர்கள், 'யா ரசூலல்லாஹ்! என்னைப் போன்ற அடிமையை வாங்குபவர் நஷ்டம் அடைவார்!' என வேடிக் கையாகவே பதில் கூறினார்கள்.

20. குழந்தைகளுடன் கொண்ட அன்பு

245) கருணையின் தாயகம் அன்பு நாயகம் (ஸல்) அவர்கள் குழந்தைகளின் மீது அலாதியான பிரியமுடன் நடந்து கொள்வார்கள். அவர்கள் மீது அளவில்லா அன்பு

காட்டுவார்கள். குழந்தைகளின் தலையை தம் கைகளால் தடவிக் கொடுப்பார்கள். அவர்களை முத்தமிடுவார்கள். அவர்களின் ஹக்கில் நலவான துஆக்களைச் செய்வார்கள்.

246) சிறு குழந்தைகள் சமீபித்து வந்தால் அவர்களை தங்களுடைய மடியில் உட்கார வைத்துக் கொள்வார்கள். மிக்க பரிவு பாசத்துடன் அவர்களுக்கு விளையாட்டுக் காட்டு வார்கள். சில சமயம் அக்குழந்தைகளுக்கு முன்பாக தம் முபாரக்கான நாவை வெளிப்படுத்திக் காட்டுவார்கள். அதைக் கண்டு குழந்தை சந்தோஷமடைந்து விளையாடும். படுத்திருக்கும் போது குழந்தையை சிலவேளை பாதங்களின் மீதும், சில சமயம் தம் முபாரக்கான நெஞ்சின் மீதும் உட்கார வைத்துக் கொள்வார்கள்.

247) குழந்தைகளுக்கு விளையாட்டு காட்டும் போது அண்ணர், 'கர்கஹ்! கர்கஹ்! Fபி அய்னி குல்லி பக்கஹ்' எனச் சொல்லிச் சொல்லி விளையாடுவார்கள். இச் சொற் களை குழந்தைகளுக்கு விளையாட்டுக் காட்ட பயன்படுத்தி யிருக்கலாம்.

248) பல குழந்தைகள் ஓரிடத்தில் சேகரமாகியிருந் தால் அண்ணர் அக்குழந்தைகளை ஒரு வரிசையில் நிறுத்தி விட்டு தம்முடைய இரு கைகளையும் அகல விரித்து அமர்ந்த வர்களாக அவர்களை நோக்கி 'நீங்கள் ஓடி என்னிடம் வரவும். எந்த குழந்தை எல்லோரை விட முதலில் எம்மைத் தொடுமோ அதற்கு இன்ன இன்ன பொருள் தருவேன்' என அருள்வார்கள். குழந்தைகள் ஓடி அண்ணரிடம் வரும். வந்த குழந்தைகளில் ஒன்று அவர்களின் வயிற்றின் மீது விழும். மற்றொரு குழந்தை நெஞ்சின் மீது வந்து விழும். அவ்வாறு விழுந்தவர்களை கட்டி அணைத்து முத்தமிடுவார்கள்.

249) குழந்தைகளிடம் எப்போதும் வினயமாக பேசு வார்கள். ஹஜ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் (குழந்தையாய் இருந்தபோது) 'ஏ இரண்டு காதுள்ளவரே!' என்றழைப்பார் கள்.

250) ஹஜ்ரத் அப்துல்லாஹ் இப்னு பஷீர் (ரலி) அறிவிப்பது : (நான் சிறுவயதினனாய் இருந்தபோது) என் தாயார் திராட்சைக்குலை ஒன்றை என் வசம் கொடுத்து அதனை ரசூல் (ஸல்) அவர்களுக்குக் கொடுத்துவரும்படி பணித்தார்கள். நான் அதனைப் பெற்றுக் கொண்டு செல்லும் போது இடைவழியில் என் எண்ணம் கெட்டு விட்டது. எனவே நான் அதனைச் சாப்பிட்டு விட்டேன். பிறகு என் தாயார், நபி (ஸல்) அவர்களைச் சந்தித்தபோது அந்த திராட்சைகுலை அன்னாரிடம் வந்து சேர்ந்ததா? என விசாரித்தார்கள். அதற்கு அன்னார் இல்லை என்றனர். என் தாயாரும், நபி (ஸல்) அவர்களும் நான் வழியிலேயே அதனை சாப்பிட்டிருப்பேன் என்பதை புரிந்து கொண்டார்கள். அது முதல் நபி (ஸல்) அவர்கள் என்னை வழியில் பார்க்க நேர்ந்தபோதெல்லாம் என் காதுகளைப் பிடித்து ''யா கத்ர்! யா கத்ர்!!—ஏ ஏமாற்றுபவரே! ஏ ஏமாற்றுபவரே!!'' எனக் கூறக் கூடியவர்களாக இருந்தனர்.

21. சபையின் ஒழுக்கம் பற்றி!

251) நபி (ஸல்) அவர்கள் ஜனங்கள் சடைவு அடைந்து விடக் கூடாது என்பதற்காக மஜ்லிசை சுருக்கமாக செய்து முடித்து விடுவார்கள்.

252) அன்னாரின் சபையில் வருகை தரக் கூடிய யாருக்காவது அன்னார் கண்ணியமளிக்க நாடினால் வந்தவருக்காகத் தமது மேற் போர்வையை விரித்து விடுவார்கள்.

253) நபி (ஸல்) அவர்கள் ஏதேனும் சபையில் கலந்து கொண்டால் அச்சபையினர் தமது பேச்சு வார்த்தைகளை முடித்துக் கொள்ளாதவரை அவர்களின் உரையாடலில் தேவையின்றி இடைமறித்து தமது அபிப்பிராயத்தைக் கூற மாட்டார்கள்.

254) நபி (ஸல்) அவர்கள் சஹாபாக்களின் கூட்டங்களுக்குச் செல்வார்கள். எவரேனும் அவர்களுக்கு மரியாதை

செய்ய எழுந்து நின்றால் அதனை அவர்கள் விரும்ப மாட்டார்கள். நபியவர்களின் இத்தன்மையை உணர்ந்தசஹாபாக்கள், அன்னாரின் வருகை சமயம் எழுந்து நிற்க மாட்டார்கள்.

255) நபி (ஸல்) அவர்கள் ஏதேனுமொரு சபையில் கலந்து கொண்டால் எங்கு சபையினரின் அமருதல் முடிவடையுமோ அங்கேயே அமருவார்கள். அவ்வாறு அல்லாமல் சபையின் மத்தியில் சென்று உட்கார ஒருக்காலும் முயற்சி செய்ய மாட்டார்கள்.

256) நபி (ஸல்) அவர்கள் சஹாபாக்களுடன் சேர்ந்து உட்காரும்போது ஏதேனும் தேவையின் நிமித் தம் வீட்டிற்கு செல்ல அவசியப்பட்டு, திரும்ப வருவதற்கான எண்ணம் இல்லாத பட்சத்தில் அன்னார் தமது காலணிகளை அணிந்து செல்வார்கள். மேலும் அன்னார் திரும்ப வந்து அமரும் நோக்கத்தோடு எழுந்து சென்றால் தங்களின் காலணிகளை சபை அருகே விட்டுச் செல்வார்கள். அது அன்னார் திரும்ப வருவார்கள் என்பதற் கான அடையாளமாகும்.

257) நபியவர்கள் சஹாபாக்களுடன் அமர்ந்திருக்கும் போது தம்முடைய முபாரக்கான முட்டுக் கால்களை கூட அமர்ந்திருப்பவர்களை விட முந்தவிட மாட்டார்கள். இதனால் தனித்தன்மை உண்டாகிவிடக் கூடாது என்பதே இதன் நோக்கம்.

258) சஹாபாக்கள் சபையில் அமர்ந்து உரையாடிக் கொண்டிருக்கும் போது நபி (ஸல்) அவர்களும், அவர்களுடன் கலந்து உரையாட ஆரம்பித்து விடுவார்கள்.

259) நபி (ஸல்) அவர்கள் தம்முடைய தோழர்களு டன் அமர்ந்து மறுமை விஷயமாக பேசிக் கொண்டிருப்பார் கள். ஆனால் மஜ்லிஸில் பிரசன்னமாயிருப்பவர்கள் பேசப்படும் விஷயத்தின் மீது கவனக் குறைவாக இருக்கின்றனர் அல்லது

சடைவு கொண்டுள்ளனர் என்பதனை (அவர்களின் முகக் குறியைக் கண்டு) உணர்ந்து கொண்டால் உடன் அப் பேச்சு வார்த்தைகளை மாற்றி ஏதேனும் துன்யா சம்பந்த மான பேச்சுகளை பேச ஆரம்பித்து விடுவார்கள். சபையினர் சந்தோஷமாக ஆகிவிட்டனர் என்பதை உணர்ந்ததும் மறு படியும் மறுமை விஷயமாக பேச ஆரம்பித்து விடுவார்கள்.

260) எவரேனுமொருவர் நின்ற நிலையில் ஏதேனு மொரு விஷயம் பற்றி கேள்வி கேட்டால் நபி (ஸல்) அவர் கள் அச்செயலை விரும்பமாட்டார்கள். மேலும் ஆச்சரிய மாக அவர் பக்கம் பார்ப்பார்கள்.

261) ஏதேனுமொரு முக்கிய விஷயமாக நபி (ஸல்) அவர்கள் பயான் செய்து கொண்டிருக்கும் போது அது சொல்லி முடிப்பதற்கு முன்பாக யாரேனும் வேறு ஒரு விஷயமாக கேள்வி கேட்டால் நபியவர்கள் தமது முந்தைய விஷய விளக்கத்தை தொடர்ந்து சொல்லிக் கொண்டிருப் பார்கள். அவர்களுடைய இச்செயல், அவர்கள் அம்மனித ருடைய கேள்வியை செவியுறவில்லை போலும் என்றே எண்ண வேண்டி இருக்கும். எப்பொழுது முந்தைய விஷயம் முடிவு பெறுமோ அப்பொழுது கேள்வி கேட்டவரிடம் அது பற்றி விசாரித்தறிந்து அதற்கேற்ற பதிலைக் கூறுவார்கள்.

262) நபி (ஸல்) அவர்கள் சஹாபாக்களின் சபையில் அனைவரின் நடுவில் அமர்ந்தால் சஹாபாக்கள் அன்னாரை சூழ வட்டமாக அமர்ந்து கொள்வார்கள். எனவே நபிய வர்கள் பேசினால் சில சமயம் இப்பக்கமாகவும், சில சமயம் அப்பக்கமாகவும் பேசுவார்கள். இதனால் சபையிலிருப்போர் அனைவரும் பேசும் போது அவர்களின் முபாரக்கான திரு முகத்தைக் காணுவார்கள்.

263) "(ஒரு சபையில்) மூவர் இருப்பின் ஒருவரை விட்டு மற்றிருவரும் தமக்குள் இரகசியம் பேசலாகாது. ஏனெனில் நிச்சயம் இது மூன்றாமவரைத் துக்கத்தில் ஆழ்த்தி

விடும்'' என நபி (ஸல்) அவர்கள் கூறினர்.

(இப்னு உமர் (ரலி); புகாரி, முஸ்லிம்)

264) அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தமக்காக (சபையினரில்) யாரும் எழுந்து நிற்பதை விரும்ப மாட்டார்கள்.

265) 'உங்களில் எவரும் சபையில் வீற்றிருப்பவரை எழுந்திருக்கச் செய்து அங்கு அமர வேண்டாம். எனினும் நீங்கள் நெருங்கி அமர்ந்து இடத்தை விசாலமாக்கி (அவருக்கு இடம்) அளியுங்கள். அல்லாஹ்வும் உங்களுக்கு விசாலமாக்கி வைப்பான்' என நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்.

(இப்னு உமர் (ரலி); புகாரி, முஸ்லிம்)

266) ஒருவர் தம் முதுகுக்குப் பின் இடது கையை வைத்து உள்ளங் கையைச் சுவரில் படிய வைத்து சாய்ந்து அமர்ந்திருப்பதைக் கண்ட அண்ணல் நபி (ஸல்) அவர்கள் 'நீர் இறைவனின் கோபத்திற்கு ஆளானவர்கள் அமர்வதைப் போன்று அமர்ந்திருக்கின்றீரா?' என வினவினர்.

(அபூதாவூத்)

267) அன்னார் சபையிலிருந்து எழும்போது,

سُبْحَانَكَ اللّٰهُمَّ وَبِحَمْدِكَ أَشْهَدُ أَنْ
لَا إِلٰهَ إِلَّا أَنْتَ أَسْتَغْفِرُكَ وَأَتُوبُ إِلَيْكَ ط

என்ற துஆவை ஓதுவார்கள்.

22. நோய் விசாரித்தலின் மேலான வழிமுறை

268) நபி (ஸல்) அவர்கள் நோய் விசாரிக்கச் செல்வார்களானால் நோயாளியின் நெற்றியின் மீதும், நாடியின் மீதும் தம்முடைய திருக்கரத்தை வைத்து நோயாளியிடம் ஏதேனும் சாப்பிட தேவையா என விசாரிப்பார்கள். அவர் சாப்பிடக் கேட்டால் அவருக்காக அதனைத் தருவித்துக் கொடுப்பார்கள். மேலும், 'நோயாளி எதனைக் கேட்பாரோ அதனை அவருக்குக் கொடுங்கள்' என்றும் அருளுவார்கள்.

269) நபி (ஸல்) அவர்கள் நோயாளியின் தலைமாட்டில் அமர்ந்து 'உமது உடல் நிலை எவ்வாறு உள்ளது?' என விசாரிப்பார்கள்.

270) ''நோயுள்ளவரை விசாரிக்க எவர் மாலையில் செல்கிறாரோ அவருடன் எழுபதாயிரம் மலக்குகள் புறப்பட்டுச் சென்று அவருக்காக விடியும் வரை பாவ மனிப்புக் கோருகின்றனர். மேலும் அவருக்கு சுவனபதியில் ஒரு சோலையும் ஒதுக்கப்பட்டு விடுகிறது. அன்றி எவர் காலையில் செல்கிறாரோ அவருடன் எழுபதாயிரம் மலக்குகள் புறப்பட்டுச் சென்று அவருக்காக மாலைவரை பாவமன்னிப்புத் தேடுகின்றனர். மேலும் அவருக்காக சுவனத்தில் ஒரு சோலை ஒதுக்கப் பட்டு விடுகிறது'' என நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்.
(திர்மிதீ)

மற்றொரு ஹதீஸில் ''நோயாளியை விசாரிக்க எவர் செல்வாரோ அவர் திரும்பும் வரை சுவர்க்க கனிகளைப் பறித்துக் கொண்டிருப்பவராவார்'' என வந்துள்ளது.
(முஸ்லிம்)

பிறிதொரு ஹதீஸில் 'ஒருவர் அழகான முறையில் ஒலுச் செய்து தம் சகோதர நோயாளியை நன்மை நாடி விசாரிக்கச் செல்வாரானால் அவருக்கும் நரக நெருப்புக்கும் இடையில் எழுபது ஆண்டுத் தொலை தூரம் ஏற்படுத்தப் பட்டு விடும்' என வந்துள்ளது. (அபூதாவூத்)

271) நோயாளியை விசாரிக்கச் செல்லும்போது அதிக நேரம் அங்கு தங்கி இருக்காமலும், இரைந்து சப்தமிடாமலும் இருப்பது சுன்னத் ஆகும். (ரஜீன்)

272) நபியவர்கள் நோயாளியிடம் அமர்ந்து அவருக்கு ஆறுதல் அளிப்பார்கள். அவருடைய உடல் நலனுக்காக துஆச் செய்வார்கள். அது சமயம் கீழ்க்காணும் துஆவை ஓதுவார்கள் :

لَا بَأْسَ طَهُوْرٌ اِنْ شَاءَ اللّٰهُ لَا بَأْسَ طَهُوْرٌ
اِنْ شَاءَ اللّٰهُ اَللّٰهُمَّ اشْفِهِ اَللّٰهُمَّ عَافِهِ

லாBபஃஸ தஹூருன் இன்ஷா அல்லாஹு லாபஃஸ தஹூருன் இன்ஷா அல்லாஹு அல்லாஹும் மஷ்பீஹி அல்லாஹும்ம ஆFபிஹி.

கருத்து :- ஒன்றும் கவலைப்பட வேண்டியதில்லை! இன்ஷா அல்லாஹ் (இந்த நோய் உமது பாவத்தைப் போக்கி) பரிசுத்தமாகி விடும். இன்ஷா அல்லாஹ் பரிசுத்தப்படுத்தி விடும். யா அல்லாஹ்! இவரைக் குணப்படுத்தி இவரை நலமாக்கி விடு!

273) நபியவர்கள் நோயாளியின் நெற்றியிலோ அல்லது வலியுள்ள இடத்திலோ தமது திருக்கரத்தை வைத்து,

اَذْهِبِ الْبَأْسَ رَبَّ النَّاسِ وَاشْفِ اَنْتَ
الشَّافِيْ لَا شِفَاءَ اِلَّا شِفَاؤُكَ شِفَاءً لَا
يُغَادِرُ سُقْمًا

அத்ஹிபில் Bபஃஸ ரப்பன்னாஸி வஷ்Fபி அன்தஷ் ஷாFபி லாஷிFபாஅ இல்லா ஷிபாவுக்க ஷிபாஅல் லாயுஙாதிரு ஸுக்மன்.

கருத்து : மனிதர்களின் இரட்சகனே! கஷ்டத்தைத் தூரமாக்கி சுகத்தை அளிப்பாயாக! நீதான் சுகமளிப்பவன். உனதுசுகமளிப்பதைத் தவிர்த்து வேறு சுகமில்லை. சிறிதளவும் வியாதியற்றுப் போகும் சுகத்தை அளிப்பாயாக!

274) நோயாளியை உடல் நலன் விசாரிக்கச் செல்லும் போது நபி (ஸல்) அவர்கள் அவரருகே அமர்ந்து ஏழுமுறை 'அஸ்அலுல்லாஹல் அளீம் ரப்பல் அர்ஷில் அளீமி அய்யஷ் Fபீயக' என ஓதுவார்கள்.

கருத்து : உமக்குச் சுகம் தரவேண்டிய மகத்தான அர்ஷுடைய இரட்சகனை மகத்துவமிக்க அல்லாஹ்விடம் நான் வேண்டுகிறேன்.

23. புதுப் பழம் சமர்ப்பிக்கப்படும்போது

275) நபியவர்களின் சமூகத்தில் அப்பருவத்தின் புதுப்பழம் சமர்ப்பிக்கப்படுமானால் அதனை அன்னார் தமது கண்களிலும் உதடுகளிலும் வைத்து,

اَللّٰهُمَّ كَمَا اَرَيْتَنَا اَوَّلَهُ اَرِنَا اٰخِرَهُ

என்று ஓதியபின்னர் தமது சமூகத்தில் பிரசன்னமாயிருப்பவர்களில் எல்லோரையும் விட சிறிய வயதுடைய குழந்தைக்கு அதனை முதலில் அளித்து விடுவார்கள்.

24. வீட்டில் நுழைவதற்கான அனுமதி

276) நபி (ஸல்) அவர்கள் தமது வீட்டில் இருக்கும் போது எவரேனும் சந்திக்க வந்து பொதுவான சம்பிரதாயப் படி 'உள்ளே வரலாமா?' எனக் கேட்டால் நபி (ஸல்) அவர்கள் தமது ஊழியரை நோக்கி 'சென்று அம்மனிதருக்கு வீட்டினுள் வருவதற்கான ஒழுங்கு முறையைக் கற்றுத் தருவீராக! முதற்கண் ஸலாம் கூறி பிறகு வீட்டினுள் வருவதற்கான அனுமதி கோர வேண்டும் என்று அவருக்குச் சொல்வீராக!' எனப் பணித்தார்கள்.

277) எவரேனும் அனுமதி பெறாமலே உள்ளே அன்னாரின் சமூகத்தில் வந்து விட்டாலும் உடன் நபியவர்கள் அவரை திருப்பி அனுப்பி விடுவார்கள். மேலும் அவரிடம், 'திரும்பிச் செல்லும். சலாம் கூறி பிறகு உள்ளே வரவும்' எனக் கட்டளையிடுவார்கள்.

278) எவரேனும் அன்னாரிடம் உள்ளே வர அனுமதி கோரினால் வழமைப்படி 'யாரது?' என விசாரிப்பார்கள்.

வந்தவரும் பொதுவான வழக்குப்படி 'நான்' என பதிலளித்தால் அண்ணருக்கு அத்தகைய பதில் மிகவும் வெறுப்பளிக்கும். உடன் 'நான்! நான்! என்று என்ன சொல்கிறீர்? உமது பெயரை ஏன் கூறுவதில்லை?' எனக் கேட்பார்கள்.

279) யார் மூலமாவது ஒருவரை நபியவர்கள் அழைத்திருந்தால், அம்மனிதரும் அழைக்க வந்தவருடன் சேர்ந்து அனுமதியின்றியே வீட்டில் நுழைந்து வந்து விட்டால் அதனை அண்ணர் தீயதாக எண்ண மாட்டார்கள்.

280) ஒருக்கால் நபி (ஸல்) அவர்கள் தாமே எவரை யாவது சந்திக்கச் சென்றால், மூன்று முறை வாசலிலிருந்து சலாம் கூறி உள்ளே வர அனுமதி கோருவது அண்ணரின் வழக்கமாக இருந்தது. மூன்று சலாமுக்கு பிறகும் பதில் கிடைக்காவிட்டால் திரும்பி வந்து விடுவார்கள்.

281) நபி (ஸல்) அவர்கள் ஒருபோதும் கதவின் முன்னால் நின்று கொண்டு உள்ளே வருவதற்கான அனுமதி கோரமாட்டார்கள். மாறாக கதவிற்கு வலது புறமோ அல்லது இடதுபுறமோ நின்றவர்களாக சலாம் கூறுவார்கள். பிறகே உள்ளே வருவதற்கான அனுமதி கோருவார்கள். இது தான் அண்ணர் மேற்கொண்ட உயர் பண்பாடாகும்.

25. பொது வாழ்வின் நடைமுறைகள்

282) அண்ணரின் காதில் எவரேனும் செய்தி கூறினால் தமது முபாரக்கான தலையை அவர் வாயை விட்டும் அகற்றிக் கொள்வதில்லை. எதுவரையென்றால் அம்மனிதரே செய்தியை கூறி முடித்து தமது வாயை அகற்றாத வரை.

283) எவரேனும் முஸாபஹா செய்ய அண்ணரின் கையைப் பிடித்தால் சுயமே அவரே தம்முடைய கையை விலக்கிக் கொள்ளாதவரை அவருடைய கையை நபியவர்களும் விடுவதில்லை.

284) எவரேனும் பேசுவதற்காக அன்னாரை முன்னோக்கினால் அவரே தம்முடைய முகத்தைத் திருப்பிக் கொள்ளாத வரை நபியவர்களும் தம் முபாரக்கான வதனத்தை அவரை விட்டும் திருப்பிக் கொள்வதில்லை.

285) எவரேனும் புத்தாடை உடுத்தி அன்னாரின் சமூகத்தில் பிரசன்னமானால் நபியவர்கள் அவரை புகழ்வார்கள். மேலும் அவரை நோக்கி "ஹசனதுன்-ஹசனதுன்— மிகவும் நன்றாக இருக்கிறது-மிகவும் நன்றாக இருக்கிறது" என மொழிந்து பிறகு 'அப்லி வ அக்லிகு' என்பார்கள்.

286) தம்முடைய அன்பு அன்யோன்யத்தை காட்டும் வகையில் சிலருடைய பெயரை சுருக்கி அழைப்பார்கள். உதாரணமாக அபூஹுரைரா என்பதற்கு 'அபாஹுர்' என்பார்கள்.

287) சில சமயம் எவருடைய வாயிலிருந்தாவது அடக்கமில்லாத வார்த்தை வெளிப்பட்டு விட்டாலோ அல்லது அவரிடமிருந்து மரியாதைக் குறைவான செயல் வெளிப்பட்டு விட்டாலோ நபியவர்கள் ஒருபோதும் அம்மனிதருடைய பெயர் சொல்லி அவரை எச்சரித்ததில்லை. மாறாக அன்னாரின் மேலான வழக்கம் யாதென்றால் ஒரு பொதுப்படையான பேச்சாக, 'ஜனங்களுக்கு என்ன நேர்ந்து விட்டது. அவர்கள் இவ்வாறு கூறுகின்றனர். அல்லது இவ்வாறு செய்கின்றனர்' என்று அருளி விடுவார்கள்.

288) ஒருவர் தீனுடைய விஷயத்தில் பிடித்தமில்லாத செயலைப் புரிந்து விட அன்னாருக்கு அவர் செயலின் மீது வெறுப்பு ஏற்பட்டு விடின் அதனை அன்னார் வெளிப்படுத்த இரண்டு முறைகளைக் கையாள்வார்கள். ஒன்று அம்மனிதர் தம்மிடம் வரும்போது தமது திருமுகத்தை அவர் பக்கலிலிருந்து திருப்பிக் கொள்வார்கள். அல்லது அவருடைய சலாமை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

289) பாதையில் நபியவர்கள் எவரையாவது சந்திக்க நேரிட்டால் அன்னார் சலாம் சொல்வதில் முந்திக் கொள்வார்கள்.

290) வழியின் கடமைகள் என்ன? என சஹாபாக்கள் கேட்டதற்கு நபி (ஸல்) அவர்கள் 'பார்வையைத் தாழ்த்தி, பிறருக்குத் துன்பமளிக்காதிருந்து ஸலாத்திற்கும் மறுமொழி பகர்ந்து நல்லதை ஏவி தீமையைத் தடை செய்து வர வேண்டும்' என நவின்றூர்கள்.

(அபூஸயீதில் குத்ரி (ரலி); புகாரி, முஸ்லிம்)

291) ''துன்பத்திற்குள்ளானவருக்கு உதவி புரிந்து, வழி தப்பியவருக்கு வழியை அறிவித்து வாருங்கள்'' என அருளியுள்ளார்கள்.

292) எவருக்கேனும் செய்தி சொல்லி அனுப்பினுல் அவருக்கு தம்முடைய சலாமை எத்தி வைக்குமாறு கட்டாயம் சொல்லி அனுப்புவார்கள்.

293) பிறருடைய சலாம் அன்னுருக்கு எத்தி வைக்கப் படுமானுல் சலாம் சொல்லி அனுப்பியவருடன் சலாம் எத்தி வைப்பவருக்கும் சலாமிற்கு பதில் கூறுவார்கள். அதனை 'அலைக்க வஅலா ஃபலானின் சலாம்'' என மொழிவார்கள். (ஃபாலன் என்னும் இடத்தில் சலாம் சொல்லி அனுப்பிய வருடைய பெயரை மொழிய வேண்டும்.)

294) நபி (ஸல்) அவர்களின் உடையின் மேலிருந்தோ அல்லது உடலின் மேலிருந்தோ எவரேனுமொருவர் விழுந் திருக்கும் ஏதேனுமொரு வஸ்துவை (உதாரணமாக தூசி, சிலந்தி வலை, மண் அல்லது வேறு ஏதேனும் பொருளை) அகற்றி விடுவாரானுல் அகற்றிய அம்மனிதருக்கு நன்றி தெரிவித்து பிறகு முபாரக்கான சொற்களைக் கொண்டு அவருக்காக துஆச் செய்வார்கள்.

مَسَحَ اللّٰهُ عَنْكَ مَا تَكْرَهُ

கருத்து :—அல்லாஹ் உம்மைவிட்டும் பிரியமில்லாத அரு வருப்பான விஷயங்களை அகற்றி விடுவானாக!

295) எவருடைய பெயராவது தெரியாத பட்சத்தில் அவரை அழைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால் 'யா இப்னு அப்தில்லாஹ்' (ஏ அல்லாஹ்வின் அடியாரின் மகனே) என அழைப்பார்கள்.

296) யாராவதொரு தேவையுடையவர் அன்னாரின் சமூகத்தில் ஆஜராகிய பின்னர் அவரே எழுந்து செல்லாத வரை, அவருடைய திருப்திக்காக நபியவர்கள் எழுந்து விட மாட்டார்கள்.

297) ஒருக்காலும் உரையாடுபவரின் பேச்சில் இடை மறித்துப் பேச மாட்டார்கள். ஆனால் பேசக்கூடியவர் சத்தியத்திற்கு புறம்பாகப் பேசினால் ஒன்று அவரை பேச விடாது தடுத்து விடுவார்கள்; அல்லது தாமே எழுந்து நின்று விடுவார்கள்.

298) நபி (ஸல்) அவர்கள் தோழர்களிடமிருந்து வரும் அன்பளிப்புகளை நிச்சயம் ஏற்றுக் கொள்வார்கள். ஆனால் அதற்கு பகரம் திரும்ப அளிக்கவும் முயற்சிப்பார்கள்.

299) இரவில் எவரிடமாவது செல்வார்களேயானால் எவ்வளவு சப்தமிட்டு சலாம் கூறுவார்கள் என்றால் அந்த சலாமுடைய சப்தத்தை விழித்திருப்பவர் கேட்டுக் கொள்வார். ஆனால் தூங்கிக் கொண்டிருப்பவரின் தூக்கம் கலையாது.

300) சந்திப்பின் போது அன்னார் சில சமயம் முஸாபஹா செய்வார்கள். சில சமயம் முஆனகாவும் (கட்டி அணைத்தல்) செய்வார்கள். மேலும் சில சமயம் நெற்றியில் முத்தமிடவும் செய்வார்கள்.

301) நபி (ஸல்) அவர்கள் தமது தோழர்களிடமிருந்து எவருடைய கண்ணாவது நோயுறுவதைக் கண்டால் கீழ்க் காணுமாறு ஓதுவார்கள் :

مَتِّعْنِي بِبَصَرِي وَاجْعَلْهُ الْوَارِثَ مِنِّي وَأَرِنِي فِي الْعَدُوِّ
ثَأْرِي وَانْصُرْنِي عَلَى مَنْ ظَلَمَنِي

கருத்து : யா அல்லாஹ்! எனது கண்பார்வையை எனக்கே பயனுள்ளதாகி வை. இன்னும் அதை எனக்கு வாரிசாக்கி வை. இன்னும் அதை பகைவர் முன் பலமுள்ளதாக்கி வை. மேலும் எனக்கு உதவி செய்தருள். என்மீது அநியாயம் செய்தவருக்கு எதிராக எனக்கு வெற்றியை நல்கு.

302) நபியே கரீம் (ஸல்) அவர்கள் எவருடையதேனும் குற்றம் மன்னிக்கப்பட்டு விட்டது என்பதற்கான அடையாளமென்னவென்றால் நபியவர்கள் தமது முபாரக்கான தலைப்பாகையை அம்மனிதரிடம் அனுப்பி வைத்து விடுவார்கள்.

303) கண்ணியமிக்க விருந்தாளியை உபசரிப்பதில் தாமே முன் நின்று கண்ணியப்படுத்துவார்கள்.

304) உணவுப் பதார்த்தங்கள் வருமானால் ஒருக்காலும் தனியாக அதனை உண்ணமாட்டார்கள். மாறாக அங்கு பிரசன்னமாய் இருப்பவர்களையும் சாப்பிட தம்மோடு அழைத்துக் கொள்வார்கள். அங்கு பிரசன்னமில்லாதவரின் பங்கை கட்டாயம் எடுத்து வைத்து விடுவார்கள்.

305) வழியில் எவருடையகையைப் பிடித்தாலும் பிறகு மறுபடியும் பிரியும்போது,

رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً وَفِي الْآخِرَةِ حَسَنَةً
وَقِنَا عَذَابَ النَّارِ

என ஓதுவார்கள்.

306) எவருடைய கடனுவது திருப்பிஞல் அவருடைய ஹக்கில் பின்வருமாறு துஆச் செய்வார்கள்:

بَارَكَ اللهُ لَكَ فِيْ أَهْلِكَ وَمَالِكَ إِنَّمَا جَزَاءُ السَّلَفِ الْحَمْدُ وَالْأَدَاءُ

307) சிலசமயம் சிலரை அவருடைய அடையாளத்தைக் கொண்டே அழைப்பார்கள். ஒரு முறை ஒரு மனிதர் செருப்பு அணிந்து கொண்டு கப்ருகளின் மீது நடமாடிக் கொண்டிருந்தார். அதைக் கண்ட நபியவர்கள் அவரைத் தடுத்தார்கள். மேலும் 'ஏ செருப்புக்காரரே! செருப்பைக் கழற்றவும்!' என மொழிந்தார்கள்.

308) அசந்தர்ப்பவசமாக யாருக்கேனும் தம்மால் ஏதேனும் சிரமம் ஏற்பட்டால், அந்தச் சிரமம் ஏற்பட்டவருக்கு தம்மிடம் அதற்கான பழி தீர்த்துக் கொள்வதற்கான உரிமையை அளிப்பார்கள். சில சமயம் அச்சிரமத்திற்கு பகரமாக அவருக்கு ஏதேனும் சன்மானம் அளித்து விடுவார்கள்.

26. பல்வேறு அம்சங்கள்

309) உட்காருவதில் நபியவர்களின் பழக்கம் பல விதமாக இருந்தது. 1) சில சமயம் கால்களை குத்த வைத்து உட்காருவார்கள். 2)சில சமயம் உட்கார்ந்து தமது இருகைகளாலும், கால்களின் இரு முட்டுக்களையும் வளைத்துப் பிடித்து உட்காருவார்கள். 3) சில சமயம் கைகளை சுற்றி வளைத்து பிடிப்பதற்கு பதிலாக ஒரு துணியை முட்டுக் கால்களை சுற்றி கட்டிக் கொள்வார்கள்.

310) உட்கார்ந்த நிலையில் கையை ஊன்றிக் கொள்வார்கள். பொதுவாக இடதுபுறம் இடது கை மீது சாய்ந்து உட்காருவார்கள்.

311) சில சமயம் உல்லாசமாக கிணற்றில் கால்களை தொங்க விட்டுக் கொண்டு குதி கால்களை விரித்து உட்காருவார்கள்.

312) **ஆடுகளின் எண்ணிக்கை :** நபி (ஸல்) அவர்களிடம் 100 ஆடுகள் இருந்தன. அவற்றின் எண்ணிக்கை நூறை விட அதிகரிப்பதை அன்னார் விரும்பவில்லை. எனவே அவற்றின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது அவற்றில் இருந்து ஒன்றைப் பிடித்து அறுத்து விடுவார்கள். அதனால் அந்த நூறு என்ற எண்ணிக்கை மீதமிருக்கும்.

313) **மஸ்ஜிதில் ஏஃலான் செய்தல் :** எந்த ஒரு மனிதராவது தனது காணமற் போன பொருளைப் பற்றி (அது மஸ்ஜிதிற்கு வெளியில் காணமற் போயிருக்க) மஸ்ஜிதில் அறிவிப்புச் செய்தால் நபி (ஸல்) அவர்கள் அதைக் கேட்டு கோபப்படுவார்கள். மேலும் இவ்வாறு கூறுவார்கள் :

لَا رَدَّ اللّٰهُ عَلَيْكَ ضَالَّتَكَ

கருத்து : ''உனது காணமற்போன வஸ்துவை அல்லாஹ் திரும்பக் கிடைக்கச் செய்யாமலிருப்பானாக!''

314) **புன்முறுவல்:** நபி (ஸல்) அவர்கள் புன்முறுவலிப் பார்களேயன்றி ஒருபோதும் வாய் விட்டு சிரித்தார்களில்லை. அன்னார் அதிகமாகச் சிரித்தால் பற்கள் சிறிது தெரியுமே தவிர ஒருக்காலும் வெளியில் தெரியாது.

315) **அன்னாரின் அழுகை :** எவ்வாறு சிரிப்பின்போது சப்தம் வெளியே வராதோ அவ்வாறே அழுகையிலும் சப்தம் வெளி வராது. மாறாக நீண்ட மூச்சு விட்டு கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோட ஆரம்பித்து விடும். அத்துடன் நெஞ்சிலிருந்து ஒரு சட்டி வேகும்போது ஏற்படும் சப்தத்தைப் போன்று அல்லது திருகையின் சப்தம் போன்று சப்தம் வர ஆரம்பிக்கும். நபி (ஸல்) அவர்களே தமது அழுகையைப் பற்றி விவரிக்கின்றார்கள் :

تَدْمَعُ الْعَيْنُ وَيَحْزَنُ الْقَلْبُ وَلَا نَقُولُ اِلَّا مَا يَرْضَى رَبُّنَا

கருத்து :— கண்கள் கண்ணீர்சிந்துகின்றன. உள்ளம் துக்கித்து இருக்கிறது. மேலும் எதைக் கொண்டு நமது இறைவன் மகிழ்வடைகின்ருனே அதனையே நாவிலிருந்து யாம் வெளிப் படுத்துகிறேம்.

316) **துக்கத்தின்போது இருந்த நிலை :** நபி (ஸல்) அவர்களுக்கு துக்கமும், துயரமும் ஏற்படும் போது தமது முபாரக்கான கையைக் கொண்டு தலைமீதும் தாடியின் மீதும் அடிக்கடி தடவுவார்கள். முடிகளை பிடிப்பார்கள். சில சமயம் விரல்களால் அவற்றில் கோதுவார்கள். மேலும் 'ஹஸ்பி யல்லாஹு வ நிஃமல் வகீலு' என்றும் கூறிக் கொள்வார்கள்.

317) **மகிழ்ச்சியின்போது இருந்த நிலை :** நபி (ஸல்) அவர்கள் மகிழ்ச்சியின் போது தமது பார்வையை கீழ் நோக்கியதாக ஆக்கிக் கொள்வார்கள்.

318) **ஸதகா பொருளின் முக்கியத்துவம் :** எங்கிருந்தேனும் ஸதகாவின் பொருள் முதலியவை வருமாஞல் எது வரை அப்பொருளை அன்ஞர் ஏழைகளுக்கும் உரியவர்களுக்கும் பங்கிட்டுத்தர மாட்டார்களோ அதுவரை வீட்டிற்குச் செல்ல மாட்டார்கள்.

319) **வீட்டில் இருக்கும் நிலை :** அன்ஞர் வீட்டில் இருக்கும் வரை வீட்டு வேலைகளில் உதவியாய் இருப்பார்கள். வெறுமனே வேலையற்று சும்மா அமர்ந்திருக்க மாட்டார்கள். வீட்டின் மிகச் சாதாரணத்திலும் சாதாரண வேலையையும் செய்வதில் அவர்களுக்கு எந்தவித சங்கோஜமும் இருக்கவில்லை. உதாரணமாக பாலைக் கறப்பார்கள். பிராணிகளுக்கு இரை போடுவார்கள். துணிகளுக்கு ஒட்டு வைத்து தைத்து விடுவார்கள். தமது காலணிகளை தாமே தைத்துச் சரி செய்து கொள்வார்கள். வேலையாளுடன் சேர்ந்து மாவரைத்து விடுவார்கள்.

3 20) **பஜாரிலிருந்து பொருட்களை வாங்கி வரவும் தயங்கியதில்லை:** பஜாரிலிருந்து பொருட்களை வாங்கி வருவதிலும் நபி (ஸல்) அவர்கள் தயங்கியதில்லை. தாமே பஜார் சென்று தேவையான பொருள்களை வாங்கி துணியில் கட்டி எடுத்து வருவார்கள்.

3 21) **மழையின் முதல் துளிகள் :** மழை பெய்ய ஆரம்பித்ததும் நபி (ஸல்) அவர்கள் தமது கீழாடையைத் தவிர மற்ற ஆடைகளைக் கழற்றிவிட்டு மேல் உடலை மழை நீரால் நனைய விடுவார்கள்.

3 22) **கடிதம் எழுதுவதில் மேற்கொண்ட வழமை :** கடிதம் எழுத வைப்பதில் அன்னாரின் மேலான வழிமுறை வருமாறு: ஆரம்பத்தில் பிஸ்மில்லாஹ்விற்குப் பிறகு முதலில் கடிதம் எழுதுபவரின் பெயரையும் பிறகு கடிதம் யாருக்கு எழுதப்படுகிறதோ அவருடைய பெயரையும் எழுதச் செய்த பிறகே கடிதத்தின் செய்தியை வரையச் செய்வார்கள்.

3 23) **வலது, இடது கையை பயன்படுத்துவது :** அசுத்தத்தைக் கழுவும் வேலைக்காக—கையில் அசுத்தம் ஒட்டிக் கொள்ளும் என்ற ஐயம் இருக்க—உதாரணமாக மூக்கைக் கழுவுதல் கால் கழுவுதல்—செருப்பு எடுத்தல் ஆகிய வேலைகளைத் தவிர மற்றெல்லா வேலைகளையும் வலது கையால் செய்வார்கள். அவ்வாறே அன்னார் ஏதேனும் ஒரு வஸ்துவை யாருக்காவது அளிப்பதாக இருந்தால் வலது கையால் கொடுப்பார்கள். அதே போல் ஏதேனும் வஸ்துவை யாரிடமிருந்தாவது பெறுவதாய் இருந்தால் வலது கையால் பெற்றுக் கொள்வார்கள்.

3 24) **கனவு விசாரிக்கும் ஆர்வம் :** சுப்ஹு தொழுகைக்குப் பிறகு கால்களை மடக்கி அமர்ந்தவர்களாக ஜனங்களிடம் அவர்கள் கண்ட கனவு பற்றி விசாரிப்பார்கள். கனவு கண்டவர்கள் தாங்கள் கனவை அவர்களிடம் உரைப்பார்கள். கனவு பற்றி கேட்பதற்கு முன்னதாக கீழ்க்காணுவதை ஓதுவார்கள் :

خَيْرِ تَلَقَّاهُ وَشَرٍّ تَوَقَّاهُ وَخَيْرٍ لَّنَا وَشَرٍّ لِأَعْدَائِنَا وَالْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ

325) குதிரை சவாரியை விரும்புவார்கள்: நபியவர்களுக்கு சவாரி செய்யும் பிராணிகளில் குதிரை மிகவும் பிரியமான தாக இருந்தது. அதனுடைய கண் வாய், மூக்கு ஆகிய வற்றை தமது (அஸ்தின்) சட்டைத் துணியால் துடைத்து சுத்தப்படுத்துவார்கள். அதனுடைய கழுத்து முடிகளை விரல் களால் கோதியவர்களாக ''நலவு இதனுடைய நெற்றியில் கியாமத் நாள் வரை பிணைக்கப்பட்டுள்ளது' என மொழி வார்கள்.

326) ஏதேனுமோர் இடத்தில் தங்க நாடினால் அந்த இடத்தின் பெயர் நல்லதாக இல்லாத பட்சத்தில் அன்னாரின் முகக்குறியில் வெறுப்பு அடையாளம் வெளிப்படும். அவ்வா றல்லாது அவ்விடத்தின் பெயரின் அர்த்தம் மகிழ்ச்சி, பரக் கத், வெற்றி என்பதாக இருக்குமானால் அன்னாரின் முகத்தில் மகிழ்ச்சியின் குறி வெளிப்பட்டு விடும். இதே போன்று ஒரு மனிதரின் பெயரின் அர்த்தம் சண்டை, சச்சரவு போன்று கெட்டதாக இருந்தால் அம்மனிதரிடம் தம்முடைய எவ்வேலை யையும் ஒப்படைக்க மாட்டார்கள். மாறாக தம் வேலையை எவருடைய பெயருக்கு அர்த்தம் வெற்றி, சந்தோஷம், மகிழ்ச்சி என்பதாக இருக்குமோ அப்படிப்பட்ட மனிதரிடம் கொடுக்க விரும்புவார்கள்.

327) நபி (ஸல்) அவர்கள் தோட்டங்களில் உல்லாச மாக செல்வதை பிரியப்படுவார்கள். சிற்சில சமயம் அதே போன்று தோட்டங்களுக்கு உல்லாசமாக செல்வார்கள்.

328) நபியவர்கள் சில சமயம் நீந்தவும் பிரியப்படுவார் கள். ஒரு முறை ஓர் ஏரியில் அன்னாரும் சில சஹாபாக்க ளும் நீச்சலடித்தார்கள். அன்னார் ஒவ்வொருவருடன் ஒருவரை

ஜோடி சேர்த்து விட்டார்கள். ஒருவர் தம்முடைய கூட்டாளியை நோக்கி நீந்திச் செல்ல வேண்டும். எனவே நபியவர்களுக்கு கூட்டாக ஹஜ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் நியமனமானூர்கள். நபியவர்கள் நீந்தியவர்களாக அவர்களிடம் சென்று அவர்களுடைய கழுத்தைப் பிடித்துக் கொண்டார்கள்.

27. விசேஷ துஆக்கள்

329) நபி (ஸல்) அவர்கள் சுப்ஹு நேரத்தில் இந்த துஆவை ஓதுவார்கள்:

أَصْبَحْنَا وَأَصْبَحَ الْمُلْكُ لِلّٰهِ وَالْحَمْدُ لِلّٰهِ لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ. رَبِّ اَسْئَلُكَ خَيْرَ مَا فِيْ هٰذَا الْيَوْمِ وَخَيْرَ مَا بَعْدَهٗ وَاَعُوْذُ بِكَ مِنْ شَرِّ مَا فِيْ هٰذَا الْيَوْمِ وَشَرِّ مَا بَعْدَهٗ رَبِّ اَعُوْذُ بِكَ مِنَ الْكَسَلِ وَسُوْءِ الْكِبَرِ رَبِّ اَعُوْذُ بِكَ مِنْ عَذَابٍ فِي النَّارِ وَعَذَابٍ فِي الْقَبْرِ.

330) மாலையானல் அஸ்பஹ்ஹு என்பதற்கு பதிலாக 'அம்ஸைனு' என கூறி மீதியை அவ்வாறே ஓதுவார்கள்.

331) நபி (ஸல்) அவர்கள் சூரியன் உதயமாகும் போது இந்த துஆவை ஓதுவார்கள்:

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ وَهَبَنَا هٰذَا الْيَوْمَ وَاَقَالَنَا فِيْهِ عَثَرَاتِنَا وَلَمْ يُعَذِّبْنَا بِالنَّارِ

332) நபி (ஸல்) அவர்கள் வீட்டை விட்டு வெளியேறும்போது ஓதும் துஆ:

بِسْمِ اللهِ تَوَكَّلْتُ عَلَى اللهِ اَللّٰهُمَّ اِنِّيْ اَعُوْذُ بِكَ مِنْ اَنْ نَزِلَّ
اَوْ نَزِلَّ اَوْ نَضِلَّ اَوْ نَظْلِمَ اَوْ يُظْلَمَ عَلَيْنَا اَوْ نَجْهَلَ اَوْ يُجْهَلَ
عَلَيْنَا.

333) பஜாரில் அன்ஞர் சென்ருல்,

بِسْمِ اللهِ اَللّٰهُمَّ اِنِّيْ اَسْئَلُكَ خَيْرَ هٰذِهِ
السُّوْقِ وَخَيْرَ مَا فِيْهَا وَاَعُوْذُبِكَ مِنْ شَرِّهَا وَشَرِّ
مَا فِيْهَا اَللّٰهُمَّ اِنِّيْ اَعُوْذُبِكَ اَنْ اُصِيْبَ فِيْهَا
يَمِيْنًا فَاجِرَةً اَوْ صَفْقَةً خَاسِرَةً (حصن)

என்று துஆவை ஓதுவார்கள்.

கருத்து :—அல்லாஹ்வின் திருநாமத்தைக் கொண்டு ஆரம்பிக்கின்றேன். யா அல்லாஹ்! நிச்சயமாக நான் உன்னிடம் இக்கடைத் தெருவின் நன்மையை வேண்டுகிறேன். இதிலுள்ள நலனேயும் வேண்டுகிறேன். இதன் தீங்கையும், இதிலுண்டாகும் தீங்கையும் விட்டு பாதுகாப்புத் தேடுகின்றேன். யா அல்லாஹ்! நான் இந்த கடைத்தெருவில் (விற்றல், வாங்கலில்) பாவமான சத்தியம் செய்வதை விட்டும், நஷ்டமான நடவடிக்கைகளை விட்டும் பாதுகாப்பு வேண்டிக் கொள்கிறேன்.

334) காற்று வேகமாக வீசினல் இதனை ஓதுவார்கள்:

اَللّٰهُمَّ اِنِّيْ اَسْئَلُكَ خَيْرَهَا وَخَيْرَ مَا فِيْهَا وَخَيْرَ مَا اُرْسِلَتْ بِهٖ
وَاَعُوْذُبِكَ مِنْ شَرِّهَا وَشَرِّ مَا فِيْهَا وَشَرِّ مَا اُرْسِلَتْ بِهٖ

335) இடிமுழக்கம் கேட்டால் நபியவர்கள் இந்த துஆவை ஓதுவார்கள்:

اَللّٰهُمَّ لَا تَقْتُلْنَا بِغَضَبِكَ وَلَا تُهْلِكْنَا بِعَذَابِكَ وَعَافِنَا قَبْلَ ذٰلِكَ۔

336) நபியவர்கள் வானத்தின் பக்கம் பார்வை செலுத்தினால் ஓதும் துஆ:

يَا مُصَرِّفَ الْقُلُوْبِ ثَبِّتْ قَلْبِيْ عَلٰى طَاعَتِكَ

337) நபி (ஸல்) அவர்கள் ஏதேனுமொரு கவ்மைக் கண்டு அஞ்சினால்,

اَللّٰهُمَّ إِنَّا نَجْعَلُكَ فِيْ نُحُوْرِهِمْ وَنَعُوْذُ بِكَ مِنْ شُرُوْرِهِمْ என ஓதுவார்கள். (ابو داود)

338) ஏதேனும் சிரமமான வேலை செய்ய வேண்டியிருந்தால், ''அல்லாஹும்ம லா ஸஹ்ல இல்லா மா ஜஅல்தஹு ஸஹ்லன், வ அன்த தஜ்அலுல் ஹுஸ்னு ஸஹ்லன் இதா ஷிஃத'' என ஓதுவார்கள்.

339) ஜும்மா நாளன்று மஸ்ஜிதில் நுழையும் போது வாசல் கதவைப்பிடித்தவர்களாககீழ்காணுமாறுஓதுவார்கள்:

اَللّٰهُمَّ اجْعَلْنِيْ أَوْجَهَ مَنْ تَوَجَّهَ إِلَيْكَ وَأَقْرَبَ مَنْ تَقَرَّبَ إِلَيْكَ وَأَفْضَلَ مَنْ سَأَلَكَ وَرَغِبَ إِلَيْكَ

340) குழந்தைகளை கண்திருஷ்டியிலிருந்தும் அல்லது ஷைத்தானின் கெடுதியிலிருந்தும் காக்க,

أُعِيذُكَ بِكَلِمَاتِ اللهِ التَّامَّةِ مِنْ كُلِّ شَيْطَانٍ وَهَامَّةٍ وَمِنْ كُلِّ عَيْنٍ لَامَّةٍ என்ற துஆவை ஓதுவார்கள்.

341) புதிய பிறை கண்டால் இவ்வாறு ஓதுவார்கள்:

اَللّٰهُمَّ أَهِلَّهُ عَلَيْنَا بِالْيُمْنِ وَالْإِيمَانِ
وَالسَّلَامَةِ وَ الْإِسْلَامِ وَالتَّوْفِيقِ
لِمَا تُحِبُّ وَتَرْضَى رَبِّيْ وَرَبُّكَ اللهُ

342) நபி (ஸல்) அவர்கள் ஏதேனும் கெட்ட செய்தி கேட்டால் ''அல்ஹம்து லில்லாஹி அலா குல்லி ஹாலின்'' என ஓதுவார்கள்.

343) ஏதேனும் நற்செய்தியை கேள்விப்பட்டால்,

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ بِنِعْمَتِهِ تَتِمُّ الصَّالِحَاتُ என ஓதுவார்கள்.

அச்சிட்டோர் :

பிரிண்டர்ஸ் & பப்ளிஷர்ஸ்

151, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை-600001

தொலைபேசி எண்: 5 1 0 1 5 2

பொருளடக்கம்

பொருளடக்கம்